www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 11/00

දිනමුරසු වාරමලර්

நவ.26–டிச.02,1995

# வாரமலர்
# தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 129



## யுத்தம்!
## வளைகுடாவும் வடபுலமும்
### தோன்றிவரும் தொடர்பு



தில்லானா
தில்லானா
தீப்.. தீப்தி!

புலிகள் தயாரித்த **விமானம்**



படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## எதற்கு மரியாதை?

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

தினசரி தொலைக்காட்சியில்
செய்திகளைப் பாருங்கள்.
உலகச் செய்திகளில்
சரிபாதிக்கும் மேலே
இரத்தம் சிந்தும் செய்திகள்தான்.

சமாதானம் பற்றிய பேச்சுக்கள்,
தலைவர்கள் கூடும் மாநாடுகள்
எல்லாம் ஒரு
சம்பிரதாயம் மாதிரிதான்.

நடைமுறையில்
இன மோதல்களும்
சமூகப் பிரிவுகளும்
உள்நாட்டுக் கலவரங்களுமே
உலக நடப்புக்களை
ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன.

காரணம் என்ன?
சிந்தித்துப் பார்த்தால்
சில உண்மைகள் தெரியும்.

நாலாயிரம் பேர் கூடி
உரத்துக் குரல் கொடுத்தாலும்
ஏறவேண்டிய செவிகளில்
ஏறுவதில்லை.

நாலுபேர் சேர்ந்து
நாசச் செயல் செய்தால்தான்
ஆள்வோரின் செவிகளிலும்
அயல்நாடுகளின் செவிகளிலும்
பரபரப்பாய் விழுகிறது.

விண்ணப்பங்களுக்கு
வழங்கப்படாத மரியாதை
வேட்டுச் சத்தங்களுக்கு
மிகச் சுலபமாகக் கிடைக்கிறது.

பல்லாயிரம் குரல்களுக்கு
இல்லாத மரியாதை
ஒரு சில துப்பாக்கிக்குழாய்களுக்கு
சுலபமாகக் கிடைத்துவிடுகிறது.

உரத்துச் சொன்னாலும்
எடுத்தெறியப்படும்போதுதான்
அடித்துச் சொன்னால் என்ன?
என்ற கேள்வி எழுகிறது.

சர்வதேச நடப்பில் மட்டுமா,
நம்நாடும் அதற்கு
நல்ல உதாரணமல்லவா?

மக்கள் பங்குகொண்ட
போராட்ட நடைமுறைகள்
மறுதலிக்கப்பட்டதால்தானே
ஆயுதங்களை அணிந்து கொண்ட
கொரில்லாக்கள் தோன்றி
அரங்குக்கு வந்தார்கள்!

அதன் தொடர்ச்சியும்
வளர்ச்சியும்தான் இன்று
விரிவடைந்துள்ள யுத்தம்.

ஆனாலும்-வரலாற்றிலிருந்து
கற்றுக்கொள்ளும் தேவை
கவனிக்கப்படவேயில்லை.

பாராளுமன்றத்திலும்-வெளியிலும்
தமிழ் கட்சிகள்
குரல் எழுப்புவது
பத்திரிகைச் செய்திகளாக
பதிவு செய்யப்படுகின்றன.
ஆளும் தரப்பின்
கவனத்தில் எடுக்கப்படுகிறதா?

ஜனநாயக நீரோட்டத்தில்
புலிகள் கலக்க வேண்டும்
என்ற கோரிக்கை
எழுப்பப்படுகிறதே தவிர
ஏற்கெனவே கலந்துவிட்ட
கட்சிகளின் கருத்துக்களுக்கு
காதுகொடுக்கப்படுகிறதா?

அழைப்பு விடுப்பது சுலபம்:
அணைத்துக் கொள்வதுதான்
நடைமுறையில் சிரமம்.

ஆயுதப் போராட்டத்தைக்
கைவிட்டால்
அலட்சியப்படுத்தப்படுவோம்
என்ற உணர்வு ஏற்படலாம்.
ஜனநாயக வழிக்கு
வந்தோரின் கருத்துக்களை
அரசு கவனிக்க வேண்டும்.

வன்முறைக்கு முடிவு கட்டுவது
மென்முறைகளுக்கும்
இங்கே மரியாதை உண்டு
என்று நிரூபிப்பதில்தான்
நிச்சயமாகத் தங்கியிருக்கிறது.

இல்லாவிட்டால்
வன்முறைகளுக்கு மரியாதை-
பலத்திற்கே அங்கீகாரம்
என்பதே உலக நடப்புக்களிலும்
நம் நாட்டு நடப்புக்களிலும்
ஏற்கப்பட்ட கருத்தாகிவிடும்.

-சமாதானம்-ஜனநாயகம்-
சம்பிரதாய முழக்கங்களாகிவிடும்.
உலக நிலவரம் இருக்கட்டும்,
நம் நாட்டு நிலவரத்தை
முயன்றால் மாற்றலாமே!

□□

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை-

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## கற்பை காப்பாற்றிடுவீர்!

'கற்பு' என்ற பண்புபற்றி நாம் பல கதைகள் மூலம் அறிந்திருக்கிறோம். ஏகபத்தினி விரதம் பற்றிப் புகழப் படுகிறது. கற்பு மிக மேன்மையானதாக கருதப்படுகிறது. ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு அத்தியாவசியமானது. எனவேதான் கற்பு பற்றி வேதாகமத்தில் மிகக் கண்ணியமாகக் கூறப்படுகிறது. ஆம்-

"உன் இளவயது மனைவியோடே மகிழ்ந்திரு. பரஸ்திரியின் உதடுகள் தேன்கூடுபோல் ஒழுகும்: அவள் வாய் எண்ணெயிலும் மிருதுவாயிருக்கும்: அவள் செய்கையின் முடிவோ எட்டியைப் போல கசக்கும். இருபுறமும் கருக்குள்ள பட்டயம்போல் கூர்மையுமாய் இருக்கும். அவள் காலடிகள் மரணத்துக்கு இறங்கும்."(நீதி:5:18)

அழகான வார்த்தைகளால் மிக அருமையாகக் கூறப்பட்டுள்ளது. கற்பில்லாத கணிகையர்களின் கண்ணியமற்ற செயல்கள் முதலில் கனியென இனித்தாலும் இறுதியில் எட்டிக்காயென கசக்கும். ஏன் மரணத்துக்கே இட்டுச் செல்லும். அநித்திய உடல் மட்டுமல்ல ஆன்மாவும் இறந்துவிடும். எனவேதான் யேசு கூறுகிறார்:

"ஒரு ஸ்திரியை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று." (மத்:15:19)

ஆம். பார்வையே போதும். பாழும் கிணற்றில் ஒருவரைத் தள்ளிவிட. ஆன்மாவை இழந்து அகிலத்தை சொந்தமாக்கிக் கொண்டாலும் என்ன பிரயோஜனம்.

எனவே, கற்பு என்னும் தீயைப்பற்றி நாம் கருத்தாய் இருக்க வேண்டும்-இருப்போமாக.

ஏ.பி.வி. கோமஸ்.

## ஆன்மீகம்



### கியாமத்து நாளில் நான்கு கேள்விகள்

கியாமத்து நாளில் நான்கு விசயங்களைப் பற்றி கேள்வி கேட்கப்பட்டு அதற்கு பதிலளிக்கப்படும் வரை எந்த ஓர் அடியானுடைய கால்களும் மஹ்ஷர் மைதானத்தை விட்டு நகராது என்று அல்லாஹ் அறிவித்துள்ளான்.

அந்த நான்கு கேள்விகளும்:

* எம் வாழ்நாளின் வயதை எப்படிக் கழித்தோம்?
* இவ்வுலக வாழ்க்கையின் வாலிபப் பருவத்தை எவ் விஷயத்தில் ஈடுபடுத்தினோம்?
* நாம் எவ்வாறு பொருட்களை சம்பாதித்து எம் முறையில் அதனை செலவு செய்தோம்?
* கற்ற கல்வியின்படி தான் செய்த நல்லமல்கள் எவை?

என்பதே.

இக் கேள்விகள் மூலம் நம் அகப் புற சீர்திருத்தங்கள் அன்று மஹ்ஷர் மைதானத்தில் வெளிப்படும். அதற்கு முன் இவ்வுலக வாழ்க்கையை இறுதித் தீர்ப்பு நாளுக்கு ஏற்றதாய் அமைப்போம்.

எம்.சி. கலீல், கல்முனை-05.

## கவிதைப்போட்டி இல-126

### பரிசுக்குரிய கவிதை

**ஒற்றுமை**

தமிழரா?
சிங்களவரா?
முஸ்லிமா?
அட போடா
இலங்கையர் தானே!

சுபாவரன் கண்டி.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

**எங்கும் செம்மண்**

எங்களை எழுப்பாதீர்!
அமைதியாகத்
தூங்கப் போகின்றோம்-
செங்குருதித் தரையில்!

சேனையூரான், சேனையூர்.



**விழி திறக்கும் காலம் எது?**

கட்டான உடலிங்கு
கதையிழந்து போகுதம்மா!
புயலாக வறுமை இந்த(ப்)
பூமியில் பார் தெரியுதம்மா!
பசியோடு பிணமான
பாலர் இந்தப் பூமியிலே
விழி திறந்து விளையாடும்
காலம் எந்தக் காலம் அம்மா?

செல்வி. ஆகன்யா அருமைநாதன், எட்டியாந்தோட்டை.

**ப(த)ஞ்சம்!**

உணவுக்கு பஞ்சம், அதனால்
உயிர்கள் தரையினில்
தஞ்சம்!

ஷஹிர்ஷா தாஸிம், தர்கா நகர்.

**து(கு)ண்டு விழும் தொகை**

துண்டு விழும் தொகை
குறையாவிட்டாலும் கவலையில்லை!
எம்மீது-
குண்டு விழும் தொகையை
குறைக்கக்கூடாதா....?

ச.கண்ணன், பேராதனை.

**உயிரறுவடை**

இனவாதம் நிகழ்த்திய
உயிரறு வடை இதுவென
உலகம் கண்டிக்கும்-பின்
கவனியாதிருக்கும்!

எஸ். உமையவன்,
வவு/சின்னப்புதுக்குளம்.

**போர்க்களப் போட்டி**

முதலாம் பரிசு
உங்களுக்கு..!
ஆறுதல் பரிசாவது
கிடைக்கும்
எங்களுக்கு....!

ஏ.எஸ். தரன், செங்கலடி.

**மரித்துவிட்ட மனிதம்!**

இடுகாடு இப்போது
நடுரோட்டில்!
மடியுதுபார் மனிதமங்கே!!
மலிந்துவிட்ட யுத்தம்
செத்துமடிவதெப்போ!??

வடிவேல் சுரேஸ்கன்னா, மட்டக்களப்பு.

**பரிதாபம்**

மனித உரிமைகள்
மதிக்கப்படுமாம்!
இந்த உடல்கள் மீது,
சத்தியம் பண்ணி
சொல்கிறார்கள்!

பூ. இதயரத்தினம், அரையம்பதி-03.

**பரிசு**

இராணுவத்துக்கும்
புலிகளுக்கும்
இடையிலான
யுத்தப் போட்டில்
கிடைத்த
பரிசுப் பொருளோ?

ஆர். ராஜேஷ், ஹாலி-எல.

**பசிக் கொடுமை**

எண்சாண் உடம்பிலே
ஒரு சாண் வயிறடக்க
ஒரு பிடி உணவின்றி
மண்ணிலே புரண்டு
மண்ணுண்ணும் நோக்குடன்
குப்புறப் படுத்தீரோ!

திருமதி. எஸ். சுந்தரம், பதுளை.

**தானம்**

தானம் பண்ணுவோம்
உயிர்!
இனி தேசத்தில்
சமாதானம்?

ஆகாஷ் குமார், தல்வத்த-கண்டி.

**கோலம்**

மாதா மடியில்
தவழும் காலம்;
மண்ணின் மடியில்
துவளும் கோலம்!

பிரேமராணி பேரின்பராஜ்,
கொழும்பு-13.

## கவிதைப் போட்டி இல-129



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 02.12.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 129
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

மடல் அனுப்பியவர்களில் இடம் உள்ள வரை பதிவு செய்யப்படுகிறவர்கள் இவர்கள்:

ஸலீம் கடாபி, பைசல், ஹொரவப்பத்தானை.
திருமதி. சந்திராணி தங்கத்துரை, சவளக்கடை-07.
பீ.கே.வை.விஜயகுமார், பொகவந்தலாவை.
ம.பன்னீர்ச் செல்வன், நுவரெலியா.
எம்.பீ.அபூபக்கர், கல்லாவ.
ச.யோகேஸ்வரி, ஜே.புவனேஸ், நுவரெலியா.
எம்.எச்.எம். ஹம்லா, களுத்துறை தெற்கு.
ஆர்.ராஜேஸ்வரன், நமுனுகுல.
ஏ.ஆர். முபாரக், கிண்ணியா, அரைஏக்கர்-07.
கே. புஷ்பராஜ், இறக்குவானை.
பாத்திமா ரிஸ்மியா பௌஸர், கல்ஹின்னை.
மூ. லட்சுமி, எழும்பூர்-சென்னை-08.
நா. ஜெயமதி, வெல்லாவெளி.
ஜே.என். ராமச்சந்திரன், குவைட்.

"இப்போது விளையாடுவது கிரிக்கெட்டே அல்ல" என்ற தலைப்பிலான கட்டம் கட்டிய பேட்டியில் பீ.எஸ். சந்திரசேகர் கொடுத்த விளக்கம் நூற்றுக் கு நூறு சரியே. "பணத்திற்காக கயிற்றில் ஆடுகிறான் பாரு" என்றார்களே அதை "பணத்துக்காக கிரிக்கெட் ஆடுகிறான் பாரு" சரியா?

கே.எம். சந்திரகாந்தன் தனராஜ், ஹட்டன்.

அரசியல் விடயங்களை சூட்டோடு அள்ளித் தரும் 'முரசு'க்கு நிகர் முரசே. சிறு கதைகள், தேன் கிண்ணம் சுப்பர். அனைவரையும் கவரும் வகையில் உன் பணி அமைகிறது.

என்.எச். அன்வர், பட்டாவத்தை,மடுல்சீமை.

'தேவகடாட்சம்' எழுதிய 'சொல்ல வைத்த வன்' கதை தத்ரூபமாக இருந்தது. பாராட்டுக்கள். சந்திரசேகர் அவர்களின் அதிரடியான பேட்டி சுவாரஸ்யமாக இருந்தது.

செல்வி.சிவாஜினி சதாசிவம், மாத்தளை.

"சினி விசிட்" வாரம் தோறும் 'சிப்பிக்குள் முத்து' போல் ஜொலிக்குது பாரீர்! அத்தோடு ரசிகனின் இலக்கிய நயம், கார்லோஸ் ஆகியன பல்சுவைகலவையாக வந்து ஒரு கலக்கு கலக்குகின்றன.

செல்வி. ப்ரிய நேசி, களுத்துறை(தெற்கு)

இராமாயணம் என்னைப் போன்ற பள்ளிச் சிறார்களுக்கு நீங்கள் அளித்த இன்பத் தேன்சுவை.

மொகமட் ரிஸ்வான், ஆட்டுப்பட்டி தெரு, கொழும்பு.

## வாசகர் சாலை

ராஜதந்திரியாரின் அரசியல் அலசல் கடந்த காலத்தைத் காட்டிலும் நிகழ்கால நிகழ்வுக்கு நல்ல யோசனையையும் சொல்கிறது. ஆனால், கேட்க வேண்டியவர்கள் கேட்டால் தானே?

வி.சிவப்பிரகாசம், மன்னார்.

வடக்கு நிலமைகளை துல்லியமாக தரும் முரசுக்கு உளப்பூர்வமான பாராட்டுக்கள். சரி-பிழைகளுக்கு அப்பால் இந்தியாவை முற்றாக ஓரம்கட்டியதும் இன்றைய நிகழ்வுகளுக்கு ஒரு காரணம்தானே?

மா.சுதாகரன், மட்டக்களப்பு.

பட்டுக்கோட்டையாரின் 'விலை உயர்ந்த குற்றம்' வாராவாரம் அசத்தல்தான்

ஜீ.சூர்யா, கொழும்பு-06.



'கார்லோஸ்' பற்றிய தொடர் படு சூப்பர். பாப்பா முரசில் 'வாரம் ஒரு நாடு' வரவேற்கக் கூடிய ஒன்று. ஒவ்வொரு நாட்டைப் பற்றிய பல தகவல்களையும் அறியத் தரும் முரசுக்கு நன்றி.

செல்வி. ரணீஸா யாசீன்,
நிரெல்ல, அக்குறணை.

ரசிகனின் இலக்கிய நயம். ரசிகர்களாகிய நமக்கோர் வரப் பிரசாதம். ரசனையுடன் ரசித்துப் பார்க்கக் கூடியதாக இருக்கின்றதய்யா-
தினமுரசே! நீ வாழ்க!

கலைச் செல்வன் பாரிஸ்,பஹ்மி, குருகொட, அக்குறணை.

எங்கள் இனிய முரசே! நீ அள்ளித் தரும் ஆக்கங்கள் அனைத்தும் அமுதிலும் இனிமை. சிந்தியா வாரா வாரம் அசத்துகிறார் போங்கள்! நாங்கள் அறியாத பல உண்மைக் கதைகளைத் தரும் ரசிகனுக்கு நன்றிகள். அதிரடி அய்யாதுரை கடந்த சில காலமாக காதல் கவிதைகளையே தருகிறார். நாங்களும் இருப்பதை மறந்து விட வேண்டாம்.

செல்வன்கள். மஸீஹுஸ்ஸமான், கலீம் கதாபி, திக்வெல

தினமுரசு எட்டாம் பக்கத்தில் வரும் அந்த 'ஹலோ டாக்டர்' டொக்குத்தார் ஐயா யாரு ஐயா? இனங்காட்டினாத் தேவலைங்க; எங்க மனசு வசமும் சில கேள்விகள். சும்மா கேட்டு வைக்கலாமே என்றுதான். மற்றது நறுக் நறுக் சிந்தியாவை சந்தித்தால், நான் அன்போடு விசாரித்ததாகச் சொல்லுங்கள்.

சென்றல் ஸுகைல், பேருவளை.

சச்சின் டெண்டுல்கரின் பேட்டியை பிரசுரித்து இன்ப அதிர்ச்சி தந்த முரசுக்கு நன்றி.

ப.நர்மதா, பொகவந்தலாவ.



படிப்பகம்

www.padippakam.com

# கெரில்லாத் தாக்குதல் யாழில் தொடரும்

# ஆட்பலத்தைப் பொறுத்தே நிலைமை சீராகும்

## தற்போதைய நிலவரம் குறித்து புலிகள் தெரிவிப்பு!

(யாழ் நிருபர் வர்மா)

யாழ்ப்பாணத்தை படையினர் கைப்பற்றிக்கொண்டாலும் தமது கெரில்லாத் தாக்குதல் தொடரும் என்று புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் தமிழ் செல்வன் தெரிவித்துள்ளார். 17.11.95 அன்று தென்மராட்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே அவ்வாறு கூறியுள்ளார். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் படையினரின் நடவடிக்கை தென்மராட்சி, வடமராட்சி பகுதிகள் நோக்கியும் தொடரக்கூடும். அதனைத் தடுக்கவேண்டுமானால் 14 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் இயக்கத்தில் சேர வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

யாழ் குடாநாட்டிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் மத்தியிலுள்ள இளைஞர்களும் யுவதிகளும் உடனடியாக இயக்கத்தில் சேரவேண்டும் என்று புலிகள் அமைப்பினர் பிரசாரம் செய்துவருகின்றனர்.

'புதிய போராளிகள் இணைப்பகம்' என்ற பெயரில் தென்மராட்சியிலும், வன்னிப் பகுதியிலும் ஆட்சேர்ப்பு அலுவலகங்கள் திறக்கப்பட்டுள்ளன.

"சில நாட்களின் பின்னர் நிலமை சீராகும் என்று இடம் பெயர்ந்த மக்கள் நினைத்துக்கொண்டிருக்கக் கூடாது.

புலிகளின் படைபலம் உயர்வதைப் பொறுத்தே நிலமை சீராக முடியும். எனவே, பலத்தை உயர்த்தும் சக்தி மக்களின் கையிலேயே இருக்கிறது. மக்களின் பலமே புலிகளின் பலமாகும்.

இடம்பெயர்ந்துள்ள இளைஞர்களும், யுவதிகளும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு வந்து இயக்கத்தில் சேரவேண்டும்.

யாழ் நகரைக் கைப்பற்றும் படையினர் தென்மராட்சி நோக்கியும், வடமராட்சி நோக்கியும் திரும்பக்கூடும். அதனால் ஏற்படும் பேரழிவைத் தடுக்கும் சக்தி மக்களிடமே தங்கியுள்ளது," என்று கடந்த வாரம் புலிகளின் அரசியல் பிரிவினர் விடுத்துள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

### மாவீரர் இல்லம்

யாழ்ப்பாண நகரில் படையினர் முகாம் அமைக்கக்கூடிய வசதியுள்ள பாரிய கட்டிடங்களை புலிகள் அமைப்பினர் குண்டுவைத்து தகர்த்துள்ளனர்.

யாழ்ப்பாணம் கோப்பாயில் இருந்த புலிகளது 'மாவீரர் துயிலும் இல்லம்' புலிகளால் தகர்க்கப்பட்டுள்ளது.

படையினரின் கையில் சிக்கக்கூடாது என்பதற்காக புலிகள் அதனை முன்கூட்டியே இல்லாமல் செய்துவிட்டனர்.

யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தையிலுள்ள கிட்டு நினைவுப் பூங்காவில் இருந்த பொருட்களும் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுவிட்டன.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்ததினமான நவம்பர் 26ம் திகதி, யாழ் நகரை பூரணமாக கைப்பற்றுவதே படையினரின் நோக்கம் என்று புலிகள் கருதுகிறார்கள்.



கோப்பாயிலிருந்த மாவீரர் இல்ல முகப்புத் தோற்றம்

எனவே-மாவீரர் தினம் முடிவடையும் நவம்பர் 27ம் திகதிவரை யாழ் நகர் முழுவதும் படையினரின் கட்டுப்பாட்டில் சென்று விடாதவகையில் எதிர்த்தாக்குதல் நடத்த புலிகள் பலத்த முஸ்தீபுகளில் ஈடு பட்டனர்.

வன்னியிலிருந்து புலிகளது பல அணிகள் யாழ் நகர் நோக்கிச் சென்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஆயினும், படையினரின் தாக்குதல் வேகம் பலமாக இருப்பதால், கட்டிடங்களில் பொருத்தப்படும் பொறி வெடிகள் மற்றும் மோட்டார் ஷெல் தாக்குதல்களையே புலிகள் பெரிதும் நம்பியிருக்கின்றனர்.

நவம்பர் 27ம் திகதிக்கு முன்னர் யாழ் நகரைக் கைப்பற்றுவதை புலிகள் அமைப்பினரால் தடுக்கக்கூடிய சூழ்நிலை குறைவாகவே இருக்கிறது.

### கிழக்கில் தாக்குதல்

யாழ் நகரை படையினர் கைப்பற்றும் நிலையில் அங்கு கெரில்லாத் தாக்குதல் நடவடிக்கைகளை புலிகள் தொடர்ந்து நடத்துவர். அதேவேளை கிழக்கு மாகாணத்தில் பாரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது மூலம் தமது பலத்தை வெளிக்காட்ட முற்படுவார்கள் என்று இராணுவ விமர்சகர்கள் கூறுகின்றனர்.

கடற்புலிகளது நடவடிக்கைகள் மூலமாக படையினரது விநியோகப் பாதையில் தடைகளை ஏற்படுத்தும் தாக்குதல்களில் புலிகள் ஈடுபடக்கூடும் என்று நம்பப் படுகிறது.

எவ்வாறெனினும் இனிவரும் வாரங்களில் கிழக்கில் புலிகளது பரவலான தாக்குதல்கள் இடம்பெறலாம் என்றே நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

# மக்களை வெளியேற்றியது ஏன்?

## புலிகளின் அரசியல்பிரிவு விளக்கம்

(அலுவலக நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருந்து மக்களை வெளியேறுமாறு தாம் கோரியது ஏன் என்பதை புலிகள் அமைப்பினர் ஒரு அறிக்கை மூலமாக விளக்கியுள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து வெளிவரும் புலிகளின் தினசரியான 'ஈழநாதம்' பத்திரிகையில் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "யாழ் நகரை நோக்கி முன்னேறிவரும் படையினரை எதிர்த்துப் போரிடுவதில் நாம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இந் நிலையில் இன அழிவில் இருந்து மக்களைக் காப்பாற்றுவதற்காகவே அவர்களை வெளியேற்றும் அவசியம் ஏற்பட்டது.

தற்போதைய நிலையில் மக்களை வெளியேற்றுவது எமது வரலாற்றுக் கடமையாக இருந்தது. வரலாற்றுக் கடமையை புலிகள் செய்து முடித்துள்ளனர். இதன் பொருட்டு மக்களுக்கு சில சிரமங்கள் ஏற்பட்டிருக்கலாம். எனினும் இந்த நடவடிக்கை தவிர்க்க முடியாததாகும்.

யாழ்ப்பாணத்தில் எமது எதிர்த் தாக்குதலுக்கு இடையூறு ஏற்படாத வகையிலும், மக்களை இன ஒழிப்புக்கு உட்படாத வகையிலும் பார்த்துக் கொள்ள வேண்டியது எமது பொறுப்பாகும்," என்று புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

---

# இராணுவச் சீருடையில் புலிகள்

சமீபத்தில் மட்டக்களப்பு-சந்திவெளியில் படையினர் மீது தாக்குதல் நடத்திய புலிகளின் தாக்குதல்பிரிவினர் இராணுவச் சீருடையில் காணப்பட்டதாக கூறப்படுகிறது.

சந்திவெளித் தாக்குதலில் புலிகளின் தரப்பில் பெண்புலி ஒருவரும் பலியானார். தமது தரப்பில் பலியான 7 பேரின் பெயர் விபரங்களை புலிகள் வெளியிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் நடைபெற்ற அனர்த்தம் ஒன்றில் 6 வயது சிறுமி உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலியாகியுள்ளனர். மேலும் பலியான இருவரில் ஒருவர் ஏறாவூர் பற்று பிரதேச செயலகத்தில் லிகிதராக கடமையாற்றியவராவார்.

இதேவேளை புலிகள் அமைப்பினரால் கடத்திச் செல்லப்பட்ட மட்டக்களப்பு பல்கலைக்கழக உபவேந்தர் சந்தானம், இச் செய்தி எழுதப்படும்வரை விடுதலை செய்யப்படவில்லை. அவரது குடும்பத்தினர் பார்வையிடவும் அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

---

# பாடசாலைகளைத் திறக்குமாறு புலிகள் அறிவிப்பு!

## தேவாலயம் அருகே தொலைத்தொடர்பு கோபுரம்!

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தமது கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு புலிகள் அமைப்பினர் அறிவித்தல் விடுத்துள்ளனர்.

சகல ஆசிரியர்களும் கண்டிப்பாக பாடசாலைகளுக்கு சமூகமளிக்கவேண்டும் என்று புலிகள் அறிவித்துள்ளனர்.

அரசாங்கத்திடம் ஊதியம் பெற்றுக் கொண்டு, அரசாங்க உத்தரவை மீறி பாடசாலைகளுக்கு சமூகமளித்தால் வேலை பறிபோய்விடும். அதனால் எவ்வாறான முடிவை எடுப்பது என்று தெரியாமல் ஆசிரியர்கள் தடுமாறுகின்றனர்.

சமூகமளிக்கும் ஆசிரியர்களையும், தமது இயக்கத்தில் கற்பித்தல் நடத்தக்கூடியவர்களையும் வைத்து பாடசாலைகளை இயக்குவதற்கு புலிகள் முன்வந்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை, பதுளை வீதி, படுவான்கரைப் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் புலிகள் அமைப்பினரால் திறக்கப்படுகின்றன.

புலிகளின் அறிவித்தல் வெளியானவுடன் சில ஆசிரியர்கள் வேறு பகுதிகளுக்கு சென்றுவிட்டனர்.

புலிகளின் அரசியல் துறையின் துணைப் பொறுப்பாளர் கரிகாலனின் உத்தரவின் படியே பாடசாலைகள் இயங்கவேண்டும் என்று மட்டக்களப்பு மாவட்டப் புலிகளால் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

மாவீரர் தின நிகழ்ச்சிகளும் மட்டக்களப்பில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் நடத்தப்பட்டன.

மாவீரர் தினத்தை முன்னிட்டு புலிகள் தாக்குதலை நடத்தக் கூடும் என்று எதிர்பார்த்து படையினரும் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரித்தனர்.

பொதுமக்கள் மத்தியிலும் பதட்டம் நிலவியது. எங்கு என்ன நடக்குமோ என்ற இனம் தெரியாத பீதி காரணமாக மக்கள் நடமாட்டமும் குறைந்திருந்தது.

இதேவேளை; மட்டக்களப்பு மாவட்டத்தில் வாகரை தேவாலயம் அருகே புலிகள் அமைப்பினரால் தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விமானம் மூலமாக அங்கு தாக்குதல் நடத்தப்பட்டால் தேவாலயமும் பாதிக்கப்படும் அபாயம் இருக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப் பற்று பஸ் டிப்போவில் இருந்து புலிகள் அமைப்பினரால் எடுத்துச் செல்லப்பட்ட பஸ் வண்டியை புலிகள் நிறம் மாற்றிவிட்டு தமது தேவைகளுக்கு உபயோகப்படுத்தி வருகின்றனர்.

---

# கைதடியிலிருந்தும் வெளியேற்றம்

## பல நூறு-படகுகள் தயார் நிலை

யாழ்-குடாநாட்டில் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து பொதுமக்கள் முற்றாக வெளியேறிவிட்டனர். வெளியேறாமல் இருக்க நினைத்த முதியவர்களும் புலிகள் அமைப்பினரால் வாகனங்கள் மூலமாக வெளியேற்றப்பட்டனர்.

தற்போது தென்மராட்சியில் கைதடியில் உள்ள மக்களை வெளியேறுமாறு புலிகள் அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

கைதடிப் பகுதியில் இருந்து மோட்டார் ஷெல் தாக்குதல் நடத்துவதற்கு வசதியாகவே மக்களை வெளியேறுமாறு புலிகள் கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தென்மராட்சியை நோக்கியும் படையினரின் நடவடிக்கை ஆரம்பித்தால் முதலில் கைதடிப்பகுதிதான் கட்டுப்பாட்டுக்குள் செல்லும். எனவே- முன்கூட்டியே அங்குள்ள மக்களை வெளியேற்றுவதில் புலிகள் அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

தென்மராட்சியை நோக்கி படையினர் திரும்பினால், அங்கிருந்தும் மக்களை வெளியேற்றி கிளாலிக் கடலேரிவழியாக கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லவும் புலிகள் திட்டமிட்டுள்ளனர். அதற்காக நூற்றுக்கணக்கான படகுகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

---

# வயதுத் தடை தளர்வு

## படிவ விலை உயர்வு

வடபகுதியில் இருந்து வெளியேறும் மக்களுக்கு புலிகள் அமைப்பினர் விதித்திருந்த வயதுத்தடை சற்று தளர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மக்கள் பெருமளவு இடம்பெயர்ந்துள்ள நிலையில் கடும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துவது புலிகள் அமைப்பினருக்கும் சிரமமாக இருப்பதாகக் கூறப்படுகிறது.

வயதுக் கட்டுப்பாட்டுக்கு உட்படும் ஆள் ஒருவர் வடபகுதிக்கு வெளியே செல்வதற்கு இன்னொருவர் பிணை நிற்க வேண்டும் என்றும் கட்டுப்பாடு இருந்தது.

தற்போது பணம் செலுத்திவிட்டு செல்லலாம் என்று கூறப்படுகிறது. வசதியான குடும்பத்தவராக இருந்தால், 50 ஆயிரம் ரூபா முதல் ஒரு இலட்சம் ரூபாவரை அவரவர் வசதிக் கேற்ப கேட்கப்படுகிறது. அதனை நிதியாகச் செலுத்திவிட்டு வடபகுதியில் இருந்து வெளியேற முடியும்.

வடபகுதியில் இருந்து வெளியே செல்ல புலிகளிடம் 'பாஸ்' கேட்டு விண்ணப்பிக்கும் படிவம் ஒன்றை பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அப்படிவம் ஒன்று 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டது. தற்போது 400 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போதைய நிலையில் புலிகள் அமைப்பினர் எதிர்நோக்கும் பெரும் நிதித் தேவையைக் கருத்தில் கொண்டே அவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து சுமார் 250 குடும்பங்கள் வவுனியா நகருக்குள் வந்துள்ளன.

அக் குடும்பங்களில் 25 குடும்பங்கள் வவுனியா புகையிரத நிலையத்திற்கு எதிரேயுள்ள கட்டிடத்தில் தங்கவைக்கப்பட்டனர்.

ஏனைய குடும்பங்கள் தமது உறவினர்கள் வீடுகளுக்குச் சென்றுள்ளனர்.

---

# வன்னியில் காணியும்~பணமும்

யாழ்-குடாநாட்டிலிருந்து வன்னிப் பகுதிக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு காணியும் பணமும் வழங்கும் நடவடிக்கையில் புலிகள் அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

குடும்பம் ஒன்றுக்கு ஒரு பரப்பு நிலமும், இரண்டாயிரம் ரூபா பணமும் வழங்கப்பட்டிருக்கிறது. பல குடும்பங்களுக்கு இவ்வாறான உதவி வழங்கப்பட்டுள்ளது.

வன்னியில் தரிசாகக் கிடந்த நிலங்களையே புலிகள் அமைப்பினர் பிரித்து வழங்கி வருகின்றனர்.

இதனால் தற்போதைக்கு தமது சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாதோ என்று இடம்பெயர்ந்த மக்கள் ஆதங்கப்படத் தொடங்கியுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

இதேவேளை கிளாலிப் படகுச் சேவையிலும் சில கட்டுப்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. யாழ் குடாநாட்டிலிருந்து வரும் பயணிகளை கொண்டுவருவதில் கட்டுப்பாடு எதுவுமில்லை. கிளிநொச்சியில் இருந்து யாழ் குடாநாடு செல்லும் பயணிகளை ஏற்றிச் செல்வதில் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

---

# பிரபாவின் கவனிப்பில் புலனாய்வு

புலிகள் அமைப்பின் உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டம்மான் அப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டது தெரிந்ததே.

தற்போது புலிகள் இயக்க புலனாய்வுப் பிரிவின் சகல நடவடிக்கைகளையும் பிரபாகரனே நேரடியாகக் கையாளுகிறார் என்று தெரியவந்துள்ளது.

பொட்டம்மானின் இடத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டவரின் நடவடிக்கைகளும் பிரபாகரன் எதிர்பார்க்குமளவுக்கு திருப்திகரமாக இருக்கவில்லையாம்.

யாழ்-குடாநாட்டில் சமீபத்திய மோதல்களில் புலிகளின் மகளிர் படைப்பிரிவு முன்புபோல கூடுதலாக ஈடுபடுத்தப் படவில்லை என்றும் கூறப்படுகிறது.

வெலி ஓயாத் தாக்குதலில் பெண் புலிகள் பெருமளவில் பலியானபின்னரே இவ்வாறான மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

---

# கனடாவில் கட்டுப்பாடு

## துப்பாக்கியோடு ஒருவர் கைது

கனடாவில் உலகத் தமிழர் இயக்கப் பிரமுகர் சுரேஸ் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து புலிகள் இயக்கத்திற்கான பகிரங்க ஆதரவு நடவடிக்கைகள் குறைந்துள்ளன.

கனடாவில் உலகத் தமிழர் இயக்க அலுவலகத்தில் முன்னர் புலிக்கொடியும், கனடியக் கொடியும் வைக்கப்பட்டிருந்தன. தற்போது உலகத் தமிழர் இயக்கத்தினரால் புலிக்கொடி அகற்றப்பட்டு விட்டது.

உலகத் தமிழர் இயக்க அலுவலகத்தில் காணப்பட்ட பிரபாகரனின் பெரியளவிலான படங்களும் அகற்றப்பட்டுள்ளன.

இதே வேளை ஈ.பி.டி.பி. தலைவரும் யாழ் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.டக்ளஸ் தேவானந்தா சமீபத்தில் கனடா சென்றபோது, இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் துப்பாக்கியோடு கைது செய்யப்பட்டிருந்தார். அதனையடுத்து தேவானந்தா எம்.பிக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட இளைஞர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது. விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

---

# பரீட்சையில் பாரபட்சம்?

(திருமலை நிருபர்)

ஆசிரியர் போட்டிப் பரீட்சைப் பரீட்சார்த்திகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி 14.11.95 என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

சில தினங்களுக்கு முன்னர் தபால்மா அதிபரால் தபாலகங்களுக்கு அனுப்பப்பட்ட சேவைத் தந்தி ஒன்றில் விண்ணப்ப முடிவுத் திகதி 21.11.95 அன்றுவரை நீடிக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் அந்த நீடிப்பு சிங்கள மொழி மூலமான பரீட்சார்த்திகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டிருந்தது.

www.padippakam.com


# கூட்டணித்தலைவரின் மறுப்பு

உங்களின் 12-18 நவம்பர் 1995 தினமுரசு மலரில் அதிரடி அய்யாத்துரை என்ற பகுதியில் எனக்கும் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் கருத்து வேற்றுமை இருப்பதாக கூறி இருந்தீர்கள். இந்தச் செய்தி பிழையானதாகும். இதற்கு முன்பும் என்னைப் பற்றிய பிழையான செய்திகள் பிரசுரித்திருந்தீர்கள். அவைகளை நான் திருத்த முற்படவில்லை. ஆனால் இது எங்கள் பாராளுமன்ற பிரதிநிதிகளையும் சேர்த்த செய்தி என்றபடியால் அதை திருத்துமாறு உங்களை கேட்கிறேன்.

எங்களுடைய கட்சியின் கொள்கைகளை எமது உயர்மட்ட அரசியல் குழு கூடி விவாதித்து முடிவெடுக்கும். இப்படியான கட்டங்களிலேயே வெவ்வேறு கருத்துக்கள் கூறுவது சகஜம். ஆனால் இறுதியில் அனேகமாக ஏகமனதாக முடிவுகள் எடுக்கப்பட்டு அதை எல்லோரும் கடைப்பிடிப்போம். சில தருணங்களில் எனது நிலைப்பாடு கடும்போக்காக இருக்கும். வேறு தருணங்களில் வெவ்வேறு பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து கடும்போக்காக இருக்கும். ஓர் சமரசத்தை ஏற்படுத்த நாங்கள் ஒற்றுமையாக இயங்குவது தான் எமது கட்சியினுடைய நடைமுறை. தயவு செய்து இத்திருத்தத்தை உங்கள் வாரமலரில் பிரசுரிக்குமாறு வேண்டுகிறேன்.

மு.சிவசிதம்பரம், தலைவர்–த.வி.கூ.அ.

# கார்ட்டூண் மூலை



நன்றி-ஐலண்ட்

# அதிரடி அய்யாத்துரையிடமிருந்து கூட்டணித்தலைவருக்கு பதில்

அன்புடையீர், வணக்கம்.

தங்கள் மீது தனிப்பட்ட முறையில் மரியாதை வைத்திருப்பவன் நான் என்பதை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். அதனால்தான் தங்கள் கடிதம் கண்டதும் பதில் எழுதும் ஆவலும் உண்டானது.

தங்களைப்பற்றி பிழையான செய்திகளைப் பிரசுரித்ததாக எழுதியிருந்தீர்கள். அவை எவை என்று குறிப்பிட்டிருந்தால் என் தரப்பு நியாயத்தை எடுத்துக்காட்ட வசதியாக இருந்திருக்கும். எனக்குக் கிடைத்த தகவல்கள் பிழையானால் திருத்திக்கொள்ளவும் அதனை வாசகர்களிடம் தெரிவிக்கவும் வசதியாக இருந்திருக்கும். எனினும் நான் அறிந்தவரை எனது தகவல்களில் தவறில்லை என்பதை தங்களுக்கு மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்சிகள் என்றால் பல விதக் கருத்துக்கள் இருக்கும் என்பது உண்மைதான். ஒரு கட்சியில் பலரகமான நபர்களும் இருப்பார்கள் என்பது உண்மைதான். அந்த நபர்கள் மக்கள் அரங்கிலும் ஓரளவு பிரபலம் என்பதால் அவர்களது அரசியல் நிலைப்பாடுகளில் ஏற்படும் தடுமாற்றங்களைச் சுட்டிக் காட்டுவது பத்திரிகையாளர்களின் கடமையல்லவா?

தங்களது நிலைப்பாடு சில நேரங்களில் கடும்போக்காய் இருக்கும் என்று தாங்களே கூறியிருக்கிறீர்கள். அவ்வாறான ஒரு தருணத்தைத்தான் நான் குறிப்பிட்டிருந்தேன். நான் குறிப்பிட்ட விடயத்தை தாங்கள் மறுக்கவில்லை என்பதையும் தாழ்மையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"ஏகமனதாக முடிவுகள் எடுக்கப்பட்டு அதை எல்லோரும் கடைப்பிடிப்போம்" என்று கூறியிருக்கிறீர்கள். அதனை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

எடுத்துக்காட்ட பல உதாரணங்கள் இருந்தாலும் சமீபத்திய உதாரணம் ஒன்று மட்டும் சொல்கிறேன்.

இறுதியாக நடந்த அவசரகாலப் பிரேரணை விடயத்தில்–முதலில் எதிர்த்து வாக்களிக்கப் போவதாக சொல்லிக்கொண்டு உங்கள் பா.உக்கள் பாராளுமன்றம் சென்றார்கள். அதனால் சபைக்குள்ளும் சென்றுவிட்டு வந்தார் கௌரவ ஜோசப் பரராஜசிங்கம். பின்னர் ஒரு அறிக்கைவிட்டுவிட்டு வெளிநடப்புச் செய்யப்போவதாக கூறிக்கொண்டு பாராளுமன்றத்துக்குள் சுற்றி வந்தார்கள் உங்கள் பா.உக்கள். பின்னர் அன்று மாலையில் வாக்கெடுப்புக்கு சற்று முன்னர்தான்–பாராளுமன்றத்தை விட்டு 'நைசா'க நழுவினார்கள். என்ன ஆச்சரியம்! மறுநாள் சில பத்திரிகைகளில் "கூட்டணி பாராளுமன்றத்தை பகிஷ்கரித்த"தாக அறிக்கை விட்டீர்கள்.

பாடசாலைக்குச் சென்று ஆசிரியர்களுக்கு முகத்தைக் காட்டிவிட்டு, வரவு இடாப்பிலும் பெயரைப் பதிவு செய்துவிட்டு பகிஷ்கரிப்பு செய்ததாக அறிவிப்பது மாதிரியானது அது.

பாடசாலைப் பகிஷ்கரிப்புக்கள் பலவற்றுக்கு அந்தக் காலத்தில் அழைப்புவிட்ட உங்களுக்கு பகிஷ்கரிப்பு என்றால் என்னவென்று சொல்லியா தெரியவேண்டும்!

எதிர்ப்பா, வெளிநடப்பா, சொல்லாமல் கொள்ளாமல் நழுவி– பத்திரிகைகளுக்கு அறிக்கையா– என்பதைக் கூட முடிவு செய்ய முடியாமல் பாராளுமன்றத்துக்குள் போய் நின்று கொண்டு தடுமாறுவதுதான் ஏகமனதான முடிவு என்று அர்த்தமா? தடுமாற்றம் காரணமாக பாராளுமன்ற பகிஷ்கரிப்பு என்று இறுதியில் 'சுப்பர் டூப்' விட்டதை எடுத்துக்கொள்ளலாம்.

வேண்டுமென்றே ஆதாரமில்லாமல் தகவல்களை வெளியிட முரசு என்னை அனுமதிக்காது. எப்போதாவது அபூர்வமாக தகவல் தவறானால் அதைத் திருத்திக் கொள்ளவும் தயங்குவதில்லை.

தங்களுக்கு எனது பணிவான வணக்கம்.

அன்பன்,
அதிரடி அய்யாத்துரை.

பின்குறிப்பு:– பாராளுமன்ற பகிஷ்கரிப்பு என்று சொல்லப்பட்ட தினத்தன்று, பாராளுமன்றம் சென்ற உங்கள் பா.உக்கள் ஒவ்வொருவருக்கும் அன்றைய படியாகக் கிடைத்த ரூபா200 திருப்பிக் கொடுத்து விட்டார்களா? முடிந்தால் அறியத்தரவும். பிரசுரிக்கலாம்.

# தெருவுக்கு வந்த வாழ்க்கை



யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் பாதை நடுவில் இருந்து கிடைத்ததை உண்டு பசியாறுகின்றனர். மேலே வானம் கீழே பூமி. இழப்பதற்கு இனி எதுவுமில்லை.

## நரசிம்மராவுக்கு தந்தி

இலங்கையில் தமிழ் மக்களுக்கு உதவ இந்திய அரசு முன்வரவேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் பல கோரிக்கை விடுத்துள்ளன. மார்க்சிய, பெரியாரியப் பொதுவுடமைக் கட்சியின் பொதுச் செயலாளர் வே.ஆனைமுத்து'வும் இந்தியப் பிரமர் நரசிம்மராவுக்கு தந்தியனுப்பியுள்ளார்.

# விளம்பரப் பகுதி


## தேவை

கொழும்பிலுள்ள பிரபல நிறுவனமொன்றிற்கு நன்கு அனுபவம் வாய்ந்த கணக்கியல் எழுது வினைஞர்கள் தேவை.

பொது அறிவு, தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சில் அனுபவம் உள்ளோர் விரும்பப்படுவர். தகுந்த ஆவணங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா தினமுரசு வாரமலர், த.பெ.இல:1772, கொழும்பு.

கொழும்பில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றிற்கு தமிழில் இருந்து ஆங்கிலத்திற்கு கட்டுரைகள் நூல்கள் என்வற்றை மொழிபெயர்க்கும் திறமையுடையவர்கள் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

விளம்பர இல: T95, மே/பா தினமுரசு வாரமலர் த.பெ.இல.1772 கொழும்பு

## லேத்மன் தேவை

அனுபவமுள்ள லேத்மன் தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

SHANKAGARI LATHE WORKSHOP
102-112/26, JAMPETTAH STREET,
KOTAHENA.
TEL. 324376

## தேவை

நிறுவனம் ஒன்றிற்கு தமிழ் தட்டச்சாளர்கள் தேவைப்படுகின்றனர். தகுந்த தகைமைச் சான்றிதழ்களுடன் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

மே/பா தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772, கொழும்பு.

## அற்புத மலையாள மாந்திரீகம்



மலையாள மாந்திரீக ஆவி உச்சாட்டங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணத் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்ஷமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்ஷமி இயந்திரம் தேவையா? ஞான திருஷ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு–

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31,32,33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,
FAX 0094523093 EXT 28

## சித்தர்களின் தெய்வீக மருத்துவம்

(GOVT.APPROVEDCHARTY) மட்டக்களப்பு, கல்லடி (வேலூர்) குருசக்தி நிலையத்தின் பிரதமகுரு, மகாசக்தி உபாசகர் "மந்திரயோகி" சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட ஹோமியோபதி (அக்குப்பங்சர்) டாக்டர்-சக்தியானந்தபாவா மட்டக்களப்பு-மலையாள (இந்தியா) பாரம்பரிய கைகண்ட அனுபோக புராதன (மருந்து, மந்திர, யந்திர, மனோவசிய, ஆகர்ஷண) வைத்திய முறைகளினால் உடல்நோய், மனநோய், தீயசக்திகளினால் ஏற்பட்ட தீவினைகளையும் தீர்த்து துன்பங்கள் அணுகாமல் "காவல்ரட்சைகள், சர்வகாரியசித்தி, தாயத்து, நவக்கிரகதோஷ, சர்வரோக நிவர்த்தியந்திரம், ஜனராஜ வசிய யந்திரங்களும்" செய்து கொடுக்கிறார். பிரிந்த குடும்பங்களை உறவாக்க, விரும்பிய வாழ்க்கையை அமைத்து இன்பமாக வாழ, (இருவர் பெயர்களும் தேவை) வேறு நன்மையான தனிப்பட்ட மாந்திரீக வசிய விடயங்கள் செய்து கொள்ள-வரமுடியாத வெளிநாட்டவர்கள் கோரிக்கைகளை எழுதினால் உங்கள் விருப்பங்களை உடன் நிறைவேற்ற பரிகாரப் பொருட்களை தபாலில் அனுப்பப்படும். விரும்பியனுப்பும் காணிக்கைகளை (மணியோடர்) ஏற்று உடன் கவனிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நாடவேண்டிய விலாசம்:-

YOGI. DR. SACKTHYANANTHEBABA
GURUSACKTHY CENTER,
KALLADY, BATTICALOA.




## பேனா நண்பர்

110 புகைப்படங்களுடன் 300 நண்பர்களின் விபரங்களடங்கிய அகில உலக பேனா நண்பர் சஞ்சிகையின் 11ஆம் இதழ் தற்பொழுது விற்பனையாகின்றது.

விலை: ரூபா 50/=; வெளிநாடு ரூபா 100/=. (தபால் செலவுடன்)

Y.L. MOHAMED NAYIEM
25, KIRIGALA ROAD,
MAWANELLA.


## ஈ.பி.டி.பி. தலைவர் இல்லத் தாக்குதல்

# இருவர் கைது–ஒருவர் பலி

(அலுவலக நிருபர்)

கொழும்பில் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தெவானந்தா எம்.பி. யின் இல்லம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக இருவர் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பேலியகொட பொலிஸ் நிலையத்தில் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொலிஸ் காவலில் இருப்பவரின் பெயர் நிர்மல்; வயது 23.

கொழும்பில் உள்ள தனியார் நிறுவனமொன்றில் நிர்மல் ரோகன் வேலை செய்துவந்தார். பொலிசாரின் விசாரணையின்போது நிர்மல்ரோகன் வெளியிட்ட தகவல்களின் படி, கொழும்பு நகரில் உள்ள பிரபல விடுதி ஒன்று பொலிசாரால் முற்றுகையிடப்பட்டது.

திரு.டக்ளஸ் தேவானந்தா எம்.பி. வீட்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சமரில் புலிகளின் தரப்பில் இருவர் காயமடைந்தனர். அதில் ஒருவர் அந்த விடுதியில் தான் தங்கியிருந்தார். எனினும் அவர் தப்பிச் சென்றுள்ளார். அதனையடுத்து அவ் விடுதி பொலிசாரால் மூடப்பட்டது.

கொழும்பில் உள்ள தனியார் சைவ ஹோட்டல் ஒன்றின் அருகிலிருந்தே சம்பவதினம் தாக்குதல் குழு புறப்பட்டது. தாக்குதல் குழுவில் 7 பேர் இருந்ததாக நிர்மல் ரோகன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து உத்தரவு வரும் வரை நிர்மல் ரோகன் கொழும்பில் உள்ள ஈ.பி.டி.பி. தலைவரது இல்லத்தை நோட்டமிட்டு வந்தார்.

ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவரது வானொலியை பழுதுபார்க்கும் சாக்கில் கொழும்பு பார்க் வீதியில் உள்ள ஈ.பி.டி.பி. அலுவலகத்திற்கும் நிர்மல் ஒரு முறை சென்றிருக்கிறார்.

கொழும்பில் உள்ள தமிழ் இயக்கமொன்றின் உறுப்பினர்களிடம் "கொழும்பில் புலிகளின் நடமாட்டம் இருக்கிறது. தகவல் தருகிறேன்" என்று கூறி நட்பு ஏற்படுத்திக் கொள்ளவும் நிர்மல் முற்பட்டாராம்.

திரு.டக்ளஸ் தோவானந்தா இல்லத் தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட 'வேன்'மறுநாளே 'கராஜ்' ஒன்றில் நிறம் மாற்றப்பட்டதாகவும் நிர்மல் தகவல் வெளியிட்டுள்ளார்.

உளவு நடவடிக்கைகளுக்காக 'ஓட்டோ' ஒன்றும் நிர்மலால் வாங்கப்பட்டது. அந்த ஓட்டோவை பழுதுபார்க்கும் சாக்கில் அமைச்சர் பௌஸியின் வீட்டையும், வீட்டின் சமீபமாகவுள்ள கராஜ் ஒன்றிலிருந்து நிர்மல் நோட்டமிட்டதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈ.பி.டி.பி. தலைவரது இல்லத் தாக்குதலும், கொலன்னாவை எரிபொருள் குதம் மீதான தாக்குதலும் 'மாஸ்டர்'என்பவரது வழி நடத்தலின் கீழ் நடத்தப்பட்டதாகவும் நிர்மல் வாக்குமூலமளித்துள்ளார்.

www.padippakam.com

# வளைகுடா – வடபுலம்

## படைக்கலம் வகிக்கும் பாத்திரம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்





வடபுலப் போர்க்களம் எதிர்காலத்தில் பல காட்சி மாற்றங்களைக் காண நேரும்.

ஆனால், ஒரே ஒரு காட்சி மட்டும் யாழ் குடாநாட்டு மக்களால் என்றென்றும் மறக்க முடியாததாகிவிட்டது.

சொந்த இடங்களை துறந்து, பல இலட்சம் மக்கள் இருக்க இடமின்றி, உண்ண உணவின்றி நிர்க்கதியான சோகம் தான் இலங்கையில் இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் சோகமாக வரலாற்றிலும் பதிவு செய்யப்படும்.

சில காலத்திற்கு முன்னர் நினைத்தும் பார்த்திருக்க முடியாத காட்சி இது.

மூன்றாம் கட்ட ஈழப் போரைப் புலிகள் பிரகடனம் செய்தபோது, தகர்க்கப்பட்ட கடற்படைப் படகுகளும், வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானங்களும் போர்க்கள நிலவரம் தொடர்பாக மிகப் பெரும் மாயையை உருவாக்கி விட்டிருந்தன.

புலிகளது இராணுவ பலம் முதலாம் கட்ட ஈழப் போரிலிருந்து மூன்றாம் கட்ட ஈழப் போர் வரை வளர்ந்ததும் உண்மை. வலுப்பட்டதும் உண்மை.

முதலாம் கட்ட ஈழப் போர்க் காலத்தில், கரு நிலையில் இருந்த கடற்புலிகள் அமைப்பு, இரண்டாம் கட்ட ஈழப் போரில் முக்கிய போர் அணியாக மாறியது.

முதலாம், இரண்டாம் கட்டப் போர்களில் இல்லாத விமான எதிர்ப்பு ஆயுதம் மூன்றாம் கட்டப் போரில் புலிகளிடம் இருந்தது. விமான எதிர்ப்புப் படைப்பிரிவும் உருவாக்கப்பட்டது.

முதலாம் கட்ட ஈழப் போர் காலத்தில் புலிகளது அணிகள் கெரில்லா யுத்த முறையையே கையாண்டன.

கெரில்லாக்கள் ஒரே இடத்தில், தமக்கென்று ஒரு தளப்பிரதேசத்தில் தங்கியிருக்காமல் வாய்ப்பான இடங்களில் தாக்குதல் நடத்திவிட்டுப் போய்க்கொண்டே இருப்பார்கள்.

இதனை நடமாடும் யுத்த தந்திரம் என்று குறிப்பிடலாம்.

நடமாடும் யுத்த தந்திரத்தின் முக்கிய நோக்கம் ஒரு பகுதியை விடுவிப்பது அல்ல; எதிரிக்கு தொல்லை கொடுப்பது; ஆயுதங்களைப் பறித்துச் சேகரிப்பது; ஆயுதப் போராட்டம் பற்றிய நம்பிக்கைகளை மக்களிடம் ஏற்படுத்துவது என்பவையே நடமாடும் யுத்த தந்திரத்தின் முக்கிய நோக்கங்களாக இருக்கும்.

நடமாடும் யுத்தத்தில் ஈடுபடும் கெரில்லாக்களை கண்டுபிடித்து அழிப்பதும் சுலபமான காரியமாக இருக்காது.

இந்தியப் படைக்கு எதிராக கெரில்லாப் பாணியிலான நடமாடும் யுத்தத்தையே புலிகள் பெரிதும் சார்ந்திருந்தார்கள்.

வன்னிக் காட்டில் மட்டுமே கெரில்லாப் பிரதேசம் ஒன்றைப் புலிகள் கொண்டிருந்தார்கள்.

கெரில்லாக் குழுக்களாக உள்ள அணிகளை ஒன்றிணைத்து நிரந்தர இராணுவம் ஒன்றை உருவாக்கும் போதே ஏதாவது ஒரு பகுதியை விடுவித்து அங்கு நிலை கொண்டு போராடும் பலத்தை உருவாக்க முடியும்.

ஆட்பலம், ஆயுத பலம் என்பவைதான் நிரந்தர இராணுவத்தின் முக்கிய அடிப்படையாகும்.

இந்தியப் படைக்கு எதிரான யுத்தத்தில் புலிகள் பல வெற்றிகளைப் பெற்றிருந்தனர். பாரிய இழப்புக்களையும் ஏற்படுத்தியிருந்தனர்.

ஆனால் அவையனைத்துமே இரண்டு இராணுவங்களுக்கிடையில் நடைபெறும் மரபுப் போர் முறை என்றழைக்கப்படும் நேரடிச் சமர்களில் பெறப்பட்ட வெற்றிகளல்ல.

இந்தியப் படை எதிர்பாராத தருணங்களில் கெரில்லாப் பாணியில் திட்டமிட்டு நடத்தப்பட்ட தாக்குதல்கள் மூலமும் பெறப்பட்டவையாகும்.

நேரடிச் சமரில் ஈடுபடுமளவுக்கு புலிகளது ஆட்பலமோ, ஆயுதபலமோ போதுமானதாக இருக்கவில்லை.

இந்தியப் படையை ஒரு பகுதியில் இருந்து முற்றாக வெளியேற்றி அங்கு தாம் நிலை கொண்டு நின்று போரிடும் இராணுவ பலத்தை புலிகள் பெற்றிருக்கவில்லை.

இந்திய அரசியல் மாற்றங்களும், முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் இந்தியப் படை எதிர்ப்பு நிலைப்பாடும் இந்தியப் படையின் விரைவான வெளியேற்றத்திற்கு முக்கிய காரணங்களாயின.

எனவே, தம்மை நிரந்தர இராணுவமாக்கி இந்தியப் படையை ஒரு குறிப்பிட்ட பகுதியில் இன்றாவது வெளியேற்றக்கூடிய நேரடிச் சமர் முறைக்கு புலிகள் தயாராகும் முன்னரே இந்தியப் படை சென்றுவிட்டது.

எனினும், இந்தியப் படைக்கு எதிராக புலிகள் நடத்திய கெரில்லாத் தாக்குதல்களைக் குறைத்து மதிப்பிட முடியாது.

கெரில்லாத் தாக்குதலை எப்படி நடத்துவது என்று இயக்கங்களுக்கு-புலிகள் உட்பட-பயிற்சி கொடுத்தவர்களே கற்றுக் கொள்ளும் மாணவர்களாகிப் போனார்கள்.

ஆனால், புலிகளால் தனித்து நின்று இந்தியப் படையை வெளியேற்ற முடிந்திருக்குமா? இலங்கை அரசும், இந்திய அரசும் கைகோர்த்துக் கொண்டு களத்தில் இறங்கியிருந்தால் போர் நிலவரம் வேறு மாதிரி அமைந்திருக்கலாம்.

ஒரு பெரிய படையை கெரில்லாக்களால் தாக்க முடியும். முற்றிலுமாக வெளியேற்றுவதற்கு கெரில்லாப் பாணியிலான தாக்குதல்கள் மட்டுமே போதுமானதல்ல.

இந்தியப் படை வெளியேறியபோது சில தவறான இராணுவக் கணிப்புக்கள் செய்யப்பட்டன. ஒரு பெரிய படையை வெளியேற்றக் கூடிய பலம் புலிகளிடம் இருந்தது என்பது போல கருதப்பட்டது. அந்தக் கணிப்புத்தான் இன்று புலிகள் தமது பிரதான தளப்பிரதேசத்தை கைவிடும்போது பலருக்கு பெரும் அதிர்ச்சியாகத் தெரிகிறது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவோடு பேச்சை முறித்துக்கொண்டு புலிகள் இரண்டாம் கட்ட ஈழப் போரை பிரகடனம் செய்தனர்.

யாழ்-கோட்டை இராணுவ முகாமை முற்றுகையிட்டு அங்கிருந்து படையினரை வெளியேற்றியது புலிகள் பெற்ற முதல் வெற்றி.

ஆனால்,கோட்டை இராணுவ முகாமை பல நாட்களாக புலிகள் முற்றுகையிட்டிருந்தபோதும் உள்ளே பிரவேசித்து அழித்தொழிப்பு யுத்தம் நடத்த முடியவில்லை.

இராணுவ முகாமில் இருந்த ஆயுதங்கள், பல கோடி பெறுமதியான நகைகள் (வங்கியின் நகைகள்) என்பவற்றோடு மண்டைதீவு வழியாக கோட்டை முகாம் இராணுவத்தினர் பத்திரமாக பின்வாங்கியதைப் புலிகளால் தடுக்க முடியவில்லை.

முகாமை முற்றுகைவிடக் கூடிய பலத்தைப் பெற்றிருந்தபோதும், முகாமுக்குள் பிரவேசிக்கும் பலம் புலிகளிடம் இல்லாமை ஒரு பலவீனம்.

அது தவிர, கோட்டை முகாமுக்குள் இருந்த படையினரை மீட்க 'ஒப்பரேஷன் வலம்புரி' நடவடிக்கை படையினரால் மேற் கொள்ளப்பட்டது.

யாழ்-குடாநாட்டு தீவுப் பகுதிகள் படையினர் வசம் சென்றன. ஒன்றை இழந்து மற்றொன்றைப் படையினர் பெற்றுக் கொண்டனர்.

கோட்டை முற்றுகையை உடைக்க முடியாமையும், முகாமைப் பாதுகாத்து தொடர்ந்து பராமரிக்க முடியாமையும் படையினரின் பலவீனமாக இருந்தது. ஆனால், யாழ் தீவுப் பகுதிகளை தமது நிரந்தர இராணுவத்தின் ஆட்பலம், ஆயுத பலம் மூலம் படையினரால் கைக்கொள்ள முடிந்திருந்தது.

நிரந்தர இராணுவம் கைக்கொள்ளும் பலம் இருந்திருந்தால் யாழ்-தீவுப்பகுதிகள் கைவிட்டுப் போக புலிகள் விட்டிருக்க மாட்டார்கள்.

அதன்பின்னர் இரண்டாம் கட்ட ஈழப் போரில் முதன் முதலில் தமது நிரந்தர இராணுவ பலத்தை புலிகள் பிரயோகித்தும், பரிசீலித்தும் பார்த்தது ஆனையிறவு முகாம் முற்றுகையின் போது.

சார்ள்ஸ் அன்ரனி படைப்பிரிவு அங்கு தான் களத்தில் இறக்கப்பட்டது. ஒரு மாதம் வரையான முற்றுகை. எனினும் வெற்றிலைக்கேணி கடல் வழியாக இறங்கி முன்னேறிய படையினரை புலிகளால் தடுக்க முடியவில்லை. அதனால் முற்றுகை உடைந்தது. புலிகளுக்கு தோல்வி. ஐநூறுக்கு மேற்பட்டோர் புலிகள் தரப்பில் பலி.

அடுத்தது 'தவளைப் பாய்ச்சல்.'

நிரந்தர இராணுவ பலத்தை புலிகள் பயன்படுத்தியபோதும், நீண்டநாள் சமரை சந்திக்காத வகையில் அதிரடித்தாக்குதலோடு திரும்பிவிட்டார்கள். தாக்குதல் வெற்றி.

அதன் பெயரைப் போலவே 'தவளைப் பாய்ச்சல்' நடவடிக்கை நிரந்தர இராணுவ பலத்தோடு, கெரில்லாப் பாணியும் கலந்த தாக்குதல் முறையாக திட்டமிடப்பட்டிருந்தது.

பதிலடியாக படையினர் 'யாழ் தேவி' இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட போது, புலிகளால் கிளாலிவரை தடுக்க முடியவில்லை.

கிளாலிவரை சென்ற படையினர் அங்கிருந்த படகுகளைக் கொளுத்திவிட்டு திரும்பிச் சென்றார்கள்.

இரண்டாம் கட்ட ஈழப் போரில் புலிகள் நடத்திய 'இதயபூமி 1' (மண்கிண்டிமலை முகாம் தாக்குதல்) வெற்றிகரமான கெரில்லா தாக்குதலாகும்.

அதிலும் கெரில்லாப் போர் முறையில் தமது பலத்தை புலிகளால் நிரூபிக்க முடிந்ததே தவிர, மீண்டும் அங்கு படையினர் நிலைகொண்டு மேலும் பல முகாம்களை நிறுவியதை தடுக்க முடியவில்லை.

மூன்றாம் கட்ட ஈழப் போரில் மண்டைதீவு இராணுவ முகாம் மீது புலிகள் நடத்திய தாக்குதல் நேர்த்தியான கெரில்லா தாக்குதல். ஆனாலும், படையினர் முன்னேறி மீண்டும் அங்கு நிலை கொள்ள முற்படும்போது புலிகள் திரும்பிவிட்டார்கள்.

படையினரின் 'முன்னேறப் பாய்ச்ச'லை முறியடித்த 'புலிப் பாய்ச்ச'லும் நேரடிச் சமரல்ல. அதாவது படையினர் முன்னேறி வரும்போது தடுத்து எதிர்கொண்ட சமரல்ல.

உள்ளே ஊடுருவி கெரில்லாப் பாணியில் நடத்தப்பட்ட தாக்குதல்தான்.

தாக்குதலின் வெற்றியோடு படையினர் திரும்பிச் சென்றதை குறிப்பிடலாம். அதேவேளை படையினர் திரும்பிச் செல்ல வேண்டியதும் பலவீனம்தான். அதாவது அழித்தொழிப்பு யுத்தம் நடத்துமளவுக்கு புலிகளால் படைக்கல சக்தியை பயன்படுத்த முடியவில்லை.

புக்காரா விமானம் வீழ்ந்த நிலையில் வான்படை உதவியும் இல்லாமல் படையினர் தமது சக்தியை இழக்காமல் திரும்பிச் சென்றதை புலிகளால் தடுக்க முடியவில்லை.

ஆக, இதுவரையான புலிகளது நடவடிக்கைகளில் பலமும் உண்டு பலவீனமும் இருந்தது. கெரில்லாத் தாக்குதல்களின் மூலம் பெறப்பட்ட வெற்றிகளும், அதிர்ச்சியூட்டும் கரும்புலித் தாக்குதல்களும் பலவீனமான பக்கத்தைக் காட்டாமல் இருந்தன.

இரண்டாம் கட்ட ஈழப் போருக்குப் பின்னர் புலிகளிடம் நிரந்தர இராணுவம் இருந்தது. ஆனால், கெரில்லாப் பாணியிலான தாக்குதல்களுக்கு பயன்படும் அளவிலேயே அதன் ஆட்பலமும், படைக்கல பலமும் இருந்தது.

-எனினும் ஆட்பலம், படைக்கலம் என்பவற்றில் தவறாத படையினரை, கெரில்லா யுத்த திறன் மற்றும் மனோவலிமை மூலமான பலம் ஈடுசெய்து கொண்டிருந்தது.

எனவே படையினர் தமது முகாம்களுக்குள்ளும், புலிகள் தமது தளப்பிரதேசத்திலும் இருந்து கொண்டு மோதல்களை நடத்திய கட்டத்தில் ஒரு சம பல நிலை காணப்பட்டது.

படையினர் பாரிய நடவடிக்கைக்கு துணியாத வகையில், கெரில்லா அடிகள் மூலம் அச்சமூட்டிக் கொண்டிருப்பதும் புலிகளது இராணுவ தந்திரமாக இருந்தது.

ஆனால், அனைத்தையும் மீறி படையினர் பாரிய நடவடிக்கையில் ஈடுபட்டபோது புலிகளது நிரந்தர இராணுவ பலவீனம் பளிச்சென்று வெளிப்பட்டது.

மூன்றாம் கட்ட ஈழப் போரில் புலிகளது ஆயுதபலத்தில் ஏற்பட்ட ஒரு முன்னேற்றம் விமான எதிர்ப்பு ஏவுகணையாகும்.

ஆனால், துப்பாக்கிக் குண்டுகள் போல பெருந்தொகையாக அவற்றை வாங்க முடியாது. விலை அதிகம். எனவே, இலக்கு வாய்த்தால் மட்டுமே பயன்படுத்துவார்கள். எனினும், விமான எதிர்ப்பு ஏவுகணையால் இம்முறை பலனில்லாமல் போய்விட்டது.

ஏனெனில், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் படைத்தரப்பின் நம்பிக்கை நட்சத்திரம் போர் விமானங்களல்ல; டாங்கிப் படையணியே இம்முறை முக்கிய அச்சாணியாக அமைந்தது.

அடுத்தது ஆட்டிலறி பீரங்கிப் படையினர். நீண்ட தூர எறிகணை ஏவிகளான ஆட்டிலறி பிரங்கிகள் மழைபோல் பொழிகையில் புலிகளால் ஒரு இடத்தில் நிலை எடுத்து நின்று தாக்க முடியாமல் போனது.

கெரில்லாத் தாக்குதல்களில் ஏ.கே.47, ஆர்.பி.ஜி.7, சிறிய மோட்டார்கள் போன்றவைதான் தாக்குதலுக்கு உபயோகமானவை. அவை ஒரு நபரால் தூக்கிச் சென்று சுலபமாக இயக்கக் கூடியவை.

மரபுப் போரில் கனரக ஆயுதங்களே பெறுமதியானவை. ஒரு பிரதேசத்தையே கதி கலங்கவைத்து எதிரில் உள்ள படையை வாட்டி விடக்கூடியவை.

எனவே-புலிகளுக்கு பின்வாங்குவது தவிர வேறு வழியில்லை என்றாகிவிட்டது.

இது-வளைகுடாப் போரில் ஈராக்குக்கு ஏற்பட்ட தோல்விக்கு ஒப்பிடக்கூடியது. அமெரிக்காவும் நேச நாடுகளும் திரண்டு வந்தாலும் தம்மை ஒன்றும் பண்ண முடியாது என்று ஈராக் சொல்லிக் கொண்டிருந்தது.

ஈராக்கின் முப்படைகளும் மிகப் பலம் வாய்ந்தவை. ஈராக் படைகளும் மனோவலிமையில் சளைத்தவர்களல்ல.

முன்னாள் சோவியத் யூனியன் வழங்கிய படைக்கலங்களும் ஈராக்கிடம் இருந்தன.

ஆனால், அமெரிக்காவிடம் இருந்தவை முன்பு கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்களுக்கு மாற்றாகக் கண்டுபிடிக்கப்பட்ட புதிய ஆயுதங்கள்; புதிய ஏவுகணைகள்; துல்லியமாகத் தாக்கும் செய்மதி மூலம் வழி நடத்தப்படும் ஏவுகணைகள்.

அமெரிக்காவும், அதன் நேச நாடுகளும் தேடி வந்து தாக்கின. எப்போதும் தேடிச் சென்று தாக்குவதுதான் தாக்குபவருக்கு வசதி அதிகம். நிலையான ஒரு நாட்டை அல்லது ஒரு பகுதியை தூக்கிக் கொண்டு ஓடவா முடியும்?

ஈராக் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் நிலத்துக்கு அடியில் இருந்த நிலைகள், விமானத்தளங்கள் கூட விமானக் குண்டு வீச்சுக்களால் நிர்மூலமாயின.

ஈராக் ஏவிய ஏவுகணைகளை இடையில் தடுத்து நிறுத்தி அழிக்கக்கூடிய ஏவுகணைகளால் அமெரிக்கா தட்டி விட்டது.

ஈராக்கின் மனவுறுதியை நவீன ஆயுத பலமும், அசுர ஆட்பலமும் வெற்றி கொண்டன.

மனோவலிமை முக்கியமாக இருந்தாலும், நவீன தொழில் நுட்ப காலத்தில் ஆயுதங்களின் பலமும் ஒரு போரின் வெற்றி தோல்வியை தீர்மானிக்கின்றன.

சீனப் புரட்சியில் கூட சோவியத் யூனியன் அள்ளிக்கொடுத்த ஆயுதங்களே செம்படைக்கு கைகொடுத்தன.

வியட்நாம் போரிலும் சோவியத் உதவி என்பது பெரிய விஷயமாக இருந்தது.

வேறு ஒரு சக்தியின் விநியோகம் இல்லாமல் நிரந்தர இராணுவ பலத்தை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் புலிகளால் கட்டியெழுப்ப முடியாது.

அப்படி முடியாத பட்சத்தில் கெரில்லாப் பாணியையே புலிகள் தொடர வேண்டியிருக்கும்.

அவை வெற்றியளித்தாலும் கூட அந்த வெற்றிகளை தொடர்ந்து தக்கவைத்துக் கொள்ள முடியாமல் போகலாம்.

அதனால் புலிகள் சலிப்படையாவிட்டாலும், மக்கள் சலிப்படைந்து போவார்கள். அந்தச் சலிப்பு தமக்கெதிரான வெறுப்பாக மாறாமல் எப்படிச் சமாளிக்கப் போகிறார்கள் என்பதுதான் புலிகள் எதிர்நோக்கும் சவால்.

### சென்றவாரத் தவறு

1987 இல் கரும்புலி மில்லர் தாக்குதல் நடத்தியது தெல்லிப்பளை என்று தவறுதலாக இடம் பெற்றிருந்தது. நெல்லியடியில் என்று திருத்தப்படவேண்டும். நெல்லியடி மகாவித்தியாலயத்தில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் மீதே 'சக்கை' வொறியில் சென்று தாக்குதல் நடத்தப்பட்டது.

## அதிரடி அய்யாத்துரை



**போ**ங்கோ, போங்கோ எண்டு சொல்லியும் போகாத ஆட்களை ரெண்டு எழுத்தார் ஒரு பிடி பிடிச்சுப் போட்டினமாம். காலுக்குள் சுட வேண்டி வரும் எண்டும் சொல்லப்பட்டதாம். முகமூடி போட்டதும் காட்டமாக மிரட்டத்தானாம்.

**மு**ந்தி ஒரு காலத்திலையும் பாணுக்கு கியூ நிண்டதுதான். அந்த நேரத்திலை மரவள்ளிக்கிழங் கெண்டாலும் கிடந்தது. இப்ப அதுவும் இல்லை. யாழ் நகரிலிருந்து நாவற்குழி தாண்டி தென்மராட்சிக்குப் போற பாதையிலை பிணங்கள் கிடக்குதாம். கண்டவர் வந்து சொன்னவர். வயிற்றடி கொடிது ஷெல்லடியைவிட.

**அ**ந்தக் காலத்திலை வெளிநாட்டு இயக்கங்களைப் பார்த்து நம் நாட்டு இயக்கங்கள் சில பெயர் வைத்துக் கொண்டது. இப்ப கதை வேறு. வளைகுடா புலிகள் எண்டு ஒரு இயக்கம் புதுசா வெளிக்கிட்டிருக்குதாம். சவுதி அரேபியாவிலும் ரெண்டு எழுத்து கிலி பரவப்போகுதோ தெரியல்லை.

**யா**ழ் குடாநாட்டிலை ரெண்டு எழுத்தாரை ஆதரிச்சுக் கொண்டிருந்த புத்திஜீவிகள் சிலர் கருதி மாறத் தொடங்கிப் போட்டினமாம். யாழ் உயர் கல்விபீட மருத்துவப் பிரிவுத் தலைவரையும் வெளிக்கிடச் சொன்னவையாம் ரெண்டு எழுத்தார். அவர் தனது நண்பர்களுக்கு மட்டும் கேட்கக்கூடியதாக ஆங்கிலத்தில் சொன்ன வார்த்தையை தமிழில் மொழிபெயர்த்தால், "மடையர்கள்" என்று அர்த்தம்! தங்களுக்கு ஒரு பிரச்சனையும் வராமல் ஈழம் எடுத்துக் கொடுத்தால் புத்தி ஜீவிகளுக்கு படு சந்தோசமாயிருக்கும். அப்படி நடந்தா என்ன சொல்லுவினம் தெரியுமோ? "ரியலி கிரேட்".

**வி**சாரணையே செய்யாமல், அடையாள அட்டையை வாங்கிப் பெயரை மட்டும் பதிவு செய்து போட்டு உள்ளே போடுகினமாம். குறைஞ்சது ஒரு கிழமை கம்பி எண்ண வேண்டியதுதான்.

**தொ**ழில் நுட்பம் படிச்ச சிலர் அதைப் பற்றி மூச்சே விடாமல் இருக்கினமாம். பட்டம் கிடைச்சதை வெளியே சொல்லுறதிலை என்ன தயக்கம் எண்டு நீங்கள் யோசிப்பியள். நியாயம்தான். அவை பயப்பிடுறது ஏன் தெரியுமோ? விஷயம் கசிஞ்சா இயக்கம் அழைக்குமாம். இது தென்மராட்சி முகாம் ஒண்டிலையிருந்து வந்த தகவல்.

**தி**ருவிழாவிலை பிள்ளைகளைத் தவறவிட்டா ஒலிபெருக்கியிலை அறிவிப்புச் செய்து கண்டுபிடிக்கலாம். ரெண்டு மணி நேரத்திலை அவசரமாக வெளிக்கிடும்போது உறவினர்களைத் தவறவிட்டவை எப்படி எங்கையென்றுதேடுறது? வடபகுதிப் பத்திரிகைகளில் 'காணவில்லை' விளம்பரங்கள் பக்கம் பக்கமாய் வந்து கொண்டிருக்கு.

**இ**ரண்டு மணி நேரத்திலை வெளிக்கிடுமாறு ரெண்டு எழுத்தார் ஒலி பெருக்கியில் அறிவிச்ச நேரத்திலை சிலர் 1990ம் ஆண்டையும் நினைச்சுப் பார்த்தவையாம். 90 அக்டோபரில் தானே இரண்டு நாளில் வெளியேறும் உத்தரவு முஸ்லிம் மக்களுக்கு விடுக்கப்பட்டது.

**வ**ரவு-செலவுக்கு ஆதரவாக கூட்டான கட்சி வாக்களிச்சுப் போட்டுதல்லோ. பாதுகாப்பு அமைச்சுக்கான தனியான வாக்கெடுப்பிலை மட்டும் கலந்துகொள்ளாமல் நழுவலாம் எண்டு யோசிக்கினமாம். பட்ஜெட்டில் பாதி நிதி பாதுகாப்புச் செலவினத்துக்குத்தான் ஒதுக்கப்பட்டிருக்குது. அதை ஆதரிக்கிறது போருக்கான ஒதுக்கீட்டை ஆதரிக்கிற மாதிரித்தானே! பிறகு ஏன் பாருங்கோ இடையில் ஒரு நாடகம்? பட்ஜெட் பிடிக்கேல்லை எண்டு சொல்லவும் தயக்கம். நாடகம் போடாவிட்டால் அடுத்த தேர்தல் வந்தால் சொல்வதற்கு சில கதைகள் வேணுமே எண்டும் நினைக்கினம். நல்லா 'ரீல்' சுத்துகினம்.

**த**மிழ் கட்சிகள் கூடிப் பேசுறது எண்ட விஷயம் பத்திரிகைகளுக்கான அறிக்கைக்கு மட்டும்தான். இனிய தமிழ் மக்களே உங்களுக்காக நாங்கள் கூடி ஆராய் கிறோம் எண்டு காட்ட வேணுமல்லோ. பெரிய இடம் சந்திக்க மறுத்தவுடனை அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப் போகினம் எண்டு நான் பயந்து போனேன். நல்ல வேளையாக அப்படி ஒண்டும் நடக்கேல்லை. சந்திக்க மறுப்பது நியாயம்தானோ எண்ட மாதிரி உருக்கமாக ஒரு கடிதம் அனுப்பிப் போட்டினம்.அது போதும்.

**கா**தலர்களுக்கு பெரிய சொத்து சோகம்தானாம். மீனாகுமாரி எழுதிய கவிதை:

"என் சோகத்தை
யாரும் நீக்க முயலாதீர்கள்.
இது என்னிடமே இருக்கட்டும்.
ஏனென்றால் இது என்னுடையது?"



படிப்பகம்

# அரசியல் தொடர்

அற்புதன் ~ எழுதுவது



## ராஜீவ் வலியுறுத்திய நம்பகத்தன்மை

### ராஜீவின் பேட்டி

குவைத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பேட்டி வெளியாகியிருந்தது.

அப்பேட்டியில் ராஜீவ் காந்தி இலங்கை அரசின் போக்கு மீதும் அதிருப்தி தெரிவித்திருந்தார்.

பேட்டியின் விபரம் இதுதான்: "இலங்கையில் வன்செயல்கள் தமிழ் தீவிரவாதப் பிரிவினரால் தூண்டிவிடப்பட்டாலும், இலங்கை ஆயுதப் படையினரின் நம்பகமற்ற தன்மையே உண்மையான பிரச்சனையாக இருக்கிறது" என்றார் ராஜீவ்.

"ஆயுதப் படைகளின் வன்செயல்களை ஜே.ஆர். மறுத்திருக்கிறாரே?" என்று குறுக்கிட்டுக் கேட்டார் நிருபர். அதற்கு ராஜீவ் சொன்னார்: "சில சம்பவங்களைத்தான் அவர் மறுத்திருக்கிறார். ஆனாலும் உலகம் பூராவுமுள்ள வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் தெரிவிக்கும் செய்திகள் இலங்கை அரசு கூறுவதற்கு முற்றிலும் முரணாகவே உள்ளன. இத்தகைய நம்பிக்கையின இடைவெளி நிச்சயமாக அகற்றப்பட வேண்டும்" என்றார் ராஜீவ்.

ராஜீவ் காந்தி தொடர்ந்து சொன்ன கருத்துக்களில் முக்கியமான பகுதிகள் இவை:

"இலங்கை ஜனாதிபதி புதுடில்லி வந்திருந்தபோது தீர்வு தொடர்பான அடிப்படையொன்றை வகுத்திருந்தோம்.

இது இலங்கை அரச தரப்பினரும், தமிழர் தரப்பினரும் சேர்ந்து பேசித் தீர்மானிக்க வேண்டிய விடயம் என்பதால் அவற்றை எழுத்தில் வடிக்காமல் விட்டோம்.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டுமானால் பேச்சுக்கு ஆரம்ப திட்டமாக அமையக் கூடிய நகல் திட்டமொன்று அவசியம்.

இரண்டாவது, இலங்கை அரசின் ஆயுதப்படைகளது நம்பகத்தன்மையை நிலைநிறுத்த ஏதாவது செய்தாக வேண்டும். இந்த இரண்டுமில்லாமல் முன்னேற்றம் ஏற்பட முடியாது.

இதனை இலங்கை அரசின் தூதுக் குழுத் தலைவர் எச்.டபிள்யூ.ஜெயவர்த்தனாவிடம் நான் வலியுறுத்தினேன்" என்று கூறியிருந்தார் ராஜீவ்.

"புலிகள் இயக்க ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை ஏன் நாடு கடத்தினீர்கள்?" என்று ராஜீவிடம் கேட்கப்பட்டது.

அதற்கு ராஜீவ் சொன்ன பதில்: "இலங்கைப் பிரஜையாகவோ, இந்தியப் பிரஜையாகவோ இல்லாத இருவர் தொடர்பாக நாம் பெரும் சர்ச்சைகளை எதிர்நோக்கினோம். அதனால் நடவடிக்கை அவசியம் எனக் கருதினோம்."

அன்ரன் பாலசிங்கம் பிரிட்டிஷ் குடியுரிமை பெற்றவர். ரெலோ சார்பில் திம்பு பேச்சில் கலந்துகொண்ட சத்தியேந்திராவும் பிரிட்டிஷ் குடியுரிமை பெற்றிருந்தவர். அதனைத்தான் ராஜீவ் காந்தி அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

தற்போதும் திரு.அன்ரன் பாலசிங்கமும்; அவரது பாரியாரும் வெளிநாட்டுக் குடியுரிமையை வைத்திருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

"இலங்கை இனப்பிரச்சனையில் இரு தரப்புக்கும் கௌரவமளிக்கக் கூடிய வகையிலான தீர்வொன்றைக் காண்பதுதான் இந்தியாவின் நோக்கம். அதற்காகவே இந்தியா உழைத்துக் கொண்டிருக்கிறது" என்றும் தனது பேட்டியில் சொல்லியிருந்தார் ராஜீவ் காந்தி.

### வினோதமான விளம்பரம்.

இக் காலகட்டத்தில், அதாவது 1985 செப்டம்பர் மாதமளவில் ஒரு பத்திரிகை விளம்பரம் பலரது கவனத்தை ஈர்த்தது.

சிங்களப் பத்திரிகைகளில் வெளிவந்த அந்த விளம்பர வாசகங்கள் இதுதான்:

"எங்களுக்கு சில நல்லவர்கள் தேவை: அவர்கள் விவேகம் மிக்கவர்களாகவும், திடகாத்திரமுடையவர்களாகவும், தேசப்பற்று மற்றும் தலைமைத்துவ ஆற்றல் உடையவர்களாகவும் இருந்தால் வாருங்கள். எம்முடன் இணைய வாருங்கள்."

விளம்பர வாசகத்தோடு இராணுவத்தினரின் சின்னமும் காணப்பட்டது.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும் என்பதில் இலங்கை அரசும் நம்பிக்கை கொண்டிருந்தமைக்கு அந்த விளம்பரமும் ஒரு அத்தாட்சி.

### தமிழ் நாட்டில் கொந்தளிப்பு

1985 செப்டம்பர் மாதத்தில் தமிழ்நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக நடைபெற்ற எழுச்சிகள் பற்றி குறிப்பிட்டேயாக வேண்டும்.

1985 செப்டம்பர் 24ம் திகதி தமிழ்நாடு மாநிலத்திலும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத்திலும் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டது.

தமிழக மாநில அரசும், பாண்டிச்சேரி யூனியன் பிரதேச அரசும் முன்னின்று பூரண ஹர்த்தால் நடத்த ஒத்துழைத்தன.

தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர். தலைமையில் சென்னை மெரீனா கடற்கரையில் 2 ஆயிரம் தொண்டர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இந்திரா காங்கிரஸ் கட்சியினர் மெரீனா கடற்கரையில் காந்தி சிலையருகே உண்ணாவிரதம் இருந்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் (தி.மு.க) ஹர்த்தாலில் கலந்து கொள்ளவில்லை.

தி.மு.க. தலைமையில் செயற்பட்டுவந்த தமிழீழ ஆதரவாளர் அமைப்பு சற்றே தீவிரமாகச் செயற்படத் தொடங்கிய நிலையில், எம்.ஜி.ஆர். நடத்திய போராட்டம்தான் பூரண ஹர்த்தால்.

தி.மு.கவை இலங்கைத் தமிழர் விடயத்திலும் தன்னை மிஞ்சாத வகையில் வைத்துக்கொள்ளவே எம்.ஜி.ஆர். எப்போதும் விரும்பியிருந்தார்.

எம்.ஜி.ஆர். நடத்திய பூரண ஹர்த்தால் மாநில அரசே முன்னின்று நடத்திய காரியம். பஸ்கள் ஓடவில்லை. ரயில்கள் ஓடவில்லை. அரச அலுவலகங்கள் இயங்கவில்லை. சுருக்கமாகச் சொல்வதாயின் அத்தியாவசிய சேவைகள் தவிர மற்றவை அனைத்தும் ஸ்தம்பித்தன.

அதனைவிட பெரிய ஒரு போராட்டத்தை தி.மு.கவால் நடத்த முடியாது என்று எம்.ஜி.ஆருக்கு தெரியும்.

எம்.ஜி.ஆர் மேற்கொண்ட இன்னொரு நடவடிக்கையும் குறிப்பிடப்படவேண்டியது.

தமிழ்நாடு மாநில அரசின் ஊழியர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு நிதி கொடுக்க வேண்டும் என்று கூறினார் எம்.ஜி.ஆர்.

அதற்கு முன்னோடியாக தனது சார்பாக இரண்டாயிரம் ரூபாவை வழங்கி கொடி விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

தமிழக தலைமைச் செயலகத்தில் பெரிய விழாவாக கொடி விற்பனை நிகழ்ச்சி ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுமார் 10 இலட்சம் தமிழக அரச ஊழியர்கள் தமது ஒரு நாள் சம்பளத்தை இலங்கைத் தமிழர்களுக்காக வழங்க முன்வந்தனர்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அந்தச் செய்தியை மேடையில் அறிவித்தபோது எம்.ஜி.ஆர். உண்மையாகவே உணர்ச்சி வசப்பட்டு விட்டார்.

தனது நாற்காலியைவிட்டு எழுந்து வந்து மைக்கைப்பிடித்த எம்.ஜி.ஆர், "அண்ணா நாமம் வாழ்க" என்று மூன்று தடவை கூறினார்.

1985 செப்டம்பர் மாதம் 24ம் திகதி உண்ணாவிரதம் நடந்தது என்று கூறினேன் அல்லவா?

சென்னையில் செங்கல்பட்டு என்னும் பகுதியிலும் உண்ணாவிரதம் வெகு சிறப்பாக நடைபெற்றது. உண்ணாவிரதத்திற்கு தலைமை தாங்கியவர் செல்வி.ஜெயலலிதா. அப்போது அவர் அ.தி.மு.கவின் கொள்கை பரப்பும் செயலாளர்.

தென்னிந்திய திரைப்பட நடிகர்களும் உண்ணாவிரதம் நடத்தினார்கள். இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் தலைமை தாங்கினார்.

சென்னை நகரில் மட்டும் 65 இடங்களில் உண்ணாவிரதம் நடைபெற்றது.

சென்னையில் நடைபெற்ற மற்றொரு சம்பவம் நெஞ்சை உலுக்கக் கூடியது.

முத்து என்னும் முதியவருக்கு 75 வயது. எட்டுப் பிள்ளைகள்.

மெரீனா கடற்கரைக்கு சென்ற முத்து தனது உடலெங்கும் மண்ணெண்ணையை ஊற்றிக் கொண்டார்.

"தமிழக அரசே முதலைக் கண்ணீர் வடிக்காதே" என்று கூறிக்கொண்டே தன்னைப் பற்ற வைத்துக்கொண்டார்.

வேறு சிலரும் தீக்குளிப்பு முயற்சியில் ஈடுபட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

### யாழில் உண்ணாவிரதம்.

இதேவேளை யாழ்ப்பாண பல்கலைக் கழக மாணவர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

வெலிக்கடை சிறையில் இருந்த தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு கோரியே உண்ணாவிரதப் போராட்டம் வடக்கில் ஆரம்பித்தது.

1985 ஆகஸ்ட் 27ம் திகதி முதல் யாழ்-பல்கலைக்கழக மாணவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

யாழ்-குடாநாட்டில் பல கிராமங்களில் பொதுமக்கள் பங்குகொள்ளும் உண்ணாவிரதங்கள் நடத்தப்பட்டன. உண்ணாவிரதப் போராட்டத்திற்கான கோரிக்கை இரத்தினச் சுருக்கமானது. ஆனால் உரமானது. அது இதுதான்:

"விசாரணை செய், அல்லது விடுதலை செய்!"

18 மாத காலத்திற்கும் மேலாக தமிழ் இளைஞர்களை சந்தேகத்தின் பெயரில், விசாரணையில்லாமல் தடுத்துவைத்ததை கண்டித்தே மாணவர்கள் போராட்டம் நடத்தினார்கள்.

ஜே.ஆர். அரசு உண்ணாவிரதப் போராட்டங்களுக்கு மதிப்பளிக்க தயாராக இருக்கவில்லை. ஆனாலும் சிறையில் உள்ள இளைஞர்களை அவர்களது பெற்றோர்கள் இரு வாரங்களுக்கு ஒரு முறை பார்வையிடலாம் என்று அனுமதித்தது.

அப்போது வெலிக்கடைச் சிறையில் பெண்கள் உட்பட 187 தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

பேராசிரியர் சிவத்தம்பி அப்போது யாழ்-பிரஜைகள் குழுவின் தலைவராக இருந்தார்.

யாழ்-பிரஜைகள் குழுவினர் வெலிக்கடை சிறையில் உள்ள கைதிகளைப் பார்வையிடவும் அரசு அனுமதி வழங்கியிருந்தது.

செப்டம்பர் மாதம் 24ம் திகதி யாழ் நகரில் பல்கலைக்கழக மாணவர்கள் மாபெரும் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள்.

யாழ்ப்பாண அரச செயலகத்தை முற்றுகையிட்ட மாணவர்கள், அரச செயலக கொடிக் கம்பத்தில் கறுப்புக் கொடியை ஏற்றினார்கள்.

மழை, வானம் இடிந்ததுபோல் கொட்டியது. கொட்டும் மழையிலும் ஊர்வலமும், ஆர்ப்பாட்டமும் நடந்தன.

செப்டம்பர் 26ம் திகதி முதல் யாழ் குடாநாட்டில் யாழ் பல்கலைக்கழக மாணவர்களால் பாதயாத்திரை ஆரம்பிக்கப்பட்டது.

## கொட்டும் மழையில் மாணவர் போராட்டம்

தொடர்ந்து எட்டு நாட்கள் கிராமம் கிராமமாகச் சென்றனர்.

சிறையிலுள்ள இளைஞர்களை விடுதலை செய்யும் போராட்ட நடவடிக்கை என்ற போதிலும், அரசுக்கு எதிரான உணர்வுகளை வளர்த்துவிடும் வகையில் அந்தப் போராட்டங்கள் அமைந்திருந்தன.

இரவில் தாம் தங்கியிருக்கும் கிராமங்களில் கவியரங்கு, வில்லுப்பாட்டு என்று பல்வேறு நிகழ்ச்சிகளை மாணவர்கள் நடத்தினார்கள்.

## கடத்தப்பட்ட காந்தீயத் தலைவர்

### சென்னையில் கடத்தல்

காந்தீய இயக்கத் தலைவராக இருந்தவர் ச.அ.டேவிட். புளொட் இயக்கத்தின் தீவிர ஆதரவாளர்.

பனாகொடை, வெலிக்கடை, மட்டக்களப்பு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்.

மட்டக்களப்பு சிறையுடைப்பின் பின்னர் சென்னை சென்றுவிட்டார் டேவிட். அவரை டேவிட் ஐயா என்றுதான் அழைப்பார்கள்.

சென்னையில் அண்ணா நகரில்தான் டேவிட் ஐயா குடியிருந்தார்.

2.8.1985 அன்று இரவு பத்துமணிக்கு தனது வீட்டுக்கு சென்று கொண்டிருந்த டேவிட் ஐயாவுக்கு குறுக்கே ஒரு வேன் வந்து நின்று வழிமறித்தது.

டேவிட் ஐயா சுதாகரிப்பதற்கிடையில் நான்கு இளைஞர்கள் அவரை குண்டுக்கட்டாகத் தூக்கி வேனில் போட்டுக் கொண்டு பறந்தனர்.

பின்னர் வேனில் இருந்து ஒரு காருக்குள் மாற்றப்பட்டார். கார் சற்று தூரம் சென்றதும் கார் சாரதி ஆசனத்தில் இருந்தவர் கேட்டார், "யாரைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்?"

டேவிட் ஐயாவை அமுக்கிப் பிடித்திருந்தவர் சொன்னார்; "டேவிட் ஐயாவை!" சாரதி ஆசனத்தில் இருந்தவர் சொன்னார்: "வசந்தனைத்தானே பிடிக்கச் சொன்னது." மற்றவர் சொன்னார்; "வசந்தன் வரவில்லை. அதுதான் இவரைப் பிடித்தோம்".

சிறிது தூரம் சென்றதும் ஆட்கள் நடமாட்டமில்லாத பகுதியில் காரை நிறுத்தி டேவிட் ஐயாவை தள்ளிவிட்டு, கார் பறந்து விட்டது. டேவிட் ஐயாவுக்கு ஆபத்து ஒன்றுமில்லை.

டேவிட் ஐயாவைக் கடத்திச் சென்றது புளொட் அமைப்பினர். இது புளொட் உள் இயக்க மோதலின் ஒரு கட்டம்.

வசந்தன் என்று குறிப்பிடப்பட்டது சந்ததியாரை. சந்ததியாரும் டேவிட் ஐயாவும் நல்ல ஒட்டு. இருவரும் சேர்ந்து வருவார்கள்; சந்ததியார் டேவிட் ஐயாவீட்டில் தங்க வரலாம் என்று காத்திருந்தனர். அவர் வரவில்லை. டேவிட் மாட்டினார்.

புளொட் அமைப்பில் முக்கியமானவராக இருந்த வசந்தனுக்கும், புளொட் தலைவர் உமா மகேஸ்வரனுக்கும் இடையில் பிரச்சனை.

பிரச்சனை வளர்ந்து சந்ததியாரை தீர்த்துக்கட்டும் நோக்கத்தோடு தேடும் அளவுக்கு சென்றது.

பின்னர் சந்ததியார் புளொட் அமைப்பினரால் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்ததியார் தொடர்பாக முன்னரும் குறிப்பிட்டிருக்கிறேன்.

இளைஞர் பேரவையில் தீவிர உறுப்பினர். அல்பிரட் துரையப்பா கொலை வழக்கிலும் கைது செய்யப்பட்டு வழக்கு ஜோடிக்கப்பட்டவர்.

இளைஞர் பேரவையின் தீவிரம் போதாது என்று, அதிலிருந்து பிரிந்து 'தமிழ் இளைஞர் பேரவை அணி' தலைவராக இருந்தவர். வவுனியாவில் காந்தீய இயக்க வேலைகளில் ஈடுபட்டவர்.

## அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

### அநுராவின் பேச்சு

1985 செப்டம்பரில் எதிர்க்கட்சித் தலைவர் அநுரா பண்டாரநாயக்கா.

முல்கிரிகலை என்னும் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றினார் அநுரா பண்டாரநாயக்கா.

பேசியதில் முக்கால்வீதம் இனவாத விஷம். அந்தப் பேச்சிலிருந்து ஒரு பகுதி:

"ஜே.வி.பிக்கு தடைவிதித்த அரசாங்கம் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஏன் தடைவிதிக்கவில்லை?

தமிழர்கள் இன்று இந்தியாவில் இருந்து கொண்டு, இந்த நாட்டை துண்டாட திட்டமிடுகின்றனர்.

இன்று இந்த நாட்டின் முக்காற் பங்கை தமிழர்கள் பிடித்து விட்டனர். மக்களை ஏமாற்ற அரசாங்கம் முயல்கிறது.

இன்று வடக்கில் தமிழர் ஆட்சியே நடைபெறுகிறது. கிழக்கில் மட்டுமென்ன, அங்கும் தமிழர் ஆட்சியே வேரூன்றி நிற்கிறது.

1977ம் ஆண்டு ஆட்சி ஒப்படைக்கப்படும்போது யாழ்ப்பாணப் பகுதியில் 25 ஆயிரம் சிங்களவர்களும், மன்னார், வவுனியா பகுதிகளில் 40 ஆயிரம் சிங்களவர்களும், சேருவில, தெஹிவத்த பகுதிகளில் 20 ஆயிரம் சிங்களவரும் வாழ்ந்து வந்தனர்.

எனினும், தற்போது அவர்கள் அனைவரும் அங்கிருந்து துரத்தியடிக்கப்பட்டுள்ளனர். சிங்கள மக்களுக்கு இத்தனை சோதனைகளா?" அதுதான் அநுராவின் பேச்சு.

தென்னிலங்கை அரசியல் கட்சிகள் மாறி மாறி இனவாதத்தை தூண்டியதற்கான ஒரு சிறு உதாரணம்தான் அது.

### கிளிநொச்சியில் குறி.

1985 செப்டம்பர் மாதத்தில் கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மீது மீண்டும் ஒரு முறை குறிவைக்கப்பட்டது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். வைத்த குறி தப்பியதையும், தாக்குதல் தோல்வியில் முடிந்ததையும் முன்னர் விபரித்திருந்தேன்.

இப்போது குறிவைத்தது தமிழீழ இராணுவம். (TEA) தம்பாப்பிள்ளை மகேஸ்வரனின் தலைமையில் ஒரு வித்தியாசமான திட்டம் தீட்டப்பட்டது. அதன் விபரங்களை வரும் வாரம் தருகிறேன்.

(தொடர்ந்து வரும்)

## 87இல் புலிகள் விமானம்

'87ல் புலிகளால் வெள்ளோட்டம் விடப்பட்ட விமானம்.



யாழ்-குடாநாட்டில் நீர்வேலியில் புலிகளது விமானத் தளம் ஒன்று பிடிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

1987 இல் புலிகளது விமானம் பற்றி அமெரிக்க 'ரைம்' சஞ்சிகை படத்தோடு வெளியிட்ட செய்தி ஒன்று.

"அரச இலக்குகளை தாக்குவதற்காக புலிகள் ஒரு சிறிய ரக விமானத்தை தயாரித்துப் பார்த்திருக்கிறார்கள். இரண்டு ஆசனங்களைக் கொண்ட அந்த மென்ரக விமானம் உலோகக் குழாய்களாலும், அலுமினியத் தகடுகளாலும் வடிவமைக்கப்பட்டது. ஜனவரி 1987 இல் பரீட்சார்த்தமாக வெள்ளோட்டம் விடப்பட்டது. பத்தடி உயரம் வரை எழுந்து விட்டு தரையில் விழுந்து மோதியது. அதனால் இறக்கைகளும், சக்கரங்களும் சேதமாகின. பின்னர் அவற்றை திருத்தி மீண்டும் பறக்கவிட முயற்சிக்கப்பட்டது. ஆனால் அது இயங்க மறுத்து விட்டது. எனினும் புலிகளால் விமான தயாரிப்பில் வெற்றி காணக்கூடிய சாத்தியம் இல்லாமல் இல்லை."

One of the Tigers' most daring creations was a crude two-seat airplane, made of metal pipes and aluminum sheeting, with which they had planned to bomb government targets. On its first test flight last month, the craft rose 10 ft. into the air and crashed. The Tigers repaired its damaged wheels and wings, then tried again. This time the plane failed to get off the ground. It seemed an apt symbol of the persistence—and uncertain future—of the Tigers' cause

TIME, FEBRUARY 16, 1987



www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

### அலசுவது – இராஜதந்திரி

# வடக்கே நிவாரணம் பற்றிய பேச்சுக்களை குழப்பியவர்கள் அரசியல் பேச்சுக்களை விட்டு வைப்பார்களா?

# எட்டு வருடங்களின்பின் மீண்டும் வடக்கே விஸ்தரிப்பை மேற்கொள்ளும் இராணுவம்





"யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் பட்சத்தில் எவ்விதத்திலும் அங்கிருந்து வெளியேற மாட்டோம்" இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க கடந்தவாரம் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பிரிகேடியர் சரத்முனசிங்கவின் இக்கருத்து யாழ்குடாநாடு எதிர்காலத்தில் பூரணமாக இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவிருப்பதையே குறிப்பதாக இருக்கின்றது.

யாழ்குடாநாட்டில் இராணுவத்தினரின் பிரசன்னம் என்பது புதிதான தொன்றல்ல. பலாலி, மாதகல், ஆனையிறவு, வல்வெட்டித்துறைப் பிரதேசங்களில் சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் வெறுமனே இலங்கையின் எல்லைக்காவல் படைபோன்று இராணுவம் நிலை கொண்டிருந்தது.

இன்று பல்லாயிரக்கணக்கான படையினரைக் கொண்டிருக்கும் பலாலி இராணுவ முகாம், பத்துவருடங்களுக்கு முன்னர் ஐயாயிரத்துக்கும் குறைவான துருப்பினருடனேயே இயங்கிவந்தது.

ஆனால் 1983ம் ஆண்டின் பின்னரே வடக்கே இராணுவ விஸ்தரிப்பு விரிவாக இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் குருநாகல், நாவற்குழி, மண்டைதீவு, உட்பட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் இராணுவத்தினர் வசமாகின.

இத்தகைய சூழ்நிலையே வடக்கே தமிழ் போராட்டங்கள் விரிவடையவும் தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்கள் தோன்றவும் வழிவகுத்தன.

வடக்கே இவ்வாறு இராணுவ விஸ்தரிப்பு இடம் பெற்ற அதேசமயம் வன்னிப் பிரதேசம், மற்றும் கிழக்கிலங்கையிலும் இராணுவ முகாம்கள், தளங்கள், சோதனைச் சாவடிகள் என்று பெருக்கமடைந்தன.

இருந்தபோதிலும் 1983ம் ஆண்டிலிருந்து 1987ம் ஆண்டு வரையே வடக்கே இலங்கை இராணுவத்தின் பிரசன்னம் பெரியளவில் இருந்தது. ஆனால் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டதையடுத்து வடக்கே இந்திய இராணுவம், அமைதிப்படை என்று கூறிக்கொண்டு வடபகுதியை ஆக்கிரமித்தது.

இந்தியப்படையின் ஆக்கிரமிப்பு என்ற விடயம் வடக்கு-கிழக்கில் ஒவ்வொரு கிராமத்தையும், முற்றுகையிடுவதாகவே விளங்கியிருந்தது.

இலங்கை இராணுவம் வடக்கே கண்டிராத பகுதிகளைக்கூட இந்திய இராணுவம் கண்டிருந்தது. அத்துடன் வடக்கு-கிழக்கின் மூலை முடுக்குகளையெல்லாம் இந்திய 'ஜவான்கள்' கால்நடையாகவே சுற்றி வந்தனர்.

இது ஆசியாவில் நான்காவது பெரிய இராணுவம் என்ற அவர்களது தராதரத்தைப் பறைசாற்றுவதாக இருந்தது.

இருந்தபோதிலும் இந்திய இராணுவத்தினரால்கூட ஒரு நிரந்தர அமைதியை ஏற்படுத்தவோ அல்லது எல்.ரி.ரி.ஈ.யினரைப் பலவீனப்படுத்தவோ முடியவில்லை.

இந்தியப் படையினரின் வெளியேற்றம் இலங்கைப்படையினரை மீண்டும் எல்.ரி.ரி.ஈ.யினருடன் மோதலுக்கு வழிவகுத்தது. ஆயினும் இலங்கைப்படையினர் பலவீனப்பட்ட நிலையிலேயே எல்.ரி.ரி.ஈ.யினர் முகங்கொடுக்கலானார்கள்.

இந்தியப் படையினரின் வருகையால் இலங்கை இராணுவத்தினரின் முகாம்கள் பலவும் வடக்கே மூடப்பட்டன. இதன் காரணமாக தமது பிடியை வடக்கே அதாவது எல்.ரி.ரி.ஈ.யினரது சிரசாக விளங்கிய யாழ் குடாநாட்டில் இராணுவத்தினரால் வலுப்படுத்துவதென்பது பெரும்பாடாகவே இருந்தது.

1987ம் ஆண்டு அக்டோபர் மாதம் 'ஒப்பேரஷன் பவான்' ( **Operation Bawan)** என்ற பெயரில் வடக்கே எல்.ரி.ரி.ஈ.யினருக்கெதிராக தமது படையெடுப்பை ஆரம்பித்திருந்தனர்.

ஆனால் அந்த ஒப்பரேஷன் ஆரம்பிக்கப்பட்டு சுமார் 20 தினங்களில் இந்தியப்படை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியது. பல்வேறு இந்தியப் படையணிகள் டாங்கிகள், கனரக வாகனங்கள், மற்றும் ஆட்டிலறித் துப்பாக்கிகளின் துணையுடன் தமது முன்னேற்றத்தை மேற்கொண்டிருந்தன.

தற்போது சரியாக எட்டு வருடங்களின் பின்னர் இலங்கைப் படையினர் கடந்த அக்டோபர் மாதம் 'ரிவிரஸ', அதாவது 'சூரியக்கதிர் என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்து ஒருமாத காலத்தைப் பூர்த்தி செய்துள்ளனர்.

'ஒப்பரேஷன் லிபரேஷன்' அல்லது வடமராட்சி ஒப்பரேஷன் என்பதே இலங்கைப்படையினர் வடக்கே ஆரம்பித்த முதலாவது இராணுவ நடவடிக்கையாகும்.

அதன்பின்னர் பல்வேறு மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ ஒப்பரேஷன்களும் இலங்கை இராணுவத்தினரால் வடக்கே மேற்கொள்ளப்பட்டன.

ஆனால் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் 'சூரியக்கதிர்' இராணுவ ஒப்பரேஷன் வடக்கே இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்டிராத நீண்டதொரு இராணுவ ஒப்பரேஷனாகவே இருக்கின்றது.

இந்த ஒப்பரேஷன் பற்றி ஒரு மேற்கத்தேய இராணுவ விமர்சகர் ஒருவர் கருத்து வெளியிட்டபோது, "இராணுவம் பலாலியை விட்டு வெயியேறியதும் ஒரு பிரளயமே தோன்றி விடுமென்றே எதிர்பார்க்க முடிந்தது. ஆனால் எதிர்பார்த்ததைவிட இழப்புக்கள் குறைவாகவே இருந்தது" என்று குறிப்பிட்டிருந்தார்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க கடந்த வாரம் பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றியபோது " எல்.ரி.ரி.ஈ.யினர் இராணுவத்தை ஓர் அங்குலம் தானும் நகர இடமளிக்கமாட்டோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால் ஓர் அங்குலமல்ல பல மைல்களை நாம் கடந்து வந்துள்ளோம்" என்று கூறியிருந்தார்.

எனவே இலங்கை இராணுவம் இத்தடவை பெருமளவு ஆளணிகள், படைக்கலங்கள் ஆகியவற்றுடன் ஒரு வல்லரசுப்படைக்கு நிகரான வகையிலேயே வடக்கே நகர்ந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இருந்தபோதிலும் இந்த இராணுவ விஸ்தரிப்பு அரசு எதிர்பார்த்த அரசியல் தீர்வுக்கு வழிவகுக்குமா? அல்லது எல்.ரி.ரி.ஈ.யினரைப் பலவீனப்படுத்த உதவுமா? என்பதே விடைகாணப்படவேண்டிய கேள்விகளாக இருக்கின்றன.

சூரியக்கதிர் இராணுவ ஒப்பரேஷன் இடம்பெற்றபோது எல்.ரி.ரி.ஈ.யினர் பலர் கொல்லப்பட்டனர். அத்துடன் மேலும் பலர் காயமடைந்தனர். அவர்களது முக்கிய தளங்கள், முகாம்கள் என்பவற்றையும் வடக்கே படையினர் தம்வசப்படுத்தியிருந்தனர்.

இருந்தபோதிலும் அவர்களால் எல்.ரி.ரி.ஈ.யினரைப் பூரணமாகக் களையெடுக்க முடிந்ததா? என்பதே பிரதான கேள்வியாக இருக்கின்றது.

இக்கட்டத்திலேயே இராணுவத்தினரால் வடக்கே கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் எவ்வளவு தூரம் நிலைத்து நிற்க முடியும் என்பதும் கேள்விக்குரியதாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு ஒரு சாத்தியமான நிரந்தரத்தீர்வு அரசியல் ரீதியாக ஏற்படவேண்டுமென்பதே முழு இலங்கையரதும் விருப்பமாக இருக்கின்றது.

இதேவேளை இன்றைய ஆளுங்கட்சியினரின் எல்.ரி.ரி.ஈ.யினருக்கெதிரான சர்வதேசப் பிரசாரம், முன்னைய ஆட்சியாளர்களுடையதைவிட விரிவானதாகவும், பலமானதாகவுமே இருக்கின்றது.

இலங்கை அரசின் பிரதிநிதிகள், குறிப்பாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எல்.ரி.ரி.ஈ.யினரை சர்வதேச அரங்கில் முறியடிப்பதில் தீவிரமாகவே இருப்பதை அறியமுடிகின்றது.

இத்தகைய சர்வதேச பிரசாரத்தில் இலங்கை அரசு வெற்றி காணலாம். ஆனால் இலங்கையில் எல்.ரி.ரி.ஈ.யினரை ஓர் அரசியல் தீர்வுக்கு உடன்படச் செய்வதிலேயே இலங்கை அரசின் வெற்றி தங்கியுள்ளது.

இலங்கையில் எல்.ரி.ரி.ஈ.யினர் ஒரு முக்கிய இயக்கமாக இருக்கிறார்கள் என்பதனையும் அவர்களை ஒதுக்கி விட்டு அரசியல் தீர்வொன்றைக் காணமுடியாதென்பதனையும் ஜனாதிபதி சந்திரிகா நன்குணர்ந்துள்ளார். இதனை அவர் தமது பேட்டிகள் பலவற்றிலும் குறிப்பிட்டுள்ளார்.

எல்.ரி.ரி.ஈ.யினர் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் படையினருடன் மோதக்கூடிய இடங்களில் மோதி, பின் வாங்கக் கூடிய இடங்களில் பின்வாங்கியுள்ளனர்.

பெரும்பாலான எல்.ரி.ரி.ஈ. உறுப்பினர்கள் ஏற்கனவே யாழ்குடாநாட்டிலிருந்தும் வாபஸ்பெற்று வன்னிப் பகுதிக்குள்ளேயும், மற்றும் கிழக்கு மாகாணப் பிரதேசங்களுக்குள்ளும் சென்று விட்டார்களென்றே தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் வடக்கே நிலை கொள்ளும் இராணுவத்துக்கு அச்சுறுத்தல் என்பது அவ்வப்போது இருக்குமென்றே உணர முடிகின்றது.

இதேவேளை எதிர்காலத்தில் அரசியல் ரீதியான பேச்சுவார்த்தைகள் என்பது எவ்வளவு தூரம் சாத்தியமாகும்? என்ற கேள்வியை எழுப்பக்கூடிய சம்பவங்களும் தென்னிலங்கையில் கடந்த வாரங்களில் இடம்பெற்றிருந்தன.

இன்று யுத்தத்தினால் நிர்க்கதிக்குள்ளாகியுள்ள வடபகுதி மக்களுக்கு உதவுவதுபற்றி ஆராய அரசசார்பற்ற உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் சில கொழும்புக்கு வெளியே பெந்தோட்டப் பகுதியில் கூட்டமொன்றை நடத்த முன் வந்திருந்தன.

இக் கூட்டம் மனிதாபிமானப் பணிசார்ந்ததாகவும் வடக்கேயுள்ள தமிழ் அகதிகளின் நிலையைக் கவனத்தில் கொண்டதாகவும் இருந்தது.

ஆனால் பிக்குமார்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானவர்கள் திரண்டு அக்கூட்டத்தைக் கலைத்திருந்தனர். 'எல்.ரி.ரி.ஈ.க்கு உதவுவதை தவிருங்கள். வெளிநாடுகள் இலங்கை விடயத்தில் தலையிடக்கூடாது' போன்ற கோஷங்களை பெந்தோட்டையில் திரண்டிருந்தவர்கள் எழுப்பியிருந்தனர்.

எனவே வடக்கே நிவாரணப் பணி குறித்த விடயங்களை ஆராய்வதற்கே எதிர்ப்பும் ஆர்ப்பாட்டமும் நடத்தியவர்கள், ஓர் அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையையோ அல்லது ஓர் அரசியல் தீர்வையோ எவ்வளவு தூரம் ஏற்றுக்கொள்வார்கள் என்பது சந்தேகமாகவே உள்ளது.

வடக்கு-கிழக்குக்கான அரசியல் தீர்வு என்பது கடந்த காலங்களில் முன் வைக்கப்பட்ட தீர்வுயோசனைகள், தீர்வுத்திட்டங்களிலிருந்து மேம்பட்டதாக இருக்கவேண்டியதே இன்றியமையாததாக இருக்கின்றது.

எனவே அரசியல் சார்பற்ற நிவாரணப் பணிகளையே கூச்சலிட்டுக் குழப்பியவர்கள், அரசியல் ரீதியான சமரசத்தீர்வை எவ்வளவு தூரம் அனுமதிப்பார்கள் என்பதே முக்கிய கேள்வியாக இருக்கிறது. ●







படிப்பகம்

www.padippakam.com

# மனித வெடிகுண்டு

## அதே விமானம்-11

## அங்கேயே தாக்கு

**எழுதுவது-ரசிகன்**

பிரான்சின் ஓர்லி விமான நிலையத்தில் இஸ்ரேலிய எல்.அல். விமானம் பயணிகளோடு தகர்க்கப்பட வைத்த குறி தப்பியது.

மீண்டும் அதே இடத்தில் இன்னொரு தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்று மௌகார்பெல் கூறியபோது, கார்லோசால் அதனை ஏற்க முடியவில்லை.

"முதல் தாக்குதல் இப்போதுதான் நடந்து முடிந்திருக்கிறது. பாதுகாப்பு ஏற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம். விழிப்பாகவும் இருப்பார்கள். மீண்டும் அதே இடத்தில் தாக்குதல் நடத்துவது புத்திசாலித்தனமல்ல" என்றான் கார்லோஸ்.

"முதல் தாக்குதல் தோல்வியில் முடிந்துவிட்டதால், அதே இடத்தில் இன்னொரு தாக்குதலுக்கு துணிய மாட்டோம் என்றுதான் நினைப்பார்கள். வேறு எங்காவது தாக்குதல் நடத்தப்படலாம் என்றுதான் எதிர்பார்ப்பார்கள்." என்றான் மௌகார்பெல்.



கார்லோஸுக்கு உள்ளே கோபம் எகிறியது. பொறுப்பாளரை எதிர்த்து முரண்டுபிடிப்பது முறையல்ல என்பதால் கோபத்தை மறைத்துக் கொண்டான்.

"முதலாவது தாக்குதலையே வெற்றிகரமாக முடித்திருக்கலாம். ரொக்கட் லோஞ்சரை குறிதவறாமல் செலுத்தக் கூடிய ஒருவரை தேர்வு செய்திருக்க வேண்டும். நான் முதலிலேயே நினைத்தேன். அவன் தகுதியானவனல்ல. ரொம்பவும் பதட்டமைந்து, அதனால் குறியை தவறவிட்டு, காரியத்தை கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிட்டான்" என்றான் கார்லோஸ்.

தன்னால் தேர்வு செய்யப்பட்டவன் தகுதியற்றவன் என்பதை மௌகார்பெல்லால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அது தனது தேர்வு செய்யும் தகுதிக்கும் இழுக்கு என்று நினைத்தான்.

"தவறு கார்லோஸ். அவன் தகுதியானவன்தான். தென் லெபனானில் போதிய பயிற்சியும் பெற்றவன். பல சண்டைகளிலும் நேரடியாக ஈடுபட்டவன். தற்செயலாக ஒரு தவறு நடந்துவிட்டது. குறி தவறிவிட்டது. அவ்வளவுதான்." என்றான் மௌகார்பெல்.

அந்த விளக்கம் பூசி மெழுகல்போன்றது. ரொக்கட் லோஞ்சர் மூலமான குறிவைப்பை மட்டுமே நம்பி நடத்தப்பட்ட தாக்குதலில் குறிவைப்பவனை சரியான ஆளாக தெரிவு செய்வதுதான் முக்கியம். என்று கார்லோஸ் நினைத்துக்கொண்டான். மௌகார் பெல் தனது முடிவில் உறுதியாக இருந்தான்.

"ஒரு வாரத்தில் மீண்டும் மறு தாக்குதல் நடத்தப்படும். அடுத்த ஞாயிற்றுக்கிழமை தாக்குதலை வைத்துக்கொள்ளலாம்." என்றான் உத்தரவிடும் தொனியில்.

'முட்டாள்' என்று அவனை மனதுக்குள் சபித்துக்கொண்டான் கார்லோஸ். பொறுப்பாளரின் முடிவை மறுக்க முடியாமையால் மௌனமானான்.

ஓர்லி விமானநிலையத் தாக்குதலுக்கு பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (பி.எஃப்.எல்.பி) உடனடியாக உரிமை கோரவில்லை.

தாக்குதல் வெற்றிகரமாக முடிந்திருந்தாலும் உரிமை கோரப்பட்டிருக்காது.

பாலஸ்தீன-இஸ்ரேலிய சமாதானப் பேச்சை குழப்புவதே தாக்குதல்களின் நோக்கம் என்பதால், உரிமை கோராமல் குழப்பம் நிலவ வைப்பதுதான் பி.எஃப்.எல்.பியின் திட்டம்.

நினைத்தது போலவே நடந்தது.

ஓர்லி விமான நிலைய முதற் தாக்குதல் முடிந்ததும் அதன் பழி யாசீர் அரபாத் மீது விழுந்தது.

இஸ்ரேலிய தகவல்துறை அமைச்சர் அஹரோன் யாரிவ் சுற்றி வளைக்காமல் நேரடியாகவே குற்றம் சாட்டினார்.

"இத் தாக்குதல் தமது நாடுகளில் பயங்கரவாதிகளுக்கு இடம் கொடுத்து வளர்த்து வரும் நாடுகளுக்கு ஒரு எச்சரிக்கையாகும். ஒரு கையில் துப்பாக்கியும், மறுகையில் ஒலிவ் இலையும் வைத்திருப்பதாக யாசீர் அரபாத் ஐ.நா.சபையில் கூறியதன் உட்பொருளை அனைவரும் இப்போது உணர்ந்திருப்பார்கள் என்று" ஒரு போடுபோட்டார் அந்த அமைச்சர்.

அத்தாக்குதல் குறித்து யாசீர் அரபாத்தும் அதிர்ந்து போனார்.

"பாலஸ்தீன விடுதலை முயற்சிகளுக்கு குந்தகம் விளைவிக்கும் சில தீய சக்திகள்தான் தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்" என்று காட்டமாகக் கண்டித்தார் யாசீர் அரபாத்.

ஞாயிற்றுக்கிழமை. தாக்குதலுக்கான ஏற்பாடுகள் வெள்ளிக் கிழமையே தொடங்கி விட்டன.

வெள்ளிக்கிழமை கார்லோஸும், தாக்குதல் குழு உறுப்பினர்களும் விமான நிலையம் சென்று நிலமையைக் கவனித்தனர்.

இம்முறை விமானநிலைய பார்ப்போர் கூடத்திலிருந்து தாக்குதலை நடத்துவது என்று திட்டமிடப்பட்டது.

இஸ்ரேலிய எல்.அல். விமானம் பயணிகளை ஏற்றிக்கொண்டு புறப்படும்போது, 25 மீட்டர் தொலைவிலுள்ள பார்ப்போர் கூடத்திலிருந்து ஆர்.பி.ஜி 7 ரொக்கட்டை ஏவவேண்டும்.

எந்த இடத்தில் நின்று ஏவுவது வசதி என்பதையும் தீர்மானித்துக்கொண்டு திரும்பினார்கள்.

1975 ஜனவரி 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தாக்குதல் குழு புறப்பட்டது.

முதலாவது தாக்குதல் நடந்தது ஜனவரி 13ம் திகதி திங்கட்கிழமை. அதிலிருந்து ஒரு வாரத்திற்குள் இந்தத் தாக்குதல்.

கார்லோஸ் மட்டும் தனியாக தனது சிம்கா காரில் புறப்பட்டார். தாக்குதல் குழுவைச் சேர்ந்த மூவர் வேறு ஒரு காரில் தனியாகச் சென்றனர். இம்முறை அல்ஜீரியா நாட்டவர் ஒருவரும் குழுவில் சேர்க்கப்பட்டிருந்தார். தாக்குதல் குழுவினர் மூவரும் விமான நிலையத்துக்குள் சென்றனர். அவர்களிடம் ஆயுதங்கள் எதுவும் இருக்கவில்லை.

விமானநிலையத்தில் அன்று சென்று நிலமையை அவதானித்தனர்.

விமானநிலையத்தில் அன்று கூட்டம் அதிகமாக இருந்தது. கூட்டம் அதிகமாக இருப்பதால் கூட்டத்தோடு கூட்டமாக நின்று தாக்குதல் நடத்துவதும் சுலபம். மூவரும் திரும்பி வெளியே வந்தார்கள்.

வெளியே 'சிம்கா' காரில் கார்லோஸ் காத்திருந்தான். மூவரும் கட்டை விரலை உயர்த்திக் காட்டினார்கள்.

கார்லோஸ் காரின் பின்கதவை திறந்துவிட, சீற்றுக்கு அடியில் மறைத்து வைக்கப் பட்டிருந்த ரொக்கட் லோஞ்சரின் பாகங்களையும், துப்பாக்கியின் பாகங்களையும் மூவரும் எடுத்துக்கொண்டனர்.

எல்லாமே பாகம் பாகமாகப் பிரிக்கப்பட்டு கொண்டுசெல்லப்பட்டதால், விமானநிலைய பாதுகாப்பு அதிகாரிகளின் கண்ணில் படவில்லை.

இஸ்ரேலிய பார்ப்போர் கூடத்தில் நின்று மூவரும் கவனித்துக் கொண்டிருந்தனர்.

எல்.அல்.விமானம் பயணிகளை உள்வாங்கிக் கொண்டு, புறப்பட ஆயத்தமானது.

மூவரும் மெல்ல நழுவி விமான நிலையக் கழிப்பறைப்பக்கமாகச் சென்றனர்.

கழிப்பறைக் கதவை மூடிவிட்டு, பாகங்களை ஒன்று சேர்த்து ரொக்கட் லோஞ்சர் தயாராகியது. துப்பாக்கியும் தயார்.

கழிப்பறைகளிலும் கூட்டம் அதிகமாக இருந்தமையால் உள்ளே செல்லவும், யார் கண்ணிலும் படாமல் திரும்பிவரவும் தாமதம் செய்யவேண்டி ஏற்பட்டுவிட்டது.

தாமதித்தே திரும்பியதால் விமானம் ரன்வேயில் ஓடி 250 மீற்றர் தூரம் வரை தள்ளிச் சென்றுவிட்டது.

25 மீற்றருக்குள் வைத்து தாக்கப்பட வேண்டிய விமானம் 250 மீற்றர் தள்ளிப் போய்விட்டது.

மூவரும் டென்ஷனாகிவிட்டார்கள். பார்ப்போர் கூடத்தின் முடிவிலுள்ள குறும் சுவரில் ரொக்கட் லோஞ்சரை வைத்து ஒருவர் குறிபார்த்தார்.

பதட்டம் காரணமாக மூவரும் சூழலைக் கணிப்பிடவும், கவனிக்கவும் தவறிவிட்டனர்.

ரொக்கட் லோஞ்சரால் விமானத்தைக் குறிவைப்பதை விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கண்டுவிட்டார்.

அவரிடம் ஒரு இலகு இயந்திரத் துப்பாக்கி (S.M.G.) இருந்தது. அதனால் குறிவைத்து சுடத்தொடங்கினார் ரொக்கட் லோஞ்சரால் குறிபார்த்துக் கொண்டிருந்தவரால் அதனை இயக்க முடியவில்லை. அவரை நோக்கி S.M.G பொழிந்து கொண்டிருந்தது. விமானத்தைக் குறிவைப்பதை நிறுத்திவிட்டு மூவரும் தப்பிச் செல்ல முற்பட்டனர்.

வேட்டுச் சத்தங்களைக் கேட்டு ஏனைய பாதுகாப்பு உத்தியோகத்தர்களும் துப்பாக்கிகளோடு வந்துவிட்டனர்.

மூவரையும் சுற்றி வளைத்து உயிருடன் பிடிக்க வேண்டும் என்பதுதான் அவர்களின் நோக்கம்.

எனவே, தப்பிச் செல்வது சாத்தியமில்லை. தாக்குதல் குழுவில் ஒருவர் தனது துப்பாக்கியால் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை நோக்கிச் சுடத்தொடங்கினார்.

(தொடர்ந்து வரும்)

## ஹலோ டாக்டர்



# பல்லுக்கு என்ன குறை

"வணக்கம் டாக்டர். உங்கள் சிரிப்பே தனி அழகுதான். உங்கள் பற்களுக்கென்ன தினமும் வெள்ளையடிக்கிறீர்களா டாக்டர்? இப்படி பளிச்சென்று மின்னலடிக்கிறதே!"

"விளம்பரக் கம்பனியில் புதிதாக வேலைக்கு சேர்ந்துவிட்டீர்களா என்ன, வந்தவுடன் கொட்டுகிறீர்கள்!"

"இன்று பற்களைப் பற்றிய கேள்விகளை மனதுக்குள் அடைகாத்து வந்திருக்கிறேன். அதுதான்.ஹி.ஹி."

"உங்கள் பற்களும் நன்றாகத்தான் தெரிகின்றன. இயற்கைதானே?"

"இயற்கைதான். அதிலுமா சந்தேகம்.

செயற்கைப் பற்களை கட்டியிருப்பவர்களுக்கு பற்சொத்தை வருமா டாக்டர்?"

"இல்லை. இயற்கையான பற்களில் கடின உறுப்புக்களில் ஏற்படும் பற்சிதைவைத்தான் பற்சொத்தை என்கிறோம்."

"பற்சொத்தையில் படிகாரத்தை வைத்தால் சொத்தை மறைந்துவிடும் என்று சொல்வது உண்மையா டாக்டர்?

"முற்றிலும் தவறான கருத்து. படிகாரம் ஒரு எரிபொருள். அதனை பற்சொத்தையில் வைத்தால் சொத்தை மறையாது. மாறாக ஈறுகளில் வழிந்து, ஈறுகளைப் புண்ணாக்கி வலியைக் கொடுக்கும்."

"பற்களில் படிந்துள்ள கறையை பற்பசைகளாலும் போக்க முடிவதில்லை. அதற்கென்று மருந்துகள் இருக்கின்றதா டாக்டர்?

"பற்களில் கறை படிந்துவிட்டால் அது பற்களோடு இணைந்து விடுகிறது. அதை அகற்ற தடவக்கூடிய மருந்தோ, அல்லது கொப்பளிக்கக்கூடிய மருந்தோ கிடையாது. பல் மருத்துவர்களிடம் பற்கறையை அகற்றும் கருவிகள் வைத்திருக்கிறார்கள். பல் மருத்துவரை நாடுவதே நல்லது"

"பல் வலிக்கு கிராம்பு தைலத்தை உபயோகிக்கலாமா டாக்டர்?"

"பல் வலி ஏற்பட்டால் அது எதனால் ஏற்பட்டது என்று கண்டறிய வேண்டும். அதற்கேற்ப மருத்துவ முறைகளைக் கையாண்டு நோயைக் குணப்படுத்த வேண்டும். பல்வலி வரும் சமயத்தில் மட்டும் கிராம்பு தைலத்தை சிறிய பஞ்சில் நனைத்து அதைக் குழியில் வைத்து அடைக்க வேண்டும். அப்போது பல்வலி சற்றுக் குறையும். சிலர் எல்லா விதமான பல் வலிக்கும் கிராம்பு தைலத்தை சுற்றியுள்ள ஈறுகளிலும் அழுத்துகிறார்கள். அப்போது பல் ஈறுகளில் தைலம் பட்டு சதைகள் எரிந்து புண்ணாக்கிவிடுகின்றன. பல் வலியோடு இந்த வலியும் பெருகி நோயாளியைப் பெரும் தொல்லைக்கு ஆளாக்குகிறது."

"சரி டாக்டர், இது மற்றொரு கேள்வி. சிலருக்கு நகம் கடிக்கும் பழக்கம் இருக்கிறது. அதனால் கெடுதி ஏற்படுமா?"

"நகத்தைக் கடிக்கும் போது நகங்களுக்கு, இடையில் தங்கியிருக்கும் அழுக்கும். அதிலுள்ள பல்வேறு கிருமிகளும் வயிற்றுக்குள் செல்ல ஏதுவாகிறது. இதனால் வயிற்றுப்போக்கு, வயிற்றுக் கடுப்பு போன்ற நோய்கள் வரலாம். நகங்களை வளரவிடாமல் முறையாக வெட்டி வந்தால் நகம் கடிக்கும் பழக்கத்தைத் தடுத்து விடலாம்."

"இரத்தத்தில் சர்க்கரையின் அளவு எவ்வளவு இருக்க வேண்டும் டாக்டர்?"

"காலையில் வெறும் வயிற்றில் 70 முதல் 110ம், உணவுக்குப் பின்னர் 110 முதல் 140க்கு உள்ளேயும் இருக்க வேண்டும். 140க்கு மேலே சென்றால் டாக்டரிடம் சென்றுவிட வேண்டும்."

"மாஸ்டர் 'செக் அப்' அவசியம் செய்து கொள்ள வேண்டும் என்கிறார்களே. எந்த வயதில் செய்து கொள்ளவேண்டும்?"

"பொதுவாக 30 வயதைத் தாண்டிய ஆண், பெண் இரு பாலாருமே 'மாஸ்டர் செக் அப்' செய்து கொள்ளவேண்டும். 30 வயதைத் தாண்டியவர்கள் ஆண்டுக்கு இரு முறையும், 40 வயதைத் தாண்டியவர்கள் ஆண்டுக்கு ஒரு முறையும் செய்து கொள்ள வேண்டும்."

"ஓ.கே.டாக்டர். நன்றி."

## நடு வானில் ஒரு ஒப்பரேசன்

பவுலா டிக்சனுக்கு 39 வயது. ஸ்கொட்லாந்தைச் சேர்ந்தவர். விடுமுறையை ஜாலியாகக் கழிப்பதற்கு பவுலா ஹொங்கொங் சென்றார்.

விடுமுறையைக் கழித்துவிட்டுத் திரும்பும்போது பவுலாவை விமான நிலையத்துக்கு தனது மோட்டார் சைக்கிளில்தான் கொண்டு போய் விடுவேன் என்று அடம்பிடித்தார் பவுலாவின் காதலர். பவுலாவும் சம்மதித்தார்.

ஒரே வாகன நெரிசல். "விமானம் புறப்படப் போகிறது. கொஞ்சம் வேகமாகப் போ." என்றார் பின்னாலிருந்தபடி பவுலா.

மோட்டார் சைக்கிள் பறந்தது. திடீரென்று எதிரிலே ஒரு கார் வர அதன் மீது மோட்டார் சைக்கிள் மோதியது.

சிறிது தூரத்தில் போய் விழுந்தார் பவுலா. காதலரும் தப்பிவிட்டார். பவுலாவுக்கு உடம்பெல்லாம் வலி. கை எலும்பு உடைந்த மாதிரி வலித்தது. விமானத்தைத் தவறவிடக்கூடாது என்ற எண்ணமே மேலோங்கியிருந்தமையால் நோவெல்லாம் பெரிதாகத் தெரியவில்லை.

மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டு டாக்சியில் பறந்து, காதலருக்கு டாட்டா காண்பித்துவிட்டு விமானத்தில் ஏறிவிட்டார். விமானம் புறப்பட்டு நடுவானில் சென்று கொண்டிருந்தபோது பவுலாவுக்கு வலி ஆரம்பித்தது.

வலி பொறுக்க முடியாமல் பவுலா துடித்தார். உடலில் வியர்வை கொட்டியது. கை, கால்கள் நடுங்கத் தொடங்கின.

விமானப் பணிப்பெண்கள் ஓடிவந்து பார்த்தார்கள். பயந்துபோனார்கள்.

விமானப் பணிப்பெண் விமானக் கப்டனோடு ஆலோசனை நடத்தினார்.

"விமானத்தில் டாக்டர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று மைக் மூலம் விமானக் கப்டன் கேட்டார்.

ஏதோ அபாயம் என்று பயணிகள் பயந்தனர். டாம் வாங், ஆங்கஸ் வாலஸ் என்னும் இரு டாக்டர்கள் விமானத்தில் பயணம் செய்தது பவுலாவின் புண்ணியம்.

டாக்டர்கள் இருவரும் பவுலாவை பரிசோதித்தனர். கை எலும்பில் முறிவு எதுவும் கிடையாது. இடுப்பு எலும்பில் முறிவு ஏற்பட்டதைக் கண்டு பிடித்தனர். உடைந்த எலும்பு நுரையீரலைக் குத்தியுள்ளது. நுரையீரலில் ஏற்பட்ட துவாரம் மூலம் சுவாசிக்கும் காற்று வெளியேறி உள்ளது. அந்தக் காற்றால் காற்று குமிழ் உருவாகியது.

நுரையீரல் முற்றிலும் சேதமடைந்திருந்தது. உடனடியாக ஒப்பரேசன் செய்யாவிட்டால் உயிருக்கு ஆபத்து. லண்டன் போய்ச் சேர குறைந்தது ஒரு மணிநேரம் செல்லும். அதுவரை பவுலாவின் உயிர் தங்காது.

### எப்படி நடந்தது?



1: ஆப்பரேஷனுக்கு பயன்படுத்தப்பட்ட சிறிய கத்தி, ஹேங்கர் கம்பி, ரப்பர் குழாய் ஆகியவற்றை பிராந்தியை ஊற்றி சுத்தப்படுத்தப்பட்டது.

2: பவுலாவின் மார்பு பகுதிக்கு மேலே எலும்புகளுக்கு இடையே சிறிய துவாரம் போடப்பட்டது.

3: ஹேங்கர் கம்பியில் ரப்பர் குழாய் சொருகப்பட்டு அந்த துவாரம் வழியாக உடலின் உள் குழாய் திணிக்கப்பட்டது. காற்று குமிழ் வரை அந்த குழாய் சென்றது.

4: பின்னர் ரப்பர் குழாயை வைத்து விட்டு ஹேங்கர் கம்பி மட்டும் உருவப்பட்டது. பின்னர் டாக்டர்கள் பவுலாவின் மார்பை வேகமாக பலமாக அழுத்தினர். காற்று குமிழ், குழாய் மூலம் வெளியேறியது. அந்த காற்று மினரல் வாட்டர் பாட்டிலில் சேரும் வகையில் குழாய் பொருத்தப்பட்டிருந்தது.

5: காற்று குமிழ் முழுவதும் வெளியேறிய உடன் பவுலா மார்பில் குழாயுடன் சேர்த்து செல்லோ டேப்பை டாக்டர்கள் ஒட்டினர். காற்று மீண்டும் உள்ளே போக விடாமல் டேப் மூலம் தடுத்தனர். விமானம் தரை இறங்கும் வரை அந்த டியூப் பவுலா உடலில் இருந்தது.

விமானத்தில் மருத்துவ உபகரணங்களும் கிடையாது. முதல் உதவிப் பெட்டியில் வலி நிவாரணி மட்டுமே இருந்தது.

ஆடைகளைத் தொங்கவிடும் ஒரு ஹேங்கர், ஒரு பிராந்தி போத்தல், ஒரு மினரல் வாட்டர் போத்தல், ஒரு டியூப், செல்லோ டேப் ஆகியவற்றைப் பயணிகளிடம் சேகரித்தனர். ஒப்பரேசன் தொடங்கியது. வலி நிவாரணியாக பிராந்தி கொடுக்கப்பட்டது. விமானம் இலண்டனில் தரையிறங்கும்வரை பவுலாவின் உயிரை டாக்டர்கள் காப்பாற்றினார்கள்.

விமானம் தரை இறங்கியபோது ஆம்புலன்ஸ் தயாராக நின்றது. பவுலா மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்.


இப்போது பவுலாவின் உடல் நிலை தேறிவிட்டது. பவுலாவுக்கு மூன்று குழந்தைகள்.




படிப்பகம்

www.padippakam.com

# பாயவந்தது பாதியோடு நின்றது



கனடாவில் பல பகுதிகளில் வீடு கட்டும் முறையே தனிதான். நிலத்தை ஆழமாக வெட்டி கீழே ஒரு வீடு கட்டிய பிறகுதான் நிலமட்டத்திற்கு மேலே மற்றொரு வீடுகட்டுவார்கள். இந்தப் பழக்கம் எப்படி ஏற்பட்டது தெரியுமா? இரண்டாம் உலகப் போரில் நிலத்துக்கு கீழே இருந்த வீடுகள் தான் மக்களைக் காத்தன. குண்டு வீச்சுக்களில் இருந்தும் தப்ப முடிந்தது. அதுதான் தற்போதும் அப்படியே கட்டிக் கொண்டிருக்கிறார்கள். (யுத்தம் எப்போதும் வரலாம், யார் கண்டது) படத்தில் இருப்பது கனடா வினிபெக் மாநிலத்தில் சமீபத்தில் ஏற்பட்ட ஒரு விபத்து. இளைஞர் ஒருவர் தண்ணி போட்டுவிட்டு தலை கால் புரியாமல் காரை செலுத்தி வந்தார். தறிகெட்டுப் பாய்ந்த கார் வீட்டுக்குள் புகுந்து சுவரையும் உடைத்துப் பாய்ந்தது. நிலத்துக்குக் கீழே இருந்த வீட்டில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வீட்டு உரிமையாளர் தப்பியது அதிஷ்டம். காரில் பாதி மட்டுமே எட்டிப்பார்க்க மீதி சுவருக்கு அப்பால் நின்று கொண்டதால் கார் கீழே விழவில்லை. போக்குவரத்து பொலிஸ்காரர் ஓடிவந்து விபரம் திரட்டுகிறார். பாயவந்த கார் பாதியோடு நின்றதால் உயிர் தப்பிய அதிஷ்டத்தோடு வீட்டு உரிமையாளருக்கு கட்டிலிலிருந்து எழவும் தோன்றவில்லை. சாரதிக்கு படுகாயம். தேவைதான்.




# தாஜ்மஹாலுக்குப் புற்றுநோய்

17ம் நூற்றாண்டில் மொகலாய சக்கரவர்த்தி ஹாஜகான் தன் மனைவியின் நினைவாக பூமிக்கு தந்த கலைப் பரிசு தாஜ்மஹால்.

தங்கள் காதலிக்கு ஒரு தாஜ்மஹாலைக் கட்ட முடியவில்லையே என்று காதலர்கள் பலர் வயிறெரிந்து கொண்டிருக்க, பாவம் தாஜ்மஹாலுக்கு நோய் வந்துவிட்டது.

இந்தியாவில் தாஜ்மஹால் இருக்கும் 'ஆக்ரா' என்னும் இடத்தில் 10 இலட்சம் மக்கள் வாழுகிறார்கள். அங்கு போய் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை நிறுவியது அரசு. வந்தது வினை. எண்ணெய் ஆலையின் புகையும், பளிங்குக் கற்களை நிறம் மாற்றி வருகின்றன. வெள்ளை நிறப் பளிங்குக் கற்கள் மீது கறுப்புத் திட்டுக்கள் தோன்றியுள்ளன. இதனை மார்பிள் கேன்சர் என்று அழைப்பார்கள். பளிங்குக்கற்களில் தோன்றும் இந்த புற்றுநோய் கொஞ்சம் கொஞ்சமாக ஒரு கலைப்பொக்கிசத்தின் அழகையே கொன்றுவிடும் என்று அஞ்சப் படுகிறது. தற்போது சில பாதுகாப்பு நடவடிக் கைகள் எடுக்கப் பட்டுள்ளன. காதலர்களை மட்டுமல்ல காதல் சின்னத் தைக் கூட உலகம் கௌரவிக்கத் தவறுகிறதோ?



# அபயம் தரும் சயனக் கட்டில்



மனிதனை அழிக்க மனிதனே கண்டு பிடிக்கும் ஆயுதங்கள் விதம் விதமாக பெருகிவருகின்றன. அதே நேரம் மனிதனைக் காக்கவும் சில நல்ல விஞ்ஞானிகள் தரமான கண்டுபிடிப்புக்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

படத்தில் இருப்பது அபூர்வக் கட்டில். பூமியதிர்ச்சி ஏற்பட்டாலும் கட்டிலில் படுத்திருப்பவர் அல்லது படுத்திருப்பவர்கள் அஞ்சவே தேவையில்லை. மெல்ல ஒரு குலுக்குக் குலுக்கியமாதிரித்தான் தெரியும். கட்டிலின் எடை 2 தொன். திண்ம உருக்கு, கடினமான ஒட்டுப்பலகை, சொகுசாயிருக்க பஞ்சு எல்லாம் கலந்து உருவாக்கப்பட்டது. பூமியதிர்ச்சி ஏற்பட்டால் கட்டிடங்கள் இடிந்துவிழுந்தாலும் கட்டிலை சுற்றியுள்ள தடுப்பை தாண்ட முடியாது. வெளியே செல்ல மட்டும் முடியாது என்பதால் கட்டிலோடு ஒரு குளிர்சாதனப்பெட்டி, முதலுதவி அறை, மலசல கூடம் என்பவையும் இணைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவில் அது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இன்னும் சந்தைக்கு வரவில்லை. நம்மூரிலும் கிடைக்கக் கூடியதாக இருந்தால் ஷெல் வீச்சுக்களின்போது இடம்பெயரும் தேவை இருக்காதல்லவா. இந்தக் கட்டில் மட்டும் கிடைத்தால், உச்சிமீது ஷெல் வந்து விழுகின்ற போதிலும் .... (அதெப்படி அச்சமில்லாமல் போகும்?)

# ஓணானும் உசத்திதான்


நடிகைகள் நாய் வளர்ப்பார்கள். பூனை வளர்ப்பார்கள். முயலும் வளர்ப்பார்கள். ஆனால் அமெரிக்காவைச் சேர்ந்த ஹொலிவுட் நடிகை கிறிஸ்மைன் ரீஸ் என்ன வளர்க்கிறார் தெரியுமா?, ஓணான் வளர்க்கிறார்.



ஓணான்கள் சாதுவானவை. நமக்கு தொல்லை தருவதும் கிடையாது. நாம் பிரியமுடன் பழகினால், அவையும் நம் விருப்பப்படி நடந்து கொள்ளும். பாசமுடன் பழகும் என்று சேர்ட்டிபிகேட் தருகிறார் நடிகை. ஓணான்கள் உடலில் ஊரும்போது ரொம்ம கிளு கிளுப்பாக இருக்கிறது. அடுத்ததாக தென்னாபிரிக்காவின் பாம்புகளை வாங்கி வளர்க்கப் போகிறேன் என்று சொல்லியிருக்கிறார் கிறிஸ்டைன் ரீஸ். கிறிஸ்டைன் ரீஸ் சாகசக் காட்சிகளில் நடிக்கும் நடிகை. நிஜவாழ்க்கையிலும் சாகசம்தான்.



# பொடி வீசம்மா, பொடி வீசு



அமரர் அறிஞர் அண்ணாத்துரை போன்ற பேரறிஞர்கள் முதல் சாதாரணமனிதர்கள்வரை மூக்குப் பொடியில் பிரியமுள்ளவர்கள் நிறையப்பேர்.

ஜெர்மன் நாட்டிலுள்ள மூக்குப் பொடிப் பிரியர்களுக்கு சமீபத்தில் ஒரு இன்ப அதிர்ச்சி. மூக்குப் பொடிப் பிரியர்கள் 21 பேர் ஒரு பெரிய மேசையின் முன் அமர்ந்திருந்தனர். ஒவ்வொருவர் மூக்கிலும் குறிப்பிட்ட இடைவெளிக்கு ஒரு முறை ஒரே நேரத்தில் மூக்குப் பொடி தூவப்பட்டது. மூக்குப் பொடியைத் தூவியது ஒரு இயந்திரம். இதுதான் உலகின் முதன் முதலில் தயாரிக்கப்பட்ட மிகப்பெரிய மூக்குப்பொடி தூவும் தன்னியக்க இயந்திரம். இதனைத் தயாரித்த மிஸ்டர் 'ஜக்கேல்' ஜெர்மன் ரெக்பா நகரில் மேயராக இருக்கிறார். பொடி வீசம்மா, பொடிவீசு.



படிப்பகம்

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

'ரு' என்ற எழுத்தில் ஆரம்பித்து 'பிலி' என்று பெயர் முடியும் நடிகையை ஞாபகம் இருக்கிறதா? ஒரு நட்சத்திர விடுதியில் வைத்து விவகாரமான விசயத்தில் போலீசில் மாட்டியபிறகு மனநிலை பாதிக்கப்பட்டுள்ளாராம். சென்னையில் தனியார் மருத்துவ நிலையம் ஒன்றில் சிகிச்சை பெற்று வருகிறார். பிலிதான்.

இராமராஜன் என்று அழைக்கப்பட்ட பெயரில் ராமனை வைத்துள்ள நடிகரை தெரியுமல்லவா. தனது 'நளின' நாயகியை முற்றாகவே துண்டித்துவிட்டாராம். முன்னர் வந்த கிசு-கிசுக்கள் உறுதி செய்யப்பட்டுவிட்டன.

அல்வா நடிகை 'கஸ்' தினமும் ஒரு பாடலை முணுமுணுக்கிறாராம்) 'காதல்ரோஜா' என்ற பாடல்தான் அது. படப்பிடிப்புக்குச் சென்றால் முன்பெல்லாம் ஜோக்குகளை வாரிவிட்டு கடிக்கும் 'கஸ்' இப்போது சோகமாய் இருப்பது ஏன்? என்ற பெறுமதியான கேள்விக்கு விடை தேடிக் கொண்டிருக்கிறது கோடம்பாக்கம் படவுலகம்.

மலையாளப் படவுலக கதாநாயகன் கே.ஜெயனுடன் லேட்டஸ்டாகக் கிசு-கிசுக்கப்படுபவர் யார் தெரியுமா? அவரது பெயரில் வார் இருக்கிறது. 'வசி' என்ற கட்டளையும் இருக்கிறது. கண்டுபிடித்து விட்டீர்களா?

## ரஜினிக்கு காவல்

தமிழ்நாட்டில் தற்போது அதிகம் பரபரப்பான, அதிகம் பிரபலமான வி.ஐ.பி. ரஜனிகாந்த்தான். அவரது பாதுகாப்புக்காக இந்திய மத்திய அரசு பொலிஸ் பாதுகாப்பை வழங்க முன்வந்துள்ளது.

சுதந்திரத்தையும், தனிமையையும் விரும்பும் ரஜனிகாந்த் பொலிஸ் பாதுகாப்பை முதலில் விரும்பவில்லையாம். இப்போது கட்டாயம். தமிழக ஆளும் கட்சிக் குண்டர்கள் எந்நேரமும் பாயலாம் என்ற நிலையில் பாதுகாப்பு தேவைதானே.

## இரகசியம்

சென்னையில் சொந்தமாக வீடு வாங்கியிருக்கிறார் நக்மா. ஆனால் அது வாடகை வீடென்று பொய் சொல்லிக்கொண்டிருக்கிறார். ஏன் இரகசியமோ?

# சி னி வி சி ட்

## அரசியல் தேவைதானா?!

கமலஹாசன் எதிலும் வித்தியாசமான கருத்தை வைத்திருப்பவர் என்பது தெரிந்த சமாச்சாரம்தானே. நடிகர்களுக்கு அரசியல் தேவையா? என்ற கேள்விக்கு கமல் சொன்ன பதில் இது: "இன்றைய சூழ்நிலையில் சுதந்திரத்திற்காக போராட்டம் நடத்த வேண்டியதில்லை. சம்பாதிப்பதற்காகத்தான் போராட்டம் நடந்து கொண்டிருக்கு. சுதந்திர போராட்ட காலத்தில் அரசியல் தேவைப்பட்டிருக்கும். இந்தக் காலத்தில் நல்ல கலைஞர்களுக்கு அரசியல் தேவையில்லை" கமலின் கருத்து அது தான்.

## ரஜினியின் பாராட்டு

வசிஷ்டர் வாயால் பாராட்டுக் கிடைத்ததுபோல் சிலிர்த்துப் போயிருக்கிறார் மனிஷா கொய்ராலா. அதாகப்பட்டது; 'பம்பாய்'படத்தை பார்த்துவிட்டு ரஜினிகாந்த் போனில் அழைத்து பாராட்டினாராம். பாராட்டியது மட்டுமல்ல, "மனிஷா நான் உ... ரசிகனாகிவிட்டேன்" என்றும் சொன்னாராம் ஒரேயடியா... குளிர்ந்து போனார் மனிஷா. ரஜினியின் அடுத்த படத்தில் சான்ஸ் கிடைக்கலாம்.





## யார் இந்த...

பாக்கியராஜ்தான் ... பிடித்து அறிமுகம் ... கைகூடவில்லை. அதனா... அறிமுகமானார். இன்... கதி கலங்க வைத்துக் ... பெயர் காவ்யா. அது சொ... வைத்த பெயர் சங்கவி.



தீப்தி பட்நாகர்

## தில்லானா தில்லானா தீப்தி

நடிகர் நாகார்ஜுனுக்கும் ... கிசுகிசுக்களுக்கும் அப்படி ஒரு ... ராசி. மனிஷா கொய்ராலா, பூ... பட்ரா ஆகியோரோடு முன்... இணைத்துப் பேசப்பட்டார். ... போது இந்தி நடிகை தீப்தி பட்... ரோடு சுற்றுகிறார் நாகார்... தீப்தி பட்நாகர் இந்திப் படவு... கவர்ச்சி காட்டி மெல்ல மெல்ல உ... கொண்டிருக்கிறார். கவர்ச்சி, ந... களுக்கு ஏற்ற உடல்வாகு, தெளிவு, ... என்று பல அம்சங்கள் மூலம் ... காட்டி உயர்ந்து கொண்டிருக்கிறார் ... னுடனும் ஒரு இந்திப் படத்தில் ... கொண்டிருக்கிறார் தீப்தி. "நாக் நாக... நாக் தான். அவர் ஒரு ஜென்டில்மேன்" ... நாகார்ஜுனைப் புகழ்கிறார் தீப்தி.

இருவரும் ஒரே கும்மாளம். தில்லானா பாடிக்கொண்டிருக்கிறார் நா... ஜுன். என்று பரவியுள்ள கிசு-கிசுவால் வரும் கவலையே படவில்லை.

## ரஜினியின் கதை

பிரபல புள்ளிகளின் கதைகள் படமா... போது அதில் நடிகர்கள் நடிப்பதுதான் வழக்கம். இ... ஒரு நடிகரின் கதை படமாகப்போகிறது. அதில் அந்த நடிகர்போல் வேறு ஒரு நடிகர் நடிக்கப்போகிறார். அதாவது ரஜினிகாந்தின் கதையை இயக்குநர் ராம-நாராயணன் படமாக்கப்போகிறார். சரவணன் கதாநாயகனாக நடிக்கிறார்.

## தீபாவளி ரேஸ் நீலக்குயில் அவுட்

தீபாவளி ரேஸ் படங்களில் நீலக்குயில் மட்டும் 25 நாட்களுக்குள் மூச்சிழுக்கத் தொடங்கிவிட்டது. பாண்டியராஜன்-ராஜஸ்ரீ நடித்துள்ள 'நீலக்குயில்' நகைச்சுவையான படம். ஆனாலும் பெரிய பட்ஜெட் படங்களுக்கு முன்னால் ஈடுகொடுக்க முடியவில்லை. அதுபோல் அருண்பாண்டியன்-ஷோபனா நடித்த துறைமுகமும் சூப்பர் தோல்வி.

முத்து தொடர்ந்து முதலிடத்தில் இருக்கிறது. குருதிப்புனல், இரகசியப் பொலீஸ் இரண்டும் போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. மக்கள் ஆட்சி, சந்திரலேகா இரண்டும் வசூலுக்கு பாதகமில்லாமல் 30 நாட்களை தொட்டுவிட்டன.

விரைவில் பிரபு- சங்கீதா நடித்த 'சீதனம்' சத்யராஜ்-மீனா நடித்த 'மாமன் மகள்' இரண்டும் திரைக்கு வருகின்றன.

## மதுபாலாவின் வீழ்ச்சி

முகப்பில் இவ்வாரம் தோன்றியிருப்பவர் மதுபாலா. அவரை அழகு படுத்தி ரசிப்பவர் நடிகை ஹேமமாலினி. இந்திப் படவுலகை ஒரு கலக்குக் கலக்கிய ஹேமமாலினியின் அண்ணன் மகள்தான் மதுபாலா. வயதே தெரியாமல் உடலை ஒரு கட்டுக்குள் வைத்திருப்பவர் ஹேமமாலினி. மதுபாலாவுக்கு கட்டுடல் விஷயத்தில் கெட்டியான ஆலோசனைகள் வழங்குவது ஹேமமாலினி தான்.

'ரோஜா' படம் இந்தியிலும் பிரபலமானதால், பம்பாய்க்கு பறந்து போய் அதிரடி போஸ் பல கொடுத்து பிரபலமாகியும் மதுபாலாவின் மார்க்கெட் உயரவில்லை. அதுதான் வருத்தமான செய்தி. என்றாலும் மனம் தளராமல் வாய்ப்புக்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்.

மிதுன் சக்கரவர்த்தியோடு மதுபாலா ஜோடியாக நடித்து சமீபத்தில் திரைக்கு வந்த 'ஜலாட்' நன்றாக ஓடியது மட்டும் ஆறுதலான செய்தி. 'அமைதிப்படையின்' இந்தி வடிவம்தான் 'ஜலாட்'

## நாயக வில்லன்

'ஆசை' படத்தில் வில்லத்தனம் செய்து பிரபலமானவர் பிரகாஷ்ராஜ் ரஜினிகாந்துக்கும் அவருக்கும் ஒரு ஒற்றுமை உண்டு. இருவருமே பெங்களூர்க்காரர்கள்.

பிரகாஷ்ராஜ் பற்றி மேலும் சில தகவல்கள். சொந்தப் பெயர் பிரகாஷ்ரை. பிரகாஷ்ராஜ் என்பது பாலசந்தர் சூட்டிய பெயர். வயது, 30. எடை என்பது கிலோ. இதுவரை நடித்த படங்கள். கன்னடத்தில் 30. தமிழில் 4. டூயட், பம்பாய். நிலா. ஆசை. மனைவியின் பெயர்; லலிதாகுமாரி. (டிஸ்கோ சாந்தியின் தங்கை. அவரும் ஒரு நடிகை) கடவுள் நம்பிக்கை; தொழில்தான் கடவுள். திருப்பம்; 'டூயட்' படம். சந்தோசமான சமாச்சாரம்; மனைவி லலிதா குமாரி கர்ப்பமாக இருப்பது. நீண்டகால ஆசை; நூறு ஜென்மம் எடுத்தாலும் சினிமா நடிகராக பிறப்பது.

## கட்சியில் சேருவாரா?

நடிகர் சரத்குமார் நடித்த 'இரகசியப் போலீஸ்' நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. சரத் அரசியலில் குதிக்கப்போவதாக சில மாதங்களுக்கு முன்பு பரவலாகப் பேசப்பட்டது. தற்போது தனது அரசியல் சார்பை அடக்கிவாசிக்கத் தொடங்கி விட்டார் சரத்குமார். "கதாநாயகனாக நடித்து நூறாவது படமும் வெளிவந்த பின்னர்தான் கட்சியினில் சேருவது பற்றி யோசிப்பேன். அதுவரை மூச்" என்றுவிட்டார் சரத்.

## நடிகையின் அனுபவம்

ஜொ்மனியில் நடித்துக் கொண்டிருந்த மிங்க் என்னும் அழகியை படத்தில் நடிக்க அழைத்தார் தேவ் ஆனந்த். 'பியார் கதாரகு' என்னும் படத்தில் நடித்தார் மிங்க். அவரது நடிப்பைப் பார்த்து ரசிகர்கள் மயங்கினார்களோ இல்லையோ. பட அதிபர்கள் மயங்கிப் போனார்கள். ஒப்பந்தம் செய்ய அழைத்தார்கள். மிங்க் மகிழ்ந்து போனார். ஒரு இரவைத் தம்மோடு கழிக்கவும் வேண்டும் என்றார்கள். மிங்க் அதிர்ந்து போனார். சில பெரிய நடிகர்களும் கட்டிலைப் பகிர்ந்து கொள்ள அழைத்தார்களாம். நடிப்புக்கு முழுக்குப் போட்டுவிட்டு ஜெர்மனிக்குப் பறந்து படிப்பைத் தொடரலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறார் மிங்க்.

## பாலச்சந்தரின் யோசனைகள்

ஒரு நடிகருக்கு ஐந்து ஸ்டேஜ் உண்டு என்கிறார் இயக்குநர் கே.பாலச்சந்தர். 'யார் இந்த நடிகர்?' என்று கேட்க வைப்பது முதல் ஸ்டேஜ். 'அந்த ரோல் அவன் பண்ணினால் நல்லாயிருக்கும்' என்று பேச வைப்பது இரண்டாவது ஸ்டேஜ். 'இந்த கேரக்டரை இவன்தான் பண்ண முடியும்' என்று சொல்ல வைப்பது மூன்றாவது ஸ்டேஜ்.

'இவர் மாதிரி.... கொஞ்சம் இளம் வயதில் ஒரு நடிகர் தேவை' என்று கூறும்படி செய்வது நான்காவது ஸ்டேஜ். மீண்டும் 'யார் இந்த நடிகர்?' என்று கேட்க வைப்பது ஐந்தாவது ஸ்டேஜ்.

பாலச்சந்தர் தனது மாணவர்களுக்கு சொல்லும் முதல் 'அட்வைஸ்' இதுதான். 'இந்த ஐந்தாவது ஸ்டேஜ் வராதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்,' என்று அவர் தனது மாணவர்களிடம் கூறி வருகிறார்.

என்னம் மேல போலிருக்கு
எப்படியோ மனசிருக்கு
வெள்ளம்போல நினைவிருக்...
வெட்கம் மட்டும் தடுத்...
கவியரசு கண்ண...

அக்வ...


படிப்பகம்

www.padippakam.com



நாசர்-ஊர்வசி
படம்-அருவாவேலு

## ஐந்து மொழிப் படம்


கார்த்திக் நடித்த நந்தவனத்தேரு, மம்முட்டி நடித்துள்ள 'மக்கள் ஆட்சி' ஆகிய படங்களை தயாரித்தவர் ஏ.செல்வராஜ். அவர் அடுத்து தயாரிக்கும் படம் 'சின்ன ராமசாமி பெரிய ராமசாமி.' ஜெயராம், ஆர்.வி.உதயகுமார் ஆகியோர் நடிக்கின்றனர். அதனையடுத்து மம்முட்டியை கதாநாயகனாக வைத்து தயாரிக்கப் போகிறார் ஏ.செல்வராஜ். மக்கள் ஆட்சி படம் தாமதமாக வெளிவந்த காரணத்தையும் சொல்லியிருக்கிறார். ஏ.செல்வராஜ். "அரசியல் படம் என்பதால் விட்டார்கள். ஆறு மாதங்களாக காத்திருந்து இறுதியில் தீபாவளிக்கு ரிலீஸ் பண்ணினேன்" என்கிறார் செல்வராஜ்.

## இப்போது ஒரு கோடி

இந்திப் படவுலகில் நாளொரு வண்ணமும், பொழுதொரு மேனியுமாய், சம்பளத்தை உயர்த்திக் கொண்டிருக்கிறார் மாதுரி டிக்ஷித். தற்போதைய நிலவரப்படி மாதுரியின் சம்பளம் இந்திய பணமதிப்பில் ஒரு கோடி ரூபாய். அதாவது இந்தியிலும், வேறு ஒரு மொழியிலும் ஒரே நேரத்தில் தயாராகும் படத்திற்குத்தான் கண்டிப்பாக ஒரு கோடி கேட்கிறார். இந்தியில் மட்டும் என்றால் சற்றே குறைத்துக் கொள்வார். பிரபல இயக்குநர்கள் இயக்கும் படம் என்றாலும் சம்பளத்தை குறைத்துக் கொள்ளுவாராம்.

## உயர்ந்த நோக்கம்

பிரசாந்த்-பூஜாபட் ஜோடியாக நடிக்கும் கல்லூரி வாசல் அமர்க்களமாக தயாராகி வருகிறது. பூஜாபட் இருப்பதால் அவரை சரியாக பயன்படுத்த வேண்டும் என்ற மகா உயர்ந்த நோக்கத்தில் முத்தக் காட்சியையும் எடுத்தாயிருக்கிறார்கள்.



கார்த்திக்-கனகா
படம்-கட்டப்பஞ்சாயத்து

## ...காவ்யா?

...து திறமையை கண்டு ... இருந்தார். முயற்சி ... அமராவதி படம் மூலம் ...மிழ் பட ரசிகர்களைக் ...ண்டிருக்கிறார். அவர் ...ப் பெயர். படவுலகுக்காக

## சாமிக்குப் பாதுகாப்பு

'பம்பாய்' பட இயக்குநர் மணிரத்னம் வீட்டுக்கு குண்டு வைக்கப்பட்டது பழைய செய்தி. 'பம்பாய்' பட நாயகன் அரவிந்தசாமிக்கும் கொலை மிரட்டல் விடப்பட்டிருக்கிறது. அதனையடுத்து மத்திய அரசு நான்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களை அவருக்கு வழங்கியிருக்கிறது. அது தவிர வெளிப்புறப் படப்பிடிப்புக்களில் அரவிந்தசாமி கலந்துகொண்டால் ஒரு இன்ஸ்பெக்டரும், நான்கு பொலிஸ் காரர்களும் காவல் நிற்கிறார்கள்.

## ஊர்மிளாவின் துணிச்சல்

கமலுக்கும் முத்தக் காட்சிகளுக்கும் உள்ள தொடர்பு 'புன்னகை மன்னன்' படத்தில் ஆரம்பித்தது. ரேகாவுக்கு அழுத்தமாக முத்தம் கொடுத்து பரபரப்பு ஏற்படுத்தினார். பின்னர் தேவர் மகனில் கவுதமிக்கு முத்தம் கொடுத்தார். மகாநதியில் சுகன்யாவே எதிர்பார்க்காத வகையில் திடீர் முத்தம்.

கமல் இப்போது குருதிப் புனலிலும் மீண்டும் கவுதமிக்கு முத்தம் கொடுத்திருக்கிறார். கமலை பாராட்டியிருக்கிறார் கவுதமி. விரசம் ஏற்படுத்தாமல் முத்தக் காட்சியை அமைக்க கமலால் மட்டும்தான் முடியும். மற்றவர்கள் படங்களில் முத்தக் காட்சியில் நடிக்கவே மாட்டேன் என்று சொல்லியிருக்கிறார் கவுதமி.

இந்தியன் படத்தில் கமலுடன் நடித்துக்கொண்டிருக்கும் ஊர்மிளா என்ன சொல்கிறார் தெரியுமா? முத்தங்களில் பலவகை இருக்கிறது. ஆனால் முத்தம் கொடுக்குமளவுக்கு காட்சியில் அழுத்தம் இருக்க வேண்டும். அப்படி அழுத்தம் இருந்தால் குருதிப்புனலில் கவுதமி கொடுத்ததைவிட கவர்ச்சியாக நான் முத்தம் கொடுப்பேன். அதிலும் கமலைப் போன்ற நடிகர்களுக்கு முத்தம் கொடுக்க அதிஷ்டம் வேண்டும்! என்று அதிரடியாக வாக்குமூலம் கொடுத்திருக்கிறார் ஊர்மிளா.

'ரங்கீலா' படம் சூப்பர் ஹிட்டானதால் தற்போது ஊர்மிளாவின் சம்பளம் 50 இலட்சத்தை எட்டிக்கொண்டிருக்கிறது.

## பதினைந்து வயது நாயகி

விஜய்-வனிதா விஜயகுமார் நடித்துள்ள சந்திரலேகா ஓடிக்கொண்டிருக்கிறது. வனிதாவுக்கு பதினைந்து வயதுதானாம். 'ரிக்ஷாக்காரன்' படத்தில் வனிதாவின் அம்மா மஞ்சுளா அறிமுகமானபோது அவரது வயதும் பதினைந்துதானாம். (மஞ்சுளாவே சொல்கிறார்).

## தைப்பொங்கல் வெளியீடு

அரவிந்தசாமி-ஸ்ரீதேவி நடித்துக்கொண்டிருக்கும் 'தேவராகம்' தைப்பொங்கல் தினத்தன்று திரையிடப்பட ஏற்பாடுகள் நடக்கின்றன. மலையாளத்தில் தயாராகும் 'தேவராகம்' தமிழிலும் மொழிமாற்றப்பட்டு ஒரே நேரத்தில் வெளியாகும். தொடர்ந்து மேலும் சில தென்னிந்தியப் படங்களில் நடிக்க திட்டமிட்டுள்ளார் ஸ்ரீதேவி. பதினாறுவயதினிலே படத்தில் நடித்தது போலவே தேவராகத்திலும் பாவாடை தாவணியோடு நடித்துக் கொண்டிருக்கிறார் ஸ்ரீதேவி.

## அக்ஷய்குமாருக்கு மவுசு

இந்திப் படவுலகில் தற்போது போட்டி போடும் ஹீரோக்கள் அக்ஷய்குமாரும், ஷாருக்கானும்தான். அக்ஷய்குமாரின் உடல் கட்டு சூப்பர். அதனால் பாடல் காட்சிகளிலும், சண்டைக்காட்சிகளிலும் புகுந்து விளையாடுகிறார். அக்ஷய் படமென்றால் கல்லூரி மாணவிகள் கூட்டம் கூட்டமாகப் போகிறார்கள் என்று சொல்கிறார் பம்பாய் படவுலக தயாரிப்பாளர் ஒருவர்.

ஆனால், ஷாருக்கனும் சுபாஸ்கய், யாஷ்சோப்ரா, ராகேஷ் ரோஷன் போன்ற பிரபல இயக்குநர்களின் படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் படங்கள் வெளிவந்ததும் ஷாருக்கான் மார்க்கெட் உயர்ந்துவிடும் என்கிறார் மற்றொரு தயாரிப்பாளர்.

மகேஷ்பட் இயக்கும் 'அங்காரே' படத்தில் அக்ஷய்குமாரும், பூஜாபட்டும் ஜோடிகள். 'அங்காரே' படம் அக்ஷய்குமாருக்கு கைகொடுக்கும் என்று நம்பப்படுகிறது.

சரி, அக்ஷய் குமார் என்ன சொல்லுகிறார்; "நான் படிப்படியாக உச்சியைப் பிடிப்பேன். எனது காலம் வரும். அதுவரை பொறுமையாகக் காத்திருப்பேன்" என்கிறார் அக்ஷய்குமார்.



-ஊர்மிளா

## நக்மா 25 இலட்சம்

தமிழ்படவுலகில் நல்ல அதரவை நக்மாவுக்குத்தான். பதினைந்து இலட்சத்தில் இருந்த சம்பளத்தை 25 இலட்சமாக உயர்த்திவிட்டார் நக்மா. 'இரகசியப் பொலிஸ்' படம் நன்றாக ஓடுவதால், நக்மாவைத் தேடி ஓடுகிறார்கள் தயாரிப்பாளர்கள்.





வினோத்குமார்-சுபாஸ்ரீ
படம்-பேட்டை ரவுடி

## கிளு கிளு

*சத்யராஜ் சொந்தமாகத் தொடங்கியிருக்கும் எடிசன் ஆர்ட்ஸ் நிறுவனத்தின் சார்பில் 'சின்ன மருது பெரிய மருது' என்ற பெயரை பிலிம் சேம்பரில் பதிவு செய்து வைத்துள்ளார்.

*'காதல் தேசம்' படத்தைத் தயாரித்து வரும் கே.டி.குஞ்சுமோன் அடுத்து 'சக்தி' என்ற படத்தினை தயாரிக்கிறார். இவற்றுடன் 'ரட்ஷகன்' என்ற படத்தையும் தயாரிக்கவுள்ளார். இப்படத்தை காந்தி என்பவர் இயக்கவுள்ளார்.

* ரஜினியின் 'முத்து'படத்தில் 'கொக்கு சைவக்கொக்கு...' பாடலுக்கு நடனமாடியுள்ள ஜோதிலட்சுமி, 'பாண்டியன்' பட வில்லன் பிரபாகரன் கதாநாயகனாக நடிக்கும் கன்னடப் படமொன்றில் ஒரு பாடல் காட்சியில் நடனமாடவுள்ளார்.

*படத்திற்குப் படம் வித்தியாசமான மேக்-அப்பில் நடித்து வரும் ஆனந்தராஜ், தற்போது நாசர் கதாநாயகனாக நடிக்கும் 'அருவா வேலு' என்ற படத்தில் ஆளவந்தார் என்னும் வேடத்தில் வித்தியாசமான மேக்-அப்பில் நடிக்கிறார்.

*'மிஸ்டர் ரோமியோ'வுக்குப் பின்னர் ஏ.வி.எம். நிறுவனம் தயாரிக்கும் ஒரு படத்திலும், கலைப்புலி எஸ்.தாணு தயாரிக்கும் படமொன்றிலும் நடிக்கவிருக்கிறார் பிரபுதேவா. தாணு தயாரிக்கும் படத்திற்கு 'மன்மதன்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

* மணிவண்ணன் இயக்கிய 'மூன்றாவது கண்' படத்தில் புகைப்படப் பிடிப்பாளராக நடித்தவர் சுதாங்கன் என்ற பத்திரிகையாளர். இவர் தற்போது பாரதிராஜா இயக்கும் 'அந்திமந்தாரை' படத்தில் பேராசிரியராக, சங்கவிக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

*நெப்போலியன் நடித்த 'சீவலப்பேரி பாண்டி' யைத் தெலுங்கில் 'உக்ரம சிம்ஹம்' என்ற பெயரில் மொழி மாற்றி வெளியிடத் திட்டமிட்டிருந்தனர். ஆனால் படத்தின் கதாசிரியருக்கும் தயாரிப்பாளருக்குமிடையில் ஏற்பட்ட பிரச்சனையால் பட வெளியீடு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

* மலையாளப் படவுலகில் பிரபல இயக்குநர்களில் ஒருவரான சத்யன் அந்திக்காடு என்பவர் இயக்கும் மலையாளப் படமொன்றில் முக்கிய வேடமொன்றில் நடிக்கவுள்ளார் கார்த்திக்.

*இந்தி, தெலுங்குப் படங்களில் நடித்து வரும் ஹீரா சிறிய இடைவெளிக்குப் பின்னர் தமிழில் பிரபு-சுரேஷ்கோபி நடிக்கும் 'அமைதிப் பூங்கா' விலும், சத்யராஜ் நடிக்கும் 'அடிமை' படத்திலும் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார்.

*ரகுமான்-சௌந்தர்யா இணைந்து நடிக்க 'டியர் சன்' என்ற பெயரில் ஒரு படம் உருவானது. வெளிவரத் தயாரான நிலையில் இருக்கும் இப்படத்தின் பெயரை தற்போது 'டியர்சன் மருது' என்று மாற்றி விட்டார்கள்.



படிப்பகம்

சுய சோதனை

# காசை கரியாக்கும் பெண்மணியா நீங்கள்?

வீட்டுக்கு தேவையான பொருட்களை கடைகளில் போய் வாங்குவதை ஆங்கிலத்தில் 'ஷொப்பிங்' என்கின்றனர். சில பெண்மணியர் 'ஷொப்பிங்' சென்றால் பேர்ஸ் காலியாகும் வரை ஓயமாட்டார்கள்; அதே போல, நேரம் ஓடுவது தெரியாமலும் 'ஷொப்பிங்' செய்வர். மேலும், தேவை இல்லாத பொருட்களையும் வாங்கி குவிப்பர். நீங்கள் எப்படிப்பட்ட பெண்மணி? 'ஷொப்பிங்' செல்வதில் கில்லாடியா? ஏமாறும் பேர்வழியா? அறிந்து கொள்ள இதோ ஒரு எளிய சுயசோதனை.

கீழே உள்ள கேள்விகளுக்கு ஆம்/இல்லை என பதில் அளியுங்கள்!

1. எனக்கு மனது சரியில்லை என்றால், 'ஷொப்பிங்' செய்யப் புறப்பட்டு விடுவேன். அப்படிச் சென்ற உடன், என் கவலை பறந்துவிடும்.

2. எங்கெங்கு என்னென்ன பொருட்கள் கிடைக்கின்றன என்பது குறித்து, 'டிவி'யில் கூறுவது மிக பயனுள்ளதாக இருக்கிறது.

3. நான், என்றாவது ஒருநாள், 'ஷொப்பிங்' செல்லாவிட்டால், அன்று மழையே பெய்து விடும்!

4. கிறிஸ்துமஸ் டிசம்பர் மாதம் தான். தீபாவளி நவம்பர் மாதம்தான். பொங்கல் ஜனவரி மாதம் தான். என்றாலும், நான் இப்பண்டிகைகளுக்காக 12 மாதமும் 'ஷொப்பிங்' செல்வேன்.

5. சரியான விலையில், ஒரு கடையில், ஒரு நேரம் ஒரு பொருள் கிடைத்தால் அந்த ஒரே பொருளை தேவைக்கு அதிகமாகவே வாங்குவேன். காரணம், மற்ற நேரங்களில் அந்த விலையில் கிடைக்காது.

6. என் அலமாரி நிறைய ஆடைகள், விலை 'ஸ்டிக்கர்' கூட அகற்றப்படாமல் இன்னும் உள்ளன.

7. எனக்கு பலசரக்கு சாமான் தட்டுப்பாடு வந்ததே கிடையாது. எப்போதும் ஸ்டோர் ரூமில் கையிருப்பு வைத்திருப்பேன்.

8. ஏராளமான வாழ்த்து அட்டைகள் வாங்கி 'ஸ்டொக்' வைத்துக் கொள்வேன்!

9. பலசரக்குக்கான செலவை குறைக்க வேண்டும் அல்லது புதிய உடைகள் வாங்குவதை குறைக்க வேண்டும் என்றால், முதலாவதைத்தான் நான் தேர்ந்தெடுப்பேன்.

10. பரிசுப்பொருள் வாங்க கடைக்குச் சென்றால், முதலில் என்னைக் கவர்ந்த பொருளை தேர்ந்தெடுக்க மாட்டேன்.

11. கடைக்காரர்கள் என்னைப் பார்த்தால் தலைவலியுடன் ஓடுவர்கள். காரணம், நான் நிறைய கேள்விகளைக் கேட்பேன்!

12. தள்ளுபடிவிலையில் ஒரு பொருள் கிடைக்கிறது என்றால், அதை வாங்க எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் பயணம் செய்வேன்.



**மதிப்பெண்:**

**9-12 'ஆம்':** நீங்கள் வீட்டில் வாங்கி வைத்துள்ள பொருட்கள் தேவைதானா என ஒருமுறை பாருங்கள். உங்கள் பாங்க் பலன்சையும் பாருங்கள். பணத்தை நிறைய விரயமாக்கி இருப்பீர்கள். பணத்தின் மதிப்பு தெரிந்து இருந்தாலும், நிறைய வீண் செலவு செய்வீர்கள். அடிக்கடி நிறையச் செலவு செய்வதை தவிர்த்து, இருப்பதைக் கொண்டு வாழ முயற்சி செய்யுங்கள்.

**5-8 'ஆம்':** பேரம் பேசி பொருட்களை வாங்குவதில் நீங்கள் கில்லாடி. எனினும் நீங்கள் என்ன பொருட்களை வாங்க விரும்புகிறீர்கள், என்ன பொருள் உண்மையில் தேவை என ஒரு முறை யோசித்து செயல்படுவது நல்லது.

**0-4 'ஆம்':** நீங்கள்தான் சரியான நபர், தேவையான பொருட்களை உரிய விலையில் வாங்குவீர்கள். 'ஷொப்பிங்' செல்ல பயப்படமாட்டீர்கள். எங்கே, எந்தப் பொருள், என்ன விலையில் கிடைக்கும் என்பது உங்களுக்குத்தான் தெரியும்.

# இனிது, சருமம் இனிது

★ சிறிதளவு பாலில் ஒரு எலுமிச்சம் பழத்தைப் பிழிந்து, கலந்து முகம், கழுத்து, கைகள் முதலிய பாகங்களில் தடவவும். உலர்ந்தவுடன் வெதுவெதுப்பான நீரில் அலம்பி சுத்தம் செய்யவும்.

★ சருமம் மிருதுவாக இருக்க இப்படிச் செய்யலாம்: சிறிதளவு தேனை எடுத்து முகத்தின் மீது தேய்த்துக் கொள்ளவும். அது உலர்ந்தவுடன் வெந்நீரில் கழுவி சுத்தம் செய்யவும். எண்ணெய்ப்பசை கலந்த சருமமாக இருந்தால் தேனுடன் சிறுதுளி எலுமிச்சம்பழத்தின் சாற்றைப் பிழிந்து கொள்ளலாம்.

★ இரண்டு தேக்கரண்டி பாதாம் எண்ணெயில் ஒரு முட்டையை உடைத்து மஞ்சள் கருவை விட்டுக் கலக்கி முகத்தில் பூசிக்கொள்ளவும். பத்து நிமிடங்கள் கழித்து ஒரு மிருதுவான துணியை வெந்நீரில் நனைத்துத் துடைத்து விடவும்.

★ உங்கள் உடம்பில் தேவையில்லாத இடங்களில் ரோமம் வளர்கிறதா? சிறிதளவு தண்ணீர் விட்டு கஸ்தூரி மஞ்சளை அரைத்து உடம்பில் பூசினால் அவை உதிர்ந்து விடும்.

★ வெள்ளரிக்காயைத் துருவி சாறு பிழிந்து எண்ணெய்ப்பசை, சாதாரண சருமம் உள்ள வர்கள் தடவி வந்தால் சருமத்தில் இருக்கும் நுண்ணிய துவாரங்கள் சுத்தமாகும்.

★ சருமம் உலர்ந்திருந்தால் பாலேடு தடவுங்கள். சிறிது உலர்ந்தவுடன் சவர்க்காரம் போட்டு வெந்நீரில் அலம்பி வந்தால் சருமம் மிருதுவாகும்.



★ கரட் ஒன்றை எடுத்து நன்றாகத் துருவி தோடம்பழச்சாறு கலந்து தடவி விட்டு உலர்ந்வுடன் முகத்தை அலம்பி வந்தால் முகத்தில் தோன்றும் சிறு புள்ளிகள் மறையும்.

★ சாறு மிக்க தக்காளியை உடலில் பூசி வந்தால் தோல் சுத்தமாவதுடன் மிருதுவாகவும் இருக்கும்.

★ சிறதளவு தண்ணீரில் சந்தனத்தை நன்றாகக் குழைத்து தடவினால் உடல் சூடு தணியும்.

# சமையல் அறை சமாச்சாரங்கள்



*பிரஷர் குக்கரில் சமைக்கும்போது முதலில் தண்ணீருடன் சிறிது எலுமிச்சம் பழச் சாற்றையோ அல்லது புளிக் கரைசலையோ சேர்த்து விட்டால் குக் கருக்குள் கறை படியாது.

*அலுமினியம், பீங்கான், பித்தளை ஆகிய பாத்திரங்களில் சிறிய ஓட்டைகள் விழுந்தால், சிறிது துணியை எடுத்து எரித்துச் சாம்பலாக்கி, சுண்ணாம்பைச் சேர்த்துக் குழைத்து ஓட்டை உள்ள இடங்களில் பூசி விடவேண்டும். நன்றாகக் காய்ந்தவுடன் அடுப்பில் வைத்து உபயோகிக்கலாம்.

*ஸ்டவ் அடுப்பைப் பயன்படுத்துகிறவர்கள் மண்ணெண்ணெயை வடிகட்டி ஊற்றவேண்டும். ஸ்டவ்வினால் காற்று வெளியேறும் பகுதியில் அடைப்பு இல்லாமல் பார்த்தக்கொள்ள வேண்டும். இப்படிக் கவனமாகப் பார்த்துக் கொண்டால் ஸ்டவ்வினால் எந்தவித தொந்தரவும் இருக்காது.

★ அலுமினியப் பாத்திரங்களில் உப்புக் கலந்த பொருட்களையோ, புளி கலந்த பொருட்களையோ வைத்திருக்கக் கூடாது. உப்பிலும், புளியிலும் அலுமினியம் கரையும்.

*காய்கறிகளை எப்போதும் சமையலறையில் வைத்திருக்கக்கூடாது. காற்றோட்டமுள்ள அறைகளில் வைத்திருக்க வேண்டும். சமையலறையில் உள்ள வெப்பத்தினால் காய்கறிகள் விரைவில் வாடிவிடும்.

*காய்கறிகளை முதலிலேயே தண்ணீரில் போட்டு வேக வைக்காமல், தண்ணீர் நன்றாகக் கொதித்த பிறகு காய்கறிகளை அதில் போட வேண்டும். கொதித்துக் கொண்டிருக்கும் தண்ணீரில் ஒரு கரண்டி உப்பைப் போட்டால் தண்ணீர் சூடும் அதிகரிக்கும். காய்கறிகளும் விரைவில் வெந்துவிடும். சத்துக்களும் அழிந்து போகாது.

# பிரார்த்தனை

அப்துல் ரகுமான்

மற்ற உறவுகள் வயிற்றில் உண்டாகின்றன.
காதல் இதயத்தில் உண்டாகிறது. அதனால் தான்
அது மற்ற உறவுகளை விட உயர்ந்த உறவாகி
விடுகிறது.

மற்ற உறவுகளில் கட்டி வைக்கும் கயிறு வெளிப்படையானது.
காதல் உறவில் கட்டி வைக்கும் கயிறு அந்தரங்கமானது.
வெளிப்படையானதை விட அந்தரங்கமானது உயர்ந்தது.

அதனால் தான் காதல் உறவு மற்ற உறவுகளை உதறி
விடத் தயங்குவதில்லை.

எனவே தான் காதல் பிரிய முடியாத பிரிய உறவாகி
விடுகிறது.

காதலி தன்னை விட்டுப் பிரியாமலிருக்கக்
காதலன் எதை வேண்டுமானாலும் செய்யத்
தயாராகி விடுகிறான்.

காதலி பிரியாமலிருக்க வேண்டும் என்பதே
அவன் பிரார்த்தனையாகி விடுகிறது.



ஆனால்,
"என் காதலி
பிரியவேண்டும் என்று
பிரார்த்திக்கப் போகிறேன்."
என்கிறார் கவிஞர் மூமின்.

காதல் ஓர் அதிசயமான உறவு. அவன் யாரோ?
அவள் யாரோ? ஆனால் காதல் கொண்டு விட்டால்
அவன் நிலமோ? அவள் வேரோ? என்று வியக்கும்படி
இணைந்து விடுகிறார்கள்.

காதல் என்பது ஒரு மறுவுயிர்ப்பு. அவன்
அவளுக்கு உயிராகி விடுகிறான். அவள் அவனுக்கு
உயிராகி விடுகிறாள்.

அதிசயமான உயிர்கள்- உடலுக்கு வெளியே
இருக்கும் உயிர்கள்!
அதனால்தான் காதலர்களின் பிரிவு மரணத்தை விடத்
துன்பமானதாகி விடுகிறது.

காதலர்கள் கண்ணால் சுவாசிப்பவர்கள். ஒருவரை
ஒருவர் பார்த்துக் கொள்வதே அவர்களுக்குச் சுவாசமாக
இருக்கிறது.

ஏன் மூமினுக்கு என்ன ஆயிற்று? பைத்தியம்
பிடித்து விட்டதா? காதலுக்கு மேலான பைத்தியம்
ஏது?

காதலியோடு மன வேறுபாடா? அவளை வெறுத்து
விட்டாரா?

இல்லை. பிறகு ஏன் அப்படிப் பிரார்த்தனை
செய்ய விரும்புகிறார்?





என் காதலி
பிரிய வேண்டும் என்று
பிரார்த்திக்கப் போகிறேன்
ஏனென்றால்
என் பிரார்த்தனை
எப்போதும் நிறைவேறுவதில்லை.

# கிரிக்கெட் துணுக்குகள்

★கிரிக்கெட் வரலாற்றில் ஒரே டெஸ்ட் போட்டியில் ஒரு நூறு ஓட்டங்களையும் இரட்டை நூறு ஓட்டங்களையும் முதன் முதலில் பெற்று சாதனை படைத்தவர் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த திரு.கே.டி. வோல்ட்டேர்ஸ். சிட்னியில் 1968-69ல் மேற்கிந்திய அணிக்கு எதிராக ஆடிய போதே இச்சாதனை நிலை நாட்டப்பட்டது.



*இத்தகைய சாதனையை இந்திய அணியைச் சேர்ந்த சுனில் கவாஸ்கர் 1971ல் நிகழ்த்தினார். போட் ஒஃப் ஸ்பெயினில் மேற்கிந்திய அணிகளுக்கு எதிராக ஆடிய போதே இச்சாதனையை கவாஸ்கர் நிலைநாட்டினார். இது அவருடைய நாலாவது டெஸ்ட் ஆட்டம். முதலாவது இன்னிங்ஸில் 126 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸ்ஸில் 220 ஓட்டங்களையும் அவர் பெற்றார்.

*ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் முதன் முதலில் விளையாடிய போதே 100 ஓட்டங்களை எடுத்த பெருமைக்குரியவர்- அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த டி.எல். அமிஸ். 1972 மான்செஸ்டரில் இது இடம் பெற்றது.

*டேஸ்ட் கிரிக்கெட்டில் முதலாவது செஞ்சரியை எடுத்த இந்திய ஆட்டக்காரர் -லாலா அமர்நாத்.

*அவுஸ்திரேலிய அணியைச் சேர்ந்த காரி கில்மோர் ஒருநாள் ஆட்டத்தில் 6 விக்கட்டுகளைக் கைப்பற்றிய முதலாவது பந்து வீச்சாளர் என்ற தகுதியை, 1975ல் இங்கிலாந்திலுள்ள லிட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற உலகக் கோப்பைப் போட்டியில் அடைந்தார்.

*டெஸ்ட்போட்டிகளில் வேகமாக 1000 ஓட்டங்களைக் குவித்தவர். சுனில் கவாஸ்கர். 1978 அக்டோபர் 16 முதல் 1979 ஜனவரி 2 வரை 78 நாட்களில், 6 டெஸ்ட் போட்டிகளில் இந்த 1000 ஓட்டங்களையும் அவர் பெற்றார்.

*தென் ஆபிரிக்க அணியைச் சேர்ந்த டேவிட் ரிச்சட்சன் என்ற விக்கட் கீப்பர் டெஸ்ட் ஆட்டங்களில் வேகமாக 50 பேரை ஆட்டமிழக்கச் செய்து சாதனை படைத்தார்.

*மேற்கிந்திய அணியைச் சேர்ந்த கார்ஃபீல்ட் சோபர்ஸ், சர்வதேச ஒருநாள் போட்டிகளில் ஒரே தடவை மட்டும் தோற்றினார். இவர் எதுவித ஓட்டங்களையும் பெறவில்லை.

# கண்களே.... கண்களே!

கண்களுக்கு மை தீட்டும் போது முடிந்த வரை அடர்த்தியாக இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கண்களுக்கு வெளிப்புறமாகவும், பக்கவாட்டிலும் கண்மை கோடுகள் செல்வது அழகைக் கெடுக்கும்.

கண்களை அழகுபடுத்திக் கொள்வதற்காக ஐ ஷடோ, ஐ லைனர், மஸ்காரா போன்ற நவீன ஒப்பனை சாதன முறைகளையும் பயன்படுத்தலாம்.

சில பெண்களுக்கு கண் புருவங்கள் மிகவும் அடர்த்தியாக இருந்து முக அழகைக் கெடுக்கும். சிலர் ஷேவ் செய்து புருவத்தைக் குறைக்க முயற்சி செய்வார்கள். இது தவறான முறையாகும். இதற்கான ஆலோசனைகளை ஏதாவது ஒரு அழகு சாதன நிலையத்தில் தெரிந்துகொண்டு புருவ முடிகளை நீக்க வேண்டும்.

புருவ ரோமங்களை அகற்றுவதற்கு முன்பு ஏதாவது ஒரு கிறீம் தடவிக்கொள்வது நல்லது. ரோமங்களை அகற்றிய பிறகு ஓ-டி-கொலோன் போட்டுத் தேய்க்க வேண்டும்.



# ஐ மீன்

மீன் உபயோகித்த பாத்திரத்தில் மீன் வாடை மறையவில்லையா? வடிகட்டிய தேயிலைத் தூளைப் போட்டுத் துலக்கினால் மீன் வாடை போய்விடும்.

மீன் சாப்பிடும்போது தொண்டையில் சிறு முள் சிக்கினால், எலுமிச்சைச் சாறு அருந்துங்கள். முள் விலகி விடும்.

மீன் சமையல் செய்யும்போது கொதிநீரில் ஒரு துளி எலுமிச்சைச் சாறு விட்டுப்பாருங்கள். மீன்கள் நிறம் மாறாமல் இருக்கும்.

தினமுரசு — அம்மன் ஜுவல்ஸ்
பரிசுக் கூப்பன்
இல 14

தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ்
இணைந்து வழங்கும்
தங்கமாலை
பரிசுப் போட்டி

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* முரசு 116 முதல் தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

# வளர்ந்துவரும் நம்பிக்கை நட்சத்திரம்

நியூசிலாந்து கிரிக்கெட் அணியில் எதிர்கால நட்சத்திரமாகத் திகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் ஸ்ரீஃபன் ஃபிளெமிங்கிடம் தென்படுவதாக நம்பப்படுகிறது.

ஃபிளெமிங் தனது ஏழாவது வயதிலேயே கிரிக்கெட் ஆட்டத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தார். நியூசிலாந்தின் காண்டர்பறி மாகாண பயிற்சிகளின் போது தான் இவரின் திறமை வெளிக்கொணரப்பட்டது. இருப்பினும் தனது சொந்தப் பிறப்பிடமான கிறைஸ்ட்சேர்ச்சில், றக்பி விளையாட்டுக்களில் தான் தனது இளமைக்காலத்தைச் செலவிடலானார். தனது 16வது வயதில் கிறைஸ்ட்சேர்ச் சிடென்ஹாம் கிளப்பில் சேர்ந்து கிரிக்கெட் ஆடத் தொடங்கினார். இக்கால கட்டத்தில்தான் நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் காப்டனான லீ ஜேர்மொன், ஸ்ரீஃபனின் கிரிக்கெட் ஆட்டத்திறமைகளை அவதானிக்கலானார்.

ஸ்ரிஃபனைப் பற்றி லீ கருத்து வெளியிடுகையில், "ஒரு பள்ளி மாணவனாக விளையாடும் போது முதன் முதலில் ஸ்ரிஃபனின் ஆற்றலை அவதானித்தேன். கடந்த 5 ஆண்டுகளில் அவரிடம் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை என்னால் பார்க்க முடிகிறது. இப்பொழுது ரெஸ்ட் ஆட்டங்களிலும் அவர் ஆடுகிறார், அவர் உடனடியாக நூறு நூறாக ஓட்டங்களைக் குவிக்க வேண்டுமென்பதில்லை. நியூசிலாந்து அணிக்கு அவர் எதிர்காலத்தில் பெருமை சேர்க்கும் ஆட்டக்காரராக வளர்ச்சி அடைவார் என்பது எனது கருத்து." என்று கூறுகிறார்.

ஸ்ரிஃபன் ஃபிளெமிங் நியூஸிலாந்தின் 19வயதுக்குட்பட்ட அணியில் சேர்ந்து இந்தியாவில் -1991-92ல் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். அக்கால கட்டத்தில் இந்தியாவில் போதுமான திறமைகளை அவர் வெளிப்படுத்தினார்.

லீ ஜேர்மொன் தலைமையில் தற்போது இந்தியா சென்றுள்ள நியூஸிலாந்து அணியில் ஸ்ரீஃபனும் சென்றுள்ளார். இப்பொழுது அவருக்கு 22 வயது- இந்த அணியில் வயது குறைந்த ஆட்டக்காரர் அவரே. இடைப்பட்ட காலத்தில் ஸ்ரீஃபன் குறிப்பிடத் தக்க அளவில் திறமை பெற்றுவிட்டார். இவ்வணியின் நம்பிக்கை நட்சத்திரமாகத் தென்படுகிறார்.



ஸ்ரீஃபன் 12 டெஸ்ட் ஆட்டங்களில் மொத்தம் 786 ஓட்டங்களைப் பெற்றிருக்கிறார். 25 சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் 551 ஓட்டங்களைப் பெற்றுள்ளார். மேற்படி டெஸ்ட் ஆட்டங்களிலும் ஒரு நாள் ஆட்டங்களிலும் முறையே 92 மற்றும் 90 ஆட்டங்களைப் பெற்றுள்ளார். இவருடைய வயதுக்கு 100 ஓட்டங்களை (செஞ்சரி) எடுக்காததனை ஒரு பொருட்டாகக் கருத முடியாது.

www.padippakam.com

## சமூகம் தந்த விலை

நான்–
சிரிப்பதில்லையாம்...
நரசிம்மராவ் என்றார்கள்..!
நான்–
கொடுமையானவனாம்...
ஹிட்லர் என்றார்கள்...!
நான்–
ஊழல் செய்யும்
மோஷடிக் காரனாம்...
ஜெயலலிதா என்றார்கள்...!
நான்
பயங்கரவாதியாம்...
கார்லோஸ் என்றார்கள்...!
திருந்தி
நல்லவனானேன்....
நான்!
அப்போது மட்டும்
என்னை ஒரு
காந்தியாய், புத்தனாய்,
முஹம்மதாய்,யேசுவாய்
சொல்ல மறுக்கிறார்களே....!

எம்.எச்.எம். ஹாரிஸ்,புத்தளம்.

## மௌனம் கொல்கின்றது

உன் பார்வையால்
உயிர் பெற்ற
என் ஜீவன்
இன்று
உன் மௌனத்தால்
கொல்லப்படுகின்றது.

ஜீவனுள்ள
உன் நினைவுகள்– என்னில்
உயிர்வாழ துடிக்கின்றது
இருந்தும்
உன் மௌனங்கள்
ஏனோ
இன்னும் என்னை
கொல்கின்றது

மறந்துபோன
வசந்தங்கள்...
நினைக்க முடியாத
நிகழ்வுகள்...
மரணிக்க வேண்டிய
ஜீவன்...
மறுவாழ்வு கொண்டதும்
உன் வரவால்
இன்று
உன் மௌனமே–என்
மரணத்தின் காரணம்.

மௌனங்கள் என்றும்
சம்மதத்தின் வழிகாட்டி–
ஆனால்
உன் மௌனமோ...??

நிலவிங்கு மௌனமானால்
நீலவானத்திற்கு ஏதும்
இழப்பில்லை
நீ என்னில்
மௌனமானால்
என்னில்
இழப்பதற்கு
எதுவுமில்லை.

மௌனமே நீ
நில்லாதே அவளிடம்
நின்று நீ
என்னைக் கொல்லாதே......!

எல்.கே.நாதன், மோதரை

## குடை

மழையைக் கண்டு
மனிதக் கரங்களில்
மலரும் மலர்கள்!

மனிதர்களின்
விரல்களுக்குள்ளடங்கும்
வான வில்!

விண்ணோக்கி
விரையப் போகும்
பராசூட்கள்!

தன்னை வருத்தி..
மனித..
தலையைக் காத்திடும்
தரும தேவதைகள்!

மழை, வெய்யில்
விழாக்களில்
மனிதனால்...
போர்த்தும்
பொன்னாடைகள்!

கிழடுகளின்
கைகளில்
நீண்டிருக்கும்!
குமரிகளின்
கைகளில்
குறுகியிருக்கும்!

அன்று
அரசர்களுக்கு
மட்டுமே...
பிடிக்கப்பட்டது!
இன்று
அனைவருக்கும்
பிடிக்கப்படுகின்றது!

இவர்களில்
'கறுப்பு'
நீக்ரோக்களும்
இருக்கின்றார்கள்!

இவர்களின்
இறுதி
"ஓய்வு"
கதவு மூலை!

சோ.ஸ்ரீதரன்,
பொகவந்தலாவை.

## என்னை ஏன் தேடுகிறாய்

நண்பனே,
உன் வீட்டுக்கும்
என் வீட்டுக்கும்
கிடுகு இல்லாத
பொது வேலி
ஒன்றுதான்.
++
அன்று
நாம்
முதன் முதலாய்
பள்ளிக்கூடத்தில்
சேர்ந்தபோது
ஒரே
அரிச்சுவடியில்தான்
இருவரும் சேர்ந்து
உரத்து உச்சரித்தோம்.
++
தெருவெல்லாம்
வெள்ளம் வந்தபோது...
நீயும்
நானும்
தோணிவிட்டு
ஒன்றாகத்தான்
விளையாடினோம்.
++
தூர நின்று
நீ
ஜாடை காட்ட
பின்னேர வகுப்பிற்கு
போவதாக
பொய் சொல்லிவிட்டு
எத்தனை
"மெட்னிசோக்களை"
ரசித்திருப்போம்.
++
அன்றொருநாள்...
நீ
மாங்காய் திருடி
மாட்டிக்கொண்ட போது
நான்
உன்னைக் காப்பாற்றிய
பசுமையான
இனிய நினைவுகள்
இன்னும்
மரித்துவிடாதிருக்க..
நண்பனே,
இப்போதுமட்டும்
என்னை
ஏன்
தேடித்திரிகிறாய்
சுடுவதற்கு.

கருங்கொடியூர் கவிஞான்.

## நான் என்ன செய்யட்டும்...???

ப்ரியமானவளே,
உன் பார்வைச் சூன்யத்தில்
என் இருதயம் உருகியோடுகிறது
விழிகளின் வழியாக,

உன் மௌன நாகாஸ்திரத்தால்
என் ஆன்மா பிளக்கப்பட்டு, ஆவி
ஒப்பாரியெழுப்புகிறது,

உன் அலட்சியப் புன்னகையில்
நான் ஹிட்லராகித் தெரிகிறேன்.
எனக்குள்ளே,

பூக்களால் ஆன உன் மனதுக்கு
ஏனிந்தப் பொட்டல்தரை

விடிவினை நேஸித்த உள்ளத்திற்கு
ஏனிந்த இரும்புச் சிறை...

ஏறவே முடியாத
வழுக்குக் கம்பங்களில் தானா
உன் வாழ்க்கை விஷப்பரீட்சையாய்
நகரப் போகிறது,

நகரவே முடியாத
முட்பாதையில் தானா
உன் பாதத்தின் பயணங்கள்
தொடரப்போகிறது,

வாழ்வின் மகோன்னதங்களை
அன்பில் பிம்பமாக்கியவளே...

அழுவதா?
அலட்சியமாய் புன்னகைப்பதா...,?
எனத் தடுமாறும்
வேதனைகளே வாழ்க்கையின்
விழுமியங்களானவளே...

நான் உனக்காய்
என்னசெய்யட்டும்...??
வேதனையைக் கருக்கூட்டி
அழுகையைப் பிரசவிப்பதைத் தவிர.

ஆத்மராஜா நாத் சந்திரிக்கா

## இன்றும் மேலே

நாங்கள்
வாழ்வதற்கு பிறந்தவர்கள்
சுவாசிப்பதற்கல்ல!

சூரியச் சூட்டில்
நாங்கள்
செலவழித்த
வியர்வை
துளிகளை
முத்தாக மாற்றும் விந்தை
தெரிந்தவர்கள்.

நிலவுக்குக்கூட
நேற்று சொன்னோம்
"விரைவில் இன்னொரு வானம்
தயாரிப்போம்" என்று...

எங்கள்
பள்ளிக்கூடத்தில்
கடைசி 'பென்சில்'
'கம்பியூட்டர்'

வசந்தம்
எங்களிடம்
வாடகை கேட்பதில்லை.....
காரணம்
'எஜமான் யார்?' என்ற
குழப்பம்.

ஆம்...
நாங்கள் வாழ்வதற்கு
...

பாலமுனை வவுனியூர்

## ஆகாயத்திலெழுது

ஆகாயத்தை இடி
சூரியத்துண்டுகளில்
உன்காதலிக் கொரு
இருப்பிடம் செய்...

காற்றைப்பிடி
குளிரைச் சேர்த்து
உஷ்ணம் போக்க
விசிறிகள் செய்....

நிலவையும்
நட்சத்திரங்களையும்
உடைத் தெடு...
கடல் நீரில் குழப்பு

அதை அவளின்
உடல் எங்கும் தடவி
கற்பனைக் குளத்தில்
நீராட்டு–

முகிலை நிறுத்து
அதன் மேல்
நீயும்– அவளும் ஏறு
பிரபஞ்சம் எங்கிலும்
புரண்டு கிட....

ஸாபுறா.ஏ.மஜீத்,
அக்கரைப்பற்று

## தேன் கிண்ணம்

### உன்னைக் காணாத ஒரு நாளில்

அன்றும்
வழக்கம் போல்
நித்திரைக்கு முன்
நாட்குறிப்பை புரட்டினேன்.

ஆனால்,
எதையுமே
எழுத முடியவில்லை.

நேரத்திற்கு கால்வலித்து
ஓடத் தொடங்கியது..
கோபத்தில்;
இரவு இன்னும்
கருமையானது.

நிலா விளக்கு
மேகத்தினுள் மறைந்தது.
எனக்கு மட்டும்
எழுத்து வரவில்லை.

ஐம்புலன்களும்
எதிர்ப்பைக் காட்டின.
அவசரமாக எழுதினேன்.

"இன்று கவிதை இல்லை
காரணம்
என் கவிதையை
நான் காணவில்லை."

அ.டக்ளஸ் ஜெய சேகரன், வவுனியா.

### தந்துவிடு என் ஹிருதயத்தை...

என் ஹிருதயத்தை...
உன் வசமாய்......
ஒப்புவித்தேன்..
நிகராக நினைவுகளை..
பரிசாக வழங்கியதேன்...

உன் நினைவுகளால்...
'ஆஸ்த்மா' நோயினால்...
அவதிப் படுவது போல்...
மூச்சு வதைக்குது...

நிஜத்திலும் சயனங்களிலும்..
உன் பெயரினை...
உச்சரித்து உச்சரித்து...
உதடுகளி ரெண்டும்...
பனிக் கால போர்வையற்றவன்...
கதியாகி விட்டது.

காதல் வளாகத்தின்..
சித்ரவதை கூடத்தில்..
வதைக்கப்பட்டு...
இம்சிக்கப்பட்டுக்..
கொண்டிருக்கின்றேன்...

கீறல்களின் மேல்..
கீறல்களாய்..
உன் நினைவுகள்..
ஹிருதயத்தை..
பிளவு படுத்துகின்றது..

யாசகனாய்..
மாற்றம் பெற்றேன்...
மீட்டு விடு உன் நினைவை
தந்து விடு...
என் ஹிருதயத்தை...

என்.சஹாப்தீன், ஓட்டமாவடி.

### அபூர்த்த ஆசைகள்

அடுத்தவரின் சொத்தை
அபகரிக்க ஆசை
வதந்திகளைப் பரப்பி
சண்டை பார்க்க ஆசை
பதுக்கி வைத்துப் பொருளை
கூட்டி விற்க ஆசை
அழுபவனைப் பார்த்துச்
சிரிப்பதற்கு ஆசை

பணமிருக்கும் இடத்தில்
சொந்தம் கொள்ள ஆசை
ஊர் அறியத் தம்மை
உயர்த்திச் சொல்ல ஆசை
நல்லவனைப் போல
நடிப்பதற்கு ஆசை
உண்மைகளை மறைத்துப்
பொய்கள் சொல்ல ஆசை.

காரைதீவு,எஸ்.நாகராஜன்.






## இந்த வாரம் உங்கள் பலன்

(26.11.95 முதல் 02.12.95 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

| | | |
|---|---|---|
| விருட்சிகம் | - | சூரியன், புதன், வியாழன், |
| தனு | - | செவ்வாய், வெள்ளி. |
| கும்பம் | - | சனி |
| மீனம் | - | கேது |
| கன்னி | - | இராகு |

★ சந்திரன்–தனு, மகரம், கும்பம், மீனம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை மந்தம், மனக்கவலை. | பகல் | 12 மணி |
| திங்கள்- புதியமுயற்சி, அந்நியர் சகவாசம். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை | 7 மணி |
| புதன்- முயற்சி பலிதம், பணக் கஷ்டம். | பகல் | 12 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், காரியானுகூலம். | காலை | 7 மணி |
| வெள்ளி - வீண்மனஸ்தாபம், மனக்கவலை. | பகல் | 12 மணி |
| சனி- பொருள் வரவு, காரியசித்தி. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் நஷ்டம், பணத்தட்டுப்பாடு. | காலை | 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, செலவீனம். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- பணவரவு, காரியசித்தி. | காலை | 6 மணி |
| புதன்- உவினர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | பகல் | 7 மணி |
| வெள்ளி- துயர் நீங்கும், அந்நியர் உதவி. | பி.ப. | 1 மணி |
| சனி- பெரியோர் நட்பு, கௌரவ நிலை. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- உயர்ந்த நிலை, மனக் கவலை. | பி.ப. | 12 மணி |
| திங்கள்- தொழில் உயர்ச்சி, பணக் கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, முயற்சி பலிதம். | காலை | 6 மணி |
| புதன்- வீண் மனஸ்தாபம், உறவினர் பகை. | பகல் | 12 மணி |
| வியாழன்- புதிய முயற்சி, பணச் செலவு. | காலை | 7 மணி |
| வெள்ளி- பயனுள்ள செயல், மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| சனி- துயர் நீங்கும், பண வரவு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை | 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை | 7 மணி |
| புதன்- வீண் கவலை, கௌரவக் குறைவு. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், தேகசுகம் பாதிப்பு. | காலை | 6 மணி |
| வெள்ளி- உறவினர் பகை, பண விரயம். | பி.ப. | 2 மணி |
| சனி- மனக்குறை நீங்கும், சுக வாழ்வு | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, பயனுள்ள செயல். | பகல் | 12 மணி |
| செவ்வாய்-வீண்குறை கேட்டல், மனக் கவலை. | காலை | 7 மணி |
| புதன்- அந்நியர் உதவி, மனக்குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| வியாழன்-தொழில் உயர்ச்சி, கௌரவம். | காலை | 6 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பயனுள்ளசெயல். | பி.ப | 2 மணி |
| சனி- மன மகிழ்ச்சி, கெரவம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-சனி, அதிஷ்ட இலக்கம்-8

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரியானுகூலம், பண வரவு. | பி.ப. | 2 மணி |
| திங்கள்- மன மகிழ்ச்சி, தொழில் சிறப்பு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- அந்நியர் உதவி, கௌரவம். | காலை | 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | காலை | 7 மணி |
| வியாழன்- வீண்குறை கேட்டல், மனக் கவலை. | பி.ப. | 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, கௌரவம். | காலை | 6 மணி |
| சனி- வெளியிடப் பயணம், முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பொருள் வரவு, மன மகிழ்ச்சி. | காலை | 7 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, உறவினர் உதவி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- மனக்குறை நீங்கும், பயனுள்ள செயல். | காலை | 7 மணி |
| புதன் - உறவினரால் தொல்லை, மனக் கவலை. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை | 8 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், தொழிலில் பிரச்சனை. | காலை | 8 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. | 1 மணி |
| திங்கள்- உறவினர் உதவி, மனக் குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| செவ்வாய்- துயர் நீங்கம், வெளியிடப் பயணம். | காலை | 7 மணி |
| புதன்- புதிய நட்பு, பண வரவு. | பகல் | 12 மணி |
| வியாழன்- செய்தொழில் விருத்தி, பயன் அதிகம். | காலை | 7 மணி |
| வெள்ளி- வீண் கவலை, தொழில் கேடு. | பி.ப | 2 மணி |
| சனி- காரியத் தடை, பணத் தட்டுப்பாடு. | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-5

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை உயர்ச்சி, முயற்சி பலிதம். | காலை | 6 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், மனக்குறை நீங்கும். | காலை | 9 மணி |
| செவ்வாய்- தொழில்நிலை மந்தம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| புதன்- பயனுள்ள செயல், தொழில் உயர்ச்சி. | காலை | 7 மணி |
| வியாழன்-வீண்குறை கேட்டல், மனக் கவலை. | காலை | 6 மணி |
| வெள்ளி- அந்நியர் நட்பு, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| சனி- தொழில் சிறப்பு, உயர்ந்த எண்ணம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-9

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பண வரவு. | காலை | 6 மணி |
| திங்கள்- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | காலை | 6 மணி |
| புதன்- துயர் நீங்கும், மன மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வியாழன்- உயர்ந்த நிலை, மனக் குறைநீங்கும். | காலை | 7 மணி |
| வெள்ளி- தொழில்நிலை மந்தம், கௌரவக் குறைவு. | பி.ப. | 1 மணி |
| சனி- உறவினர் உதவி, பணச் செலவு. | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில்நிலை மந்தம், மனக் கவலை. | பகல் | 12 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பி.ப. | 1 மணி |
| செவ்வாய்- அந்நியரால் தொல்லை, பொருள் இழப்பு. | பகல் | 6 மணி |
| புதன்- பயனற்ற செயல், செலவு மிகுதி. | காலை | 7 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், மனக் கலக்கம். | பி.ப. | 2 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, பணக் கஷ்டம். | காலை | 7 மணி |
| சனி- துயர் நீங்கும், முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-1

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)


| | | |
|---|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை | 7 மணி |
| திங்கள்- வீண்குறை கேட்டல், அந்நியர் நட்பு. | பகல் | 12 மணி |
| செவ்வாய்- தொழில் பலிதம், பண வரவு. | காலை | 7 மணி |
| புதன்- உயர்ந்த நிலை, முயற்சி வெற்றி. | பி.ப. | 2 மணி |
| வியாழன்- துயர் நீங்கும், கௌரவம். | காலை | 6 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, மன மகிழ்ச்சி. | பி.ப. | 2 மணி |
| சனி- காரிய சித்தி, பண வரவு. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6



படிப்பகம்





## சின்னப் பூக்கள்

சின்னச் சின்னப் பூக்களே
சிரிக்கும் நல்ல பூக்களே
சிந்தை கவரும் பூக்களே
சிறப்புப் பெற்ற பூக்களே

வண்ண வண்ணப் பூக்களே
வகை வகையாய்ப் பூக்களே
வட்ட வட்டப் பூக்களே
வசந்தம் தரும் பூக்களே

அழகு மிக்க பூக்களே
அசைந்து ஆடும் பூக்களே
அருமை யான பூக்களே
அரும்பு விட்ட பூக்களே

நீங்கள் தரும் இன்பத்தை
நீக்க எவரும் இல்லையே
நீரும் ஊற்றி வருகிறேன்
நீங்கள் நன்றாய் வளரவே!


எஸ்.கண்ணன்.

வாழி கல்வி செல்வம் எய்தி
மனம கிழ்ந்து கூடியே
மனிதர் யாரும் ஒரு நிகர்ச
மானமாக வாழ்வமே!

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# விவேகனின் விவேகம்!



மருங்காபுரி மன்னன் வீரசிம்மனுக்குத் திடீரென்று வந்த விஷக் காய்ச்சலால் இரண்டு காதுகளிலும் கோளாறு ஏற்பட்டு, இறுதியில் காது கேளாமல் போய் விட்டது. அதை எந்த வைத்தியராலும் குணப்படுத்த முடியவில்லை.

இதனால் ராணி அமுதவல்லி மிகவும் வருத்தமுற்றாள்.

விஷயத்தைக் கேள்விப்பட்ட அமுதவல்லியின் தம்பி முகுந்தன், தனது முல்லை நாட்டிலிருந்து வீரசிம்மனைப் பார்க்க வந்தான்.

சில நாட்கள் அங்கு தங்கியிருந்து வீரசிம்மனுக்கும், அமுதவல்லிக்கும் ஆறுதல் சொன்னான். பிறகு ஒருநாள் தனது முல்லை நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றான்.

தனது மைத்துனருக்கு ஏற்பட்ட துன்பத்தின் விளைவாக, தனது நாட்டில் உள்ள காது கேளாதவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று எண்ணினான்.

அதன்படி,'ஏழ்மை நிலையில் உள்ள பிறவியிலிருந்து காது கேளாதவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்யப்படும்' என்று நாடு முழுவதும் செய்தி அனுப்பினான்.

அந்த அறிவிப்பைக் கேட்டு ஐநூறு காது கேளாதவர்கள் அரசாங்கத்தின் உதவியைப் பெற அரண்மனைக்கு வந்தனர். வந்திருக்கும் அனைவரும் பிறவியிலேயே காதுகேளாதவர்கள்தானா என்பதைப் பரிசோதிக்கும் பொறுப்பை அமைச்சர் விவேகனிடம் ஒப்படைத்தான்.

அன்று மாலை, உதவி பெற வந்த ஐநூறு பேரில், நூறு பேரை மட்டும் அழைத்துக்கொண்டு உலாவச் சென்றான் விவேகன். அவர்களுடன் முகுந்தனும் சென்றான்.

நகரைத்தாண்டி அவர்கள் போய்க் கொண்டிருந்தபோது, ஒரு புதர் மறைவில் இருந்து உறுமல் ஒலி கேட்டது. அதைத் கேட்ட விவேகன்,

"ஐயோ!புலி!புலி! எல்லாரும் ஓடுங்கள்" என்று சத்தமிட்டான்.

அவன் எதிர்பார்த்தது நடந்தது. அந்த நூறு பேரில், அறுபது பேர் தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வேகமாக ஓடினார்கள்.

"அரசே! அதோ ஓடுகிறார்களே அவர்கள் எல்லோருமே காது கேளாதவர் அல்லர். இதைக் கண்டு பிடிப்பதற்காகத்தான் புதர் மறைவில் ஒருவனை மறைந்திருக்கச் சொல்லி புலிபோல் உறுமச் சொன்னேன். இதன் மூலம் காது கேளாதவர் போன்று நடித்தவர்களைக் கண்டுபிடிக்க முடிந்தது" என்றான் விவேகன். முகுந்தன் அவனின் புத்திக் கூர்மையைப் பெரிதும் பாராட்டினான்.

விவேகன் இதே போல் பல சோதனைகளைச் செய்து, உதவி பெற வந்த ஐநூறு காது கேளாதவர்களில்,நூற்றி எண்பது பேரைத் தேர்ந்தெடுத்தான். ஆனால் இப்படித் தேர்ந்தெடுத்தவர்களை மறுபடியும் சோதிக்க வேண்டும் என்று முகுந்தனிடம் கூறி, அதற்கான அனுமதியையும் பெற்றுவிட்டான்.

மறுநாள் அந்த நூற்றி எண்பது பேரையும் ஒவ்வொருவராக இருட்டு அறைகளுக்குள் போகும்படி கட்டளையிட்டான் விவேகன்.

ஒரு காது கேளாதவன் உள்ளே போனதும் கதவு மூடப்பட்டது. உள்ளே இருந்து வேட்டை நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டது. பிறகு அந்த அறையினுள் நுழைந்த காது கேளாதவன் வேறொரு வழியாக வெளியே அனுப்பப்பட்டான். பிறகு அந்த அறைக்குள் விவேகனின் ஆள் ஒருவன் போய் பரிசோதித்து விட்டு வந்து, தன் முடிவை விவேகனிடம் தெரிவித்தான். இப்படியாக பத்து இருட்டு அறைகளில் எல்லோரும் தனித்தனியாக அனுப்பப்பட்டனர்.

இறுதியில் விவேகன், முகுந்தனிடம்;

"அந்த நூற்றி எண்பது பேரில் அறுபது பேர்களுக்கு மட்டுமே உண்மையாகக் காது கேட்காது. மற்றவர்கள் எல்லாம் முதல் சோதனையில் எம்மை எப்படியோ ஏமாற்றி இந்த இரண்டாவது சோதனைக்குள் திறமையாக நுழைந்து விட்டார்கள்," என்றான் விவேகன்.

"அது சரி விவேகா! அவர்களுக்கு கடைசியாக என்ன சோதனை வைத்தாய்?" என்று கேட்டான் முகுந்தன்.

"அரசே! இருட்டு அறைகளில் நம் வேட்டை நாய்களைக் கட்டி வைத்திருந்தோம். அறையின் தரையில் சுண்ணாம்புப் பொடியைத் தூவி வைத்திருந்தோம். உண்மையாகக் காது கேட்காதவர்களுக்கு நாய்கள் குரைப்பது கேட்காது. அதனால் அவர்கள் பயம் இல்லா மல் நேராகவும், ஒரே சீராகவும் நடந்து போனார்கள். காது கேட்பவர்கள் நாய்களின் சத்தத்தைக் கேட்டு பயந்து ஓடினார்கள். தரையில் சுண்ணாம்புப் பொடியைத் தூவி இருந்ததால் சாதாரணமாக நடந்தவர்களையும், பயந்து ஓடியவர்களையும் அவர்களின் காலடிச் சுவடு மூலம் தெரிந்து கொள்ள முடிந்தது.

"அரசாங்கத்தில் பல நல்ல திட்டங்களைக் கொண்டு வரும்போது இப்படித்தான் பல மோசடிக்காரர்கள் பலன் பெற ஊடுருவி விடுவார்கள். அவர்களை இவ்வாறு களையெடுத்தால் தான் அரசுத் திட்டங்கள் வெற்றியை அடைய முடியும்," என்றான் விவேகன்.

வீவேகனின் அபார அறிவையும், திறமையையும் பாராட்டிப் பல பரிசுகள் வழங்கினான் முகுந்தன்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!




மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 02.12.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 118
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 115

பரிசுக்குரியவர்:
ஞா. தனுஜா
ப/சாந்த கிளேயர் மகளிர் மகா வித்தியாலயம்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| அ.சத்தியநாதன்<br>பது/வேவெஸ்ச இல 2, தமிழ் வித், பதுளை. | எம்.எம்.மொஹமட் அனீஸ்<br>ஸாதிக் மகா வித், கொடபிடிய, அக்குரஸ்ஸ. |
| எம்.எஸ்.எம்.இன்ஷாப்<br>இல, 3, புதிய பாலமுனை, காத்தான்குடி. | யோ. லக்சன்<br>வி.எம்.ஆர்.இன், 112, கொழும்பு-13. |
| கே. கிருஷ்ணசாந்தினி<br>ப/பசறை தமிழ் மகா வித், பசறை. | எம்.இரவீந்திரராஜ்<br>இராகலை த.ம.வி. இராகலை. |
| செல்வன். அ. சாமிசியாம்<br>மகாஜன கல்லூரி,மட்டக்களப்பு. | ஜே.அறபாத் இம்றான்<br>அல் அஸ்கர் மு. மகா. வித், ஹெம்மாத்தகம. |
| எஸ்.எல். ஜெனீஸ்<br>இல 23, பெருக்குவட்டான், கொத்தாந்தீவு. | எஸ்.நவநீதன்<br>ஒலிரூட் ரத் டிவுஸ்சன், தலவாக்கலை. |

## உங்களுக்குத் தெரியுமா?

1.கண் இமைக்காமல் இருக்க முடியுமா உங்களால்? முடியவே முடியாது. இந்தக் கண்ணிமைக்கும் செயல், 6 விநாடிக்கு ஒரு முறை நிகழ்கிறது.

2.ஒரு நாகபாம்பின் விஷத்தைவிட 50 மடங்கு விஷமுடையது கடற்பாம்பு விஷம்.

3.கொம்பியூட்டர் இன்று மிக அத்தியாவசியத் தேவைகளுள் ஒன்று. இது 1944ல் அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டது.

4.பறவைகள் இடும் முட்டைகளில் மிகப் பெரியது தீக்கோழியின் முட்டை. இது சாதாரண கோழி முட்டையை விட 20 மடங்கு பெரியது.

5.உலகில் ஏறத்தாழ 3000 வகையான பல்லி இனங்கள் உள்ளன. அதில் ஒரு வகைதான் நாம் வீட்டில் காணும் பல்லிகள்.

6.யானைகளுக்கு துதிக்கை 25 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்புதான் தோன்றின. அதற்கு முன் யானைகளுக்கு துதிக்கை இல்லை.

7.'ஹோப்' என்ற வைரம் உலகிலேயே அரிதான வைரம். ஆனால் இதை வைத்திருந்த அனைவரும் பலியானார்கள். எனவே இது துரதிஷ்டமான வைரம் எனப்படுகிறது.

8.முதலைகளின் வியர்வை கண்களின் வழியாகவே வெளியேறுகிறது.

9.நாம் வாழும் பூமியின் எடை ஏறத்தாழ 6,600 டிரில்லியன் தொன்களாகும். அதாவது சுமார்6,60,00,000 தொன்கள்.

10.உயிரினங்கள் எதுவும் வசிக்காத கடல் 'சாக்கடல்' (DEAD SEA) இது ஏனைய கடல்களை விட 6 மடங்கு உப்புச் செறிவுடையது.

**தொகுப்பு: எம்.எச்.அப்துல்லா, களுத்துறை தெற்கு.**

## ஆங்கிலத்தில் ஆச்சரியம்

* 'I DO NOT KNOW WHERE FAMILY DOCTORS ACQUIRED ILLEGIBLY PERPLEXING HANDWRITING.'




இதில் என்ன விசேஷம் என்றால் ஒவ்வொரு வார்த்தையாகப் பாருங்கள். முதல் வார்த்தைக்கு ஒரு எழுத்து, இரண்டாவது வார்த்தைக்கு இரண்டு எழுத்துக்கள் என்று ஆரம்பித்து பதினொராவது வார்த்தைக்கு பதினொரு எழுத்துக்கள்.

* MY BROTHER BROUGHT HIS CAR YESTERDAY.

இந்த வாக்கியத்தில் ONLY என்ற வார்த்தையை எடுத்து வாக்கியத்தில் எங்கு வேண்டுமானாலும் போட்டுப் பாருங்கள். இந்த வாக்கியத்தின் அர்த்தம் கெடவே கெடாது.

* KILL HIM NOT, LEAVE HIM.

இந்த வாக்கியத்தின் அர்த்தம் 'கொல்லவேண்டாம் அவனை விட்டு விடுங்கள்' என்பதாகும். ஆனால் இதில் வரும் கமா(,)வை மாற்றி பின்வருமாறுபோட்டால் KILL HIM, NOT LEAVE HIM. 'கொல்லுங்கள் அவனை விட்டுவிட வேண்டாம் என்று அர்த்தமாகி விடும்'.

* 'ABLE WAS I ERE I SAW ELBA'

இதைச் சொன்னவர் மாவீரன் நெப்போலியன். இந்த வாக்கியத்தை நேராகப் படித்தாலும், உருது மொழியைப் போல் வலமிருந்து இடமாகப் படித்தாலும் விஷயம் மாறாது.

* A, B, C என்ற இந்த மூன்று எழுத்துக்களும் இல்லாமல் ஐந்து நிமிடத்திற்குள் நூறு சொற்களைக் கூறமுடியுமா? இதற்காக அதிகம் யோசிக்கத் தேவையில்லை. ஒன்று தொடக்கம் நூறு வரை ONE, TWO..... என ஆங்கிலத்தில் எழுதிப் பாருங்கள் A, B, C ஆகிய எழுத்துக்கள் வராது.

**தொகுப்பு-எஸ்.பிரபு.**

## வாரம் ஒரு நாடு

### அயர்லாந்து




**தலைநகர்**-டப்ளின்
**பரப்பு**-35,26,000 சதுர கிலோ மீற்றர்
**மொழி**-ஐரிஷ், ஆங்கிலம்
**எழுத்தறிவு**-99%
**சமயம்**-கிறிஸ்தவம்
**நாணயம்**-ஐரிஷ் பவுண்
**தனி நபர் வருமானம்**-11200 டொலர்.
**வரலாறு:**

அயர்லாந்துத் தீவில் மொத்தம் 32 மாவட்டங்கள் உள்ளன. சுதந்திர நாடான அயர்லாந்தில் 26 தீவுகளும் இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட 6 மாவட்டங்களும் இணைந்துள்ளன. இங்கிலாந்தின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் இரு பிரிவுகள் நீண்ட நெடுங் காலமாக மோதி வருகின்றன. தனிநாடாகப் பிரிய வேண்டும் என்பதில்தான் மோதல்கள். அண்மையில்தான் ஒரு சமரசத்திட்டம் உருவாகியுள்ளது.

தனிநாடான அயர்லாந்து ஒரு ஜனநாயகக் குடியராசாகும்.

**பொருளாதாரம்:**

இங்கு தொழில் நுட்ப, பொறியியல்,வேதிப்பொருள் தொழிற் சாலைகள் அதிகமாக உள்ளன. கால்நடை வளர்ப்பும் முக்கிய தொழில் ஆகும்.

## மிலன் தேவாலயம்



இத்தாலிய நாட்டில், மிலன் என்னும் இடத்தில் அமைந்துள்ள தேவாலயம், ஐரோப்பாவிலேயே குறிப்பிடத்தக்க தேவாலயமாகும்.

இந்தத் தேவாலயம் 1385ம் ஆண்டு கட்டத் தொடங்கி, 1813ம் ஆண்டு தான் கட்டி முடிக்கப்பட்டது. இந்தத் தேவாலயம் விரைவில் கட்டி முடிக்கப்பட வேண்டுமென்பதில், நெப்போலியன் மிகுந்த அக்கறை காட்டினார். இந்தத் தேவாலயம் முழுக்க முழுக்க சலவைக் கல்லினால் ஆனது. இதனுள் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில, தேவாலய கூரையைத் தொடுமளவுக்குப் பிரமாண்டமாகக் காணப்படுகின்றன.

ஐரோப்பாவில், ஆல்பைன் மலையில் அமைந்துள்ள புராதனமான 'மான்ட் ரோசா' என்ற தேவாலயத்தை மாதிரியாக வைத்தே, மிலன் தேவாலயமும் கட்டப்பட்டதாகக் கூறுகின்றனர்.மிலன் அரச குடும்பத்தைச் சேர்ந்த பலர் இறந்த பிறகு. இந்த தேவாலயத்தினுள்ளே அடக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

# விலை உயர்ந்த குற்றம்

பட்டுக்கோட்டை பிரபாகர்

11

**ம**றுநாள் காலை.

பணம் கொடுத்த பிற்பாடும் இன்னும் சரவணகுமார் ஏன் வந்து சேரவில்லை என்று ஜீவானந்தம் கவலைப்பட்டுக் கொண்டிருக்க....

பார்க்கர் ஸ்மித் அறையில் ஆனி, மார்ட்டின் மற்றும் கண்ணபிரான்.

"என்ன மிஸ்டர் கண்ணபிரான், நான் சொன்னதெல்லாம் புரிந்ததா!"

"புரியுது, புரியுது. நீ சொன்னபடி எல்லா வேலையும் செஞ்சி முடிச்சி அக்கடான்னு இருந்தேன். இன்னும் ஒரு வேலை வச்சிட்டே. சரி. செஞ்சிடறேன்."

"எப்படி செய்வீங்க சொல்லுங்கள்."

"அட புரியுதுப்பா. அந்த சிக்கந்தர் பையனைக் கடத்திக்கிட்டு பம்பாய் போய்ட்டான். நீ இன்னிக்கு ராத்திரி மார்ட்டினோட ஃபிளைட்டில புறப்பட்டு ராத்திரி பத்து மணிக்கெல்லாம் பம்பாய் போய்டறே. கிஷன்சந்த் ஆளு மாதிரி மார்ட்டினை" அனுப்பி பணம் தந்து பையனை வாங்கிக்கிட்டு நம்ம பம்பாய் பங்களால வச்சிக்கப்போறே. நான் இங்கே ஜீவானந்தமும், போலீசும் பையன் பணத்துக்காக கடத்தி இங்கேயே ஒளிச்சி வைக்கப் பட்டிருக்கான்னு நம்ப வைக்கிறதுக்காக ஜீவானந்தத்துக்கு பப்ளிக் பூத்லேருந்து போன் பண்ணி அஞ்சு லட்சம் பத்தாது. இன்னும் அஞ்சு வேணும், ரெடி செய், விபரம் ரெண்டு நாள்ல சொல்றேன்னு சொல்லணும். இதுக்கு நடுவில கணேசன் பேர்ல சரவணகுமார் போட்டோ ஒட்டி பாஸ்போர்ட், விசா, டிக்கட் எடுத்து ஆனிகிட்டே ஒப்படைச்சி பம்பாய்க்கு அனுப்பி வைக்கணும். அவ்வளவுதானே?

"அவ்வளவுதான், மார்ட்டின், நாம் புறப்படப் போவது மாலையில்தான். அதற்குள் நீ துப்பாக்கி எடுத்துக் கொண்டு போய் அந்த நண்பன் வீட்டு அரிசி ட்ரம்மிலிருந்து பணப் பார்சலை எடுத்து வா. அதில் இருக்கும் ஐந்து இலட்சத்தில் நான்கு இலட்சம் நிஜமாகவே அந்த சிக்கந்தருக்கு அவன் மூளைக்காக, உழைப்புக்காக கொடுத்து விட்டு...... மிச்சம் ஒரு இலட்சம் உனக்கே உனக்கு மார்ட்டின். போகலாமா கண்ணபிரான்?"

"எங்கே?"

"அனாதை இல்லத்திற்கு அந்த கணேசனை நம்மோடு அழைத்து வருவதற்கு."

"எல்லாம் சரி. அழைத்து வந்து என்ன செய்யப் போறே அவனை?"

"ஆனி பம்பாய் புறப்படும் வரை அவளுடன் இருக்கட்டும்."

"அதன் பிறகு"

"உங்களிடம் ஒப்படைப்பேன். இந்த பிராஜெக்ட்டுக்காக வேறு வழியே இல்லாமல் அந்தப் பையனைக் கொல்ல வேண்டியிருக்கிறது. மன்னிக்க வேண்டும். கண்ணபிரான், அதையும் நீங்கள் தான் செய்கிறீர்கள்" என்றார் பார்க்கர் ஸ்மித்.

•••



**மா**ர்ட்டின் திருவொற்றியூரில் அந்த தனிமை காலையில் செல்வத்தின் வீட்டிற்கு வந்த போது, செல்வம் அலுவலகம் சென்றிருக்க.... கதவு பூட்டியிருந்தது. மூன்றே முயற்சியில் திறந்தது. நேராய் உள்ளே சென்று என்னவோ இவனே போட்டு வைத்தது போல ட்ரம்மைத் திறந்து, அரிசியைக் கிளறி பார்சலை எடுத்துக் கொண்டு முன்போல பூட்டி வைத்து விட்டுத் திரும்பினான்.

•••

**டெ**லிபோன் ஒலிக்க ஜீவானந்தம் எடுத்தார்.

"ஹலோ ஜீவானந்தம் சாரா?"

"ஆமாம் "

"பையன் உசுரோட வேணும்னா இன்னும் ஒரு அஞ்சு இலட்சம் வேணும். எப்படி தரணும்னு ரெண்டு நாள்ல சொல்றேன்."

•••

**அ**ரவிந்தா அனாதை இல்லத்தில் அந்தப் பையன் கணேசன் தன் தோழர்களிடம் எல்லாம் கை குலுக்கி விட்டு, பெரியவரிடம் காலில் விழுந்து வணங்கி விட்டு பார்க்கர் ஸ்மித், ஆனியுடன் புறப்பட்டான்.

"சார் எங்கே போகிறோம்?"

என்றான் கணேசன்.

"இப்போது ஹோட்டல் போகிறோம். நீ இந்த ஆன்டியுடன் இரு. நான் உன் பயண ஏற்பாடு தொடர்பாக இரண்டு தினங்கள் வெளியூர் சென்று விட்டு வருகிறேன்."

அன்று மாலை 6.15 க்கு மார்ட்டினும், பார்க்கர் ஸ்மித்தும் பம்பாய் விமானத்தில் ஏறுமுன்பு வழியனுப்ப வந்த கண்ணபிரானிடம் நன்றி சொல்லி விடை பெற்றார் ஸ்மித்.

•••

**ம**றுநாள் அதிகாலை 3.30 க்கு.....

கிஷன்சந்த் அனுப்பியிருந்த பணத்துடன், சந்தன நிற ஃபியட்டுடன் காத்திருந்த நபரைத் தாண்டி அவனுக்கும் ரெண்டு கிலோமீட்டர் முன்னால் வந்து கண்ணபிரான் ஏற்பாடு செய்திருந்த வண்டியைக் கொண்டு வந்து நிறுத்தி, நம்பர்பிளேட் மாற்றி, வெள்ளை கர்சிப்புடன் காத்திருந்தான் வருகிற கார்களை எல்லாம் பார்த்துக் கொண்டே மார்ட்டின்.

4.50 க்கு சுபாவின் பிரௌன் நிற அம்பாஸிடர் வந்தது. கிட்டே வர வர.... எண்கள் தெரிந்தது. உடனே மார்ட்டின் காருக்கு எதிராக நின்று கைக்குட்டை அசைக்க.... வேகம் குறைந்து நின்றது.

சுபா எதிரே நிற்கும் கவரின் நம்பரைப் பார்த்து திருப்தியுற்று நிறுத்தி இறங்கினான், மார்ட்டின் ஒரு லெதர் பையில் நான்கு இலட்சத்துடன் அவனை நெருங்கி, "பயணம் சுகமா?" என்றான்.

"நல்ல சுகம். விடியறதுக்கு முந்தி மாத்திடலாம். உன் கார் கதவை திறந்து வச்சிட்டு வா" என்றான் சுபா.

மார்ட்டின் அதன்படி செய்து, பிறகு இருவருமாய் இந்தக் காரிலிருந்து அந்தக் காருக்கு கட்டப்பட்டிருந்த நிலையிலேயே இருந்த சரவணகுமாரை மாற்றினார்கள்.

சுபா கை குலுக்கி விடை பெற்றான். காரைத் திருப்பினான்.

மார்ட்டின் அவன் கார் மறைந்ததும், மறுபடி நம்பர் பிளேட் மாற்றிக் கொண்டு திருப்பி பம்பாயின் எல்லையைத் தொட்ட போது, நம்பிக்கையோடு கார் அருகில் சிகரட் புகைத்துக் கொண்டு கிஷன்சந்தின் உண்மையான ஆள் காத்திருப்பதைப் பார்த்து சிரிப்பை அடக்கிக் கொண்டான்.

கண்ணபிரானின் தனி பங்களாவுக்கு வந்து, ஒரு தனியறையில் கிடத்தப்பட்டான் சரவணகுமார். எப்பேர்ப்பட்ட இளம் ஜீனியஸ்! அவனை செயல்படவிடாமலேயே, ஒரு சின்ன சந்தர்ப்பம்கூட தராமலேயே மீண்டும் மீண்டும் மயக்கத்தில் ஊசி மூலம் வைக்கப்பட்டான் அங்கு.

•••

**சொ**ன்னபடி சிபாரிசு மற்றும் இலஞ்சம் மூலமாக பாஸ்போர்ட், விசா, டிக்கெட் எடுத்து ஆனியிடம் கொடுத்து, கடைசி கடைசியாக உள்ளங்கையில் மட்டும் முத்தமிட்டு பம்பாய்க்கு அனுப்பி வைத்தார் கண்ணபிரான்.

அன்றிலிருந்து மூன்றாம் நாள்.

திட்டப்படியே பார்க்கர் ஸ்மித், ஆனி, கட்டுக்கள் இல்லாத ஆனால் உறக்கத்தில் இருந்த சரவணகுமார் லூப்தான்சாவின் விமானத்தில் ஏறினார்கள். (பயணிகளின் பரிசோதனையின் போது 'இந்த என் தத்துப் பையனுக்கு மூன்று தினங்களாகக் காய்ச்சல். ஊசி போடப்பட்டுள்ளது. இதோ டாக்டர் சர்ட்ஃபிகேட்' என்ற பார்க்கர் ஸ்மித்தின் பதிலில் அதிகாரிகள் சந்தேகப்படவில்லை.)

அவர்களின் விமானம் க்ளியரன்ஸ் பெற்று வானத்தில் மிதந்த போது.....

கண்ணபிரானின் கையாள் ஒருவனால் பிரிக்கப்பட்ட கணேசனின் உயிரும் வானத்தில் மிதந்தது. உடல் கண்ணபிரானின் தோப்பில் குப்பையோடு குப்பையாக எரிக்கப்பட்டது.

நியூயார்க்கின் ஜான், எஃப்.கென்னடி விமான நிலையத்தில் அவர்களைச் சுமந்த விமானம் இறங்கி நின்றதும், கிளியரேஷன் கஸ்டம்ஸ் சோதனைகள் முடிந்து சிக்கலின்றி ஏர்போர்ட்டை விட்டுவெளியே வந்ததும்.....

பார்க்ர் ஸ்மித் நிம்மதியாக பெருமூச்சு விட்டார்.

நியுயார்க் கென்னடி விமான நிலையத்தில், லூப்தன்ஸாவின் விமானம் உடல் முழுக்க வைரக் கீறல்களுடன் இறங்கி, அதிலிருந்து பார்க்கர் ஸ்மித், ஆனி, மற்றும் அரை மயக்கத்தில் நடந்த சரவணகுமார் வெளிப்பட்ட போது இரவு மணி 11.10. பனிக்காற்று காதருகில் விஸ்; விஸ் என்று விசிலடித்துக் கொண்டிருந்தது.

இமிகுரேஷன் பகுதியில் இந்தியாவில் சொல்லப்பட்ட அதே பொய் மறுபடி சொல்லப்பட்டது. கண்களில் வரவழைக்கப்பட்ட சோகம்.

"பையனுக்கு உடல்நிலை சரியில்லை. ஊசி போடப்பட்டுள்ளது.

பாஸ்போர்ட்ஸ், விசாஸ், சர்ட்டி ஃபிகேட்ஸ் சரி பார்க்கப்பட்டன.

பையன் பெயர்?" என்றார் அதிகாரி, செம்பட்டை மீசை. பச்சையாய் சவரம்.

"கணேசன்" என்றார் பார்க்கர் ஸ்மித். சிகரெட் புகை மத்தியில்.

ஒட்டப்பட்டிருந்த சரவணகுமாரின் முகத்துடன், ஒரிஜினல் முகம் சரிபார்க்கப் பட்டதும், "தத்து எடுத்துள்ளீர்களா?" என்றான் அதற்கான சான்றிதழில் பென்சில் ஒட்டி.

"ஆமாம்"

"குடியுரிமைக்கு..."

"விண்ணப்பம் கொடுக்கப்பட்டுள்ளது."

முத்திரைகள் குத்தப்பட்டன. மரியாதைப் புன்னகைகள் பரிமாற்றம் செய்யப்பட்டன. விமான நிலையக் கட்டிடத்திற்கு வெளியே வந்தார்கள். வெளிச்ச மழை.

சரவண குமாருக்கு சொப்பனத்தில் நடப்பது போலிருந்தது. நெற்றிப் பொட்டில் விண், விண் என்று விட்டு விட்டு வலித்துக் கொண்டிருந்தது. புகை படிந்த கண்ணாடி அணிந்து பார்ப்பது போலிருந்தது. கால்கள் இயந்திர கதியில் நடந்து கொண்டிருந்தன. யாருடன் போகிறோம், இது என்ன இடம், இவர்கள் யார் என்று கேள்விகளை எழுப்புகிற அளவுக்குக் கூட அவன் சுயநினைவில் இல்லை. இது ஏதோ கனவில் வருகிற காட்சி. இது உறக்கம். எல்லாம் உறக்கத்தில் நடக்கும் விஷயங்கள். கண்களைத் திறந்து மூடக்கூட சிரமப்பட்டான்.

உதவிக்கு நான் உன்... சென்றதோ, அங்கிருந்து நீ... தினமோ அங்கு கண்ணபிரா... உதவி செய்ததோ, பிள்ளை தத்து ... தாக ஆதாரப் பூர்வமாக இரண்டு அ... சாங்கங்களையும் ஏமாற்றிய திட்டமோ...



கார் பார்க்கிங்கில் ஏராள மௌன ரதங்கள் மண்டைகள் பளபளக்க தங்கள் எஜமானர்களுக்காகக் காத்திருந்தன. பனியால் ட்ராப் ட்ராப்பாய் அழுது கொண்டிருந்தன.

"ஹலோ சார்" என்று வந்தான் வெஸ்லி, இரண்டு பேரிடமிருந்தும் சூட்கேஸ்களை வாங்கிக் கொண்டான். "பையன் யார்?" என்று கன்னத்தில் கிள்ளினான்.

"சொல்கிறேன், வெஸ்லி, நான் சொன்ன காரியங்கள் எல்லாம் செய்து முடித்து விட்டாயா?" என்றார் பார்க்கர் ஸ்மித்.

"ஆயிற்று சார். இருங்கள் கார் எடுத்து வருகிறேன்."

வெஸ்லி சென்றதும், பார்க்கர் ஸ்மித் சுற்றிலும் பார்த்தார்.

"ஜோ அண்ட் ஜோ நிறுவனத்திலிருந்து நம்மை வரவேற்க யாராவது வருவார்கள் என்று நான் எதிர்பார்த்தேன்" என்றாள், ஆனி தன் மேல் சாய்ந்திருந்த சரவணகுமாரின் தலையைக் கோதிக்கொண்டு.

புன்னகைத்தார் பார்க்கர்.

"ஆனி, ஒரு பெரிய திட்டம் வகுத்தேன். அதை இரண்டு கட்டங்களாகப் பிரித்துக் கொண்டேன். முதல் கட்டம் பையனை இங்கே கொண்டுவருவது"

"இரண்டாவது கட்டம்?"

வெஸ்லி ஆரஞ்சு வர்ண கெடிலாக் காரை அவர்களுக்கு அருகில் நிறுத்த....

"வா. போய்க் கொண்டே பேசலாம்"

காரின் பின் இருக்கையில் சரவணகுமாரைக் கிடத்திவிட்டு முன்புறம் இருவரும் ஏறிக் கொண்டார்கள். முப்பத்தைந்து கிலோமீற்றர் தொலைவில் இருந்த நியூயார்க் நகரத்தை நோக்கிச் சீரான வேகத்தில் விரைந்தது கார்.

"பார்க்கர், உங்களிடம் இரண்டு கார்கள் இருக்கின்றனவா என்ன? லைமசைன்தானே வைத்திருக்கிறீர்கள். இது யாருடைய கார்?"

"அதை விற்கச் சொல்லி ஏற்பாடு. இதை வாங்கச் சொல்லி ஏற்பாடு. இப்போது என் வீடு ஃப்ராங்ளின் தெருவிலும் இல்லை. அதுவும் மாற்றப்பட்டு விட்டது. ரெய்ஸாவிடமும், வெஸ்லியிடமும் நான் சொல்லிவிட்டு வந்த குறிப்புக்கள் இவை. வெஸ்லி, மேடிஸன் தெருவில் உள்ள அபார்ட்மெண்டிற்கு இங்கிருந்து அத்தனைப் பொருள்களையும் மாற்றி விட்டாய் அல்லவா?"

"ஆமாம் சார்!"

"எதற்காக இந்த ஏற்பாடுகள்?"

"நம் திட்டத்தில் எங்காவது கழிவு இருந்து, அமெரிக்கா வரை விசாரணை பரவி நான் தேடப்படுகிற கட்டம் வந்தால் நான் கிடைக்காமல் இருப்பதற்கு"

"இரண்டாவது கட்டம் என்று ஒன்று சொன்னீர்களே என்ன அது?"

"ஆனி, ஜோ அண்ட் ஜோ நிறுவனம் என்னிடம் இந்தப் பொறுப்பை ஒப் படைத்த போது, இங்கிருந்து இந்தியாவிற்குச் செல்ல டிக்கெட் எடுப்பதிலிருந்து அத்தனை ஏற்பாடுகளையும் என் சொந்தப் பொறுப்பில் செய்து கொள்வதாகச் சொன்னேன். எதுவும் அவர்களுக்குத் தெரிவிக்கப்படவில்லை. சொல்லப் போனால் அட்வான்ஸாக அவர்களிடமிருந்து ஒரு பென்னி கூட நான் பெற்றுக்கொள்ளவில்லை. பத்து நாட்கள் டைம் கொடுங்கள், சரவணகுமாரைக் கொண்டு வந்து ஒப்படைத்துவிட்டு ஐம்பதாயிரம் டாலர்கள் பெற்றுக்கொள்கிறேன் என்றேன். அதுதான் ஒப்பந்தம். ஆகவே, என் ஏற்பாடுகளில், திட்டங்களில் அவர்கள் தலையிடவே இல்லை. நானும் அவ்வப்போது எதையும் ரிப்போர்ட் செய்யவே இல்லை.

"அதனால்? எதற்குச் சொல்கிறீர்கள் இதை?"

"இரு. முழுவதையும் கேள் ஆனி. நானாகத் தெரிவிக்கவே இல்லையே தவிர, அவர்கள் என் செயற்பாடுகளை யாரையாவது விட்டு உளவு பார்த்திருக்கலாம். சொன்னால் ஆச்சரியப்பட மாட்டாயே... சரவணகுமாரை ஜோ அண்ட் ஜோ நிறுவனத்திடம் நான் ஒப்படைக்கப் போவது இல்லை"

"என்ன?" என்று மிகவும் திடுக்கிட்டாள் ஆனி.

"இனி என் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தைத் துவக்கப் போகிறேன்"

"புரியவே இல்லை. அதுதான் என்ன?"

"பதறாதே ஆனி, நிதானமாக உனக்குப் புரியவைக்கிறேன். அதன் பிறகு என் நோக்கத்தை நீ ஏற்றுக் கொள்வாய், துரோகச் செயல் என்று சொல்ல மாட்டாய்"

கார் மேடிஸன் ஸ்ட்ரீட்டின் மையப் பகுதி வந்து முக்கிய சாலையில் இருந்து பிரிந்து பதினாறு மாடிகள் கொண்ட அந்த அபார்ட்மெண்ட் ப்ளாக்கின் அண்டர் கிரவுண்ட் பார்க்கிங் ஏரியாவில் ஊர்ந்து நின்று கொண்டது.

சரவணகுமாரைத் தூக்கிக் கொண்டார். பார்க்கர் ஸ்மித்.

"வெஸ்லி, பெட்டிகளை எடுத்து வந்து விடு. ஆனி, கைப்பை மட்டும் எடுத்து வா" என்று லிஃப்ட்டுக்கு நடந்தார்.

ஏழாவது மாடியில் தன் போர்ஷன் அழைப்பு மணி ஒலிக்க வைத்து, திறந்த ரெய்ஸாவைப் புன்னகைத்து, சரவணகுமாரை ஒரு அறையின் கட்டிலில் கிடத்தி விட்டு வந்த ரெய்ஸாவை அணைத்து, கன்னத்தில் முத்தமிட்டு ஸோபாவில் அமர்ந்தார் பார்க்கர் ஸ்மித்.

ஆனி கைகளைத் தனித்தனியாக உதறிக் கொண்டு, "ஹலோ மேடம், புதிய இடம் எப்படி இருக்கிறது?" என்றாள்.

(தொடர்ந்து வரும்)

## பேனா நண்பர் அரங்கம்













பெயர்: ஆர்.செல்வகுமார்
வயது: 25
முகவரி: 119, பிரதான வீதி, கொழும்பு-11.
பொழுது போக்கு: வழமையானவை.

பெயர்: எஸ். மகேஸ்வரி
வயது: 22
முகவரி: Block No. 3,Street No 35, House No. 5, Dasmah, Kuwait.
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி.

பெயர்: கே. கிரன் குமார்
வயது: 20
முகவரி: P.O.Box- 40258, Doha-Qatar, A.G
பொழுது போக்கு: பத்திரிகை, தொலைக்காட்சி, உதைபந்து.

பெயர்: எம்.அலீம்
வயது: 24
முகவரி: 147, பிரதான வீதி, கொத்தாந்தீவு, புத்தளம்.
பொழுது போக்கு: பத்திரிகை, பேனா நட்பு.

பெயர்: என். பெரேரா
வயது: 26
முகவரி: P.O.Box- 922159, Jabiei Hossen, Amman, Jordan.
பொழுது போக்கு: தொலைக்காட்சி, புத்தகம்.

பெயர்: எம். ஹாரூன்
வயது: 27
முகவரி: P.O.Box-01,PIN CODE-212, QUAIROON HARITTI,SALALAH, SULTANATE OF OMAN.
பொழுது போக்கு: பத்திரிகை, கிரிக்கெட், பேனா நட்பு

பெயர்: எவ். அருஸ்
வயது: 20
முகவரி:16 சாஹிரா கல்லூரி வீதி, மாவனல்லை.
பொழுபோக்கு: பத்திரிகை, நண்பர் தொடர்பு.

பெயர்: பி. வெங்கடேசன்
வயது: 27
முகவரி: 6, மாதம்பிட்டிய வீதி கொழும்பு-15.
பொழுது போக்கு: பத்திரிகை, வானொலி.

பெயர்: கே. சுந்தரராஜா
வயது: 31
முகவரி: HALLESCHE ALLEE 16, 76139 KARLSRUHE, GERMANY.
பொழுது போக்கு: உதைபந்து, தொலைக்காட்சி.

பெயர்: எம். முஹமட் மஹ்றூப்
வயது: 17
முகவரி: 395, அல்லா பிச்சை வீதி, வாழைச்சேனை-05.
பொழுது போக்கு: வழமையான பொழுது போக்குகள்.

பெயர்: என். றொசான் ஜோசப்
வயது: 16
முகவரி: 81/12, டன்பார் வீதி, ஹட்டன்.
பொழுது போக்கு: பத்திரிகை, கதைப்புத்தகம்.

பெயர்: ஐ.ஹில்மி
வயது: 18
முகவரி: 19, கவ்தான வீதி, தெஹிவளை.
பொழுது போக்கு: பேனா நட்பு, கிரிக்கெட், டி.வி.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

க்கின்
யோடு
ன்னல்
கதவு...

அவள் வாத்திய... , தனது இடது கையால் மெதுவாக வாசிக்கத் தொடங்கினாள். வாத்தியம் இனிமையான ஆழமான நாதத்தோடு, இசைக்க ஆரம்பித்தது. ஒரு தாழ்ந்த பெருமூச்சோடு மற்றொரு ஸ்வரமும் முதல் ஸ்தாயியோடு சேர்ந்து ஒலித்தது. அவளது வலது கைவிரல்களிலிருந்து ஸ்வரநாதம் பளிச்சிட்டுக் குபுகுபுவெனப் பொங்கிப் பிறந்தது. அந்த ஸ்வரங்கள் - அந்தத் தாழ்ந்த ஸ்வரங்களின் இருண்ட சூழ்நிலையிலே பயந்தடித்துப் படபடத்துச் செல்லும் பறவைக் கூட்டம் போல் சிதறிப் பறந்தன.

முதலில் தாய் அந்தச் சங்கீதத்தால் கொஞ்சங்கூட நெகிழவில்லை. அந்தச் சங்கீதப் பிரவாகம் அவளுக்கு வெறும் குழம்பிப்போன சப்தபேதங்களாகவே தோன்றியது. பல்வேறு ஸ்வரங்களும் பின்னுமுடைந்தெழும் இங்கித நாத சுகத்தை அவளது செவிகளால் உணர்ந்து அனுபவிக்க இயலவில்லை. அவள் சொக்கிப்போன கண்களோடு நிகலாயைப் பார்த்தாள். நிகலாய் அவள் உட்கார்ந்திருந்த சோபாவின் இன்னொரு மூலையில் கால்களை இழுத்து மடக்கி உட்கார்ந்தான். தங்கமயமான குழல் கற்றையால் விளிம்பு கட்டப்பெற்றுச் சிறந்து விளங்கும் சோபியாவின் பக்க வாட்டு உருவத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். சூரிய ஒளி சோபியாவின் தலைமீதும் தோள்மீதும் படிந்து ஒளிர்ந்து, வாத்தியத்தின் ஸ்வரக் கட்டைகளின்மீது விளையாடும் அவளது விரல்களைத் தடவிக் கொடுப்பதற்காக நழுவி இறங்கியது. அந்த கீதம் விம்மிப்பெருகி அறை முழுதும் நிரம்பி ஒலித்தது. தாயின் உள்ளத்தைத் தன்னையறியாமல் தொட்டு ஒலிக்கத் தொடங்கியது.

என்ன காரணத்தினாலோ, கடந்த காலத்தின் இருள் கிடங்கிலிருந்து ஒரு பெரும் வேதனை, மறந்து மரத்துப் போன வேதனை மீண்டும் உயிர் பெற்றெழுந்து அவள் மனத்தில் புகுந்து உறுத்தி மிகுந்த கசப்பைக் கொடுத்தது.

அந்தக் காலத்தில் ஒரு நாள் அவளது கணவன் இரவில் அகால வேளையில் நன்றாகக் குடித்துத் தீர்த்துவிட்டு வீட்டுக்கு வந்தான். அவளைத் தன் கரத்தால் இறுகப் பிடித்து, படுக்கையினின்றும் இழுத்துக் கீழே தரையில் தள்ளி ஒரு உதை கொடுத்துவிட்டுப் பேசினான்:

"இங்கிருந்து போய்விடு, நாயே! உன்னைக் கண்டாலே எனக்கு எரிச்சலாய் வருகிறது!"

அவனது அடிகளிலிருந்து தப்பிப்பதற்காக, அவள் தனது இரண்டு வயதான மகனைப் பற்றியெடுத்து, முழங்காலிட்டிருந்த தன் உடம்புக்கு முன்னால் அவனை ஒரு கேடயம் மாதிரி நிறுத்திக் கொண்டாள். அந்தக் குழந்தை, பயந்து போயிருந்த அந்த அம்மணமான குழந்தை, அலறிக் கூச்சலிட்டது. அவள் கைக்குள் அடங்காமல் திமிறியது.

"போ வெளியே!" என்று கர்ஜித்தான் மிகயீல். அவள் துள்ளியெழுந்து, சமையல் கட்டுக்குள் ஓடி ரவிக்கையைத் தோள்மீது தூக்கிப் போட்டுக்கொண்டு குழந்தை யையும் ஒரு துணியில் சுற்றயெடுத்துக் கொண்டு, வாய்பேசாது முனங்காது, படுக்கப் போவதற்குமுன் போட்டிருந்த ஆடையுடனேயே தெருவுக்கு வந்தாள். அப்போது மே மாதம். அன்றிரவுகுளிர் மிகவும் விறைத்து நடுக்கியது. தெருப்புழுதி அவளது பாதங்களில் அப்பிக்கொண்டு குளிர்ந்து விறைத்தது. பெரு விரல்களில் ஒட்டிக்கொண்டது. குழந்தை அலறித் துடித்துக் கொண்டிருந்தது. அவள் குழந்தையைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு பயமடித்துப்போய் தெரு வழியே விறுவிறுவென நடந்தாள். போகும் போதே குழந்தையைச் செல்லமாகக் கொஞ்சி அதன் அழுகையை நிறுத்த முயன்றாள்.

"அடடா, கண்ணு! அடடா....."

பொழுது விடிய ஆரம்பித்ததும் அவள் நாணிக் கூசினாள்; தன்னை அந்த அரை நிர்வாணக் கோலத்தில் யாரேனும் தெருவில் பார்த்துவிடக் கூடாதே என அஞ்சினாள். எனவே அவள் ஊர்ப்புறத்திலுள்ள சதுப்புப் பிரதேசத்துக்குச் சென்று, அங்கிருந்த அஸ்பென் மரத்தடியில் உட்கார்ந்தாள்.



அங்கேயே வெகுநேரம் உட்கார்ந்து, அகன்று விரிந்த கண்களோடு இருளையே வெறித்துப் பார்த்தாள். தூங்கி வழிந்து கொண்டிருக்கும் குழந்தையை உறங்கப் பண்ணுவதற்காகவும், தனது இதய வேதனையைச் சாந்தப் படுத்துவதற்காகவும் அவள் ஒரு தாலாட்டுப் பாட்டை முணுமுணுத்தாள்.

"அடடா, கண்ணு! அடடா...."

அவள் அங்கிருந்தபோது, ஒரு கரிய பறவை அரவமின்றி அவள் பக்கமாகப் பறந்து சென்றது. அந்தப் பறவையின் சிறகு வீச்சு அவளை சோக அமைதியினின்றும் திடுக்கிட்டு எழுந்திருக்கச் செய்தது. குளிரால் நடுநடுங்கி கொண்டே வீட்டை நோக்கி, மீண்டும் அந்த வழக்கமான கொடுமையையும் உதைகளையும், ஏச்சுப் பேச்சுக்களையும் நோக்கித் திரும்பி நடந்தாள்....

கடைசி ஸ்வரஸ்தாயி ஆழ்ந்து முனகியது. உள்ளடங்கி விறைத்துப்போன ஒரு பெருமூச்சுடன் அந்தக் கீதம் மடிந்து மறைந்து போயிற்று.

சோபியா தன் சகோதரனிடம் திரும்பினாள்.

"உனக்கு இது பிடித்திருந்ததா? என்று அமைதியாகக் கேட்டாள்."

"ரொம்ப ரொம்ப! என்று ஏதோ தூக்கத்திலிருந்து விழிப்புற்றவன் மாதிரி சொன்னான் அவன்;" "மிகவும்...."

தனது நினைவின் எதிரொலி தாயின் உள்ளத்துக்குள்ளே நடுங்கிப் பாடியது. அதே சமயம் அவள் மனத்தின் ஏதோ ஒரு மூலையில் வேறொரு எண்ணமும் எழுந்தது.

"பாரேன்- அமைதியாகவும் நட்புரிமையோடும் ஒன்றாக வாழ்கிற ஜனங்களும் உலகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் சண்டை போடுவதில்லை; குடிப்பதில்லை. அந்த இருண்ட வாழ்விலே உள்ள மனிதர்களைப் போல் இவர்கள் ஒரு துண்டு ரொட்டிக்காக ஒருவருக்கொருவர் சண்டை பிடிப்பதில்லை......"

சோபியா ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்தாள். அவள், இடைவிடாது ஒரேயடியாய்ப் புகை பிடித்தாள்.

"இது காலஞ்சென்ற சோஸ்த்யாவுக்கு ரொம்பப் பிடித்த இசை" என்றாள் அவள். அவள் நெடுக புகைத்து மூச்சு வாங்கினாள். பிறகு மீண்டும் வாத்தியத்தின் கட்டைகளைத் தடவி, ஒரு 'சோக நாதத்தை எழுப்பினாள்; "அவரிடம் நான் எவ்வளவு ஆசையோடு இதை வாசித்துக் காட்டுவேன்! அவர் எவ்வளவு உணர்ச்சி வசத்தோடு, தம் இதயமே விம்மிப் புடைத்துப் புளகாங்கிதம் அடையும்படி இந்தச் சங்கீதத்தைக் கேட்பார்!"

"அவள் தன் கணவனைப்பற்றி நினைத்துக் கொள்கிறாள் போலிருக்கிறது" என்று முனகிக் கொண்டாள் தாய்; "அவள் புன்னகை கூட செய்கிறாளே......"

"அவர் என்னை எப்படி மகிழ்வித்தார்!" என்று மீண்டும் சோபியா மெதுவாகச் சொன்னாள். அவளது சிந்தனைகளோடு வாத்தியத்தின் மெல்லிய இசையையும் இணைத்து வெளியிட்டாள்; "எப்படி வாழவேண்டும் என்பதை அவர் எவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்திருந்தார்!"

"ஆமாம்" என்று தன் தாடியை வருடிக்கொண்டே சொன்னான் நிகலாய்; "அவன் ஒரு இனிய மனிதன்."

சோபியா அப்போது தான் பற்றவைத்த சிகரெட்டைத் தூர எறிந்துவிட்டு, தாயிடம் திரும்பினாள்.

"இந்தச் சத்தம் உங்களுக்குத் தொந்தரவாயில்லையே?" என்றாள்.

தாயால் தனது உணர்ச்சிக் குழப்பத்தை மறைக்க முடியவில்லை.

"என்னை ஒன்றும் கவனிக்காதீர்கள். எனக்கு ஒன்றுமே புரியாது. நான் பாட்டுக்கு இங்கே உட்கார்ந்து கேட்கிறேன்; ஏதேதோ நினைக்கிறேன்."

"ஆனால், நீங்களும் இதைப் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே என் விருப்பம்" என்றாள் சோபியா; "ஒரு பெண் அவசியம் சங்கீதத்தைப் புரிந்து கொள்ளவேண்டும். அதிலும் அவள் துக்கமயமாயிருக்கும் போது......."

அவள் ஸ்வரக் கட்டைகளை அழுத்தி வாசித்தாள்; உடனே அந்தப் பியானோ

# 52

# மாக்சீம் கார்க்கி

வாத்தியம், பயங்கரச் செய்தியைக் கேள்விப் பட்டவர்களின் பயபீதியின் ஓலத்தைப்போல் ஒலித்து விம்மியது. இந்தத் திகைப்பூட்டும் ஓலநாதம், அவர் இதயத்தையே உலுக்கி விட்டது. அதற்கு எதிரொலிசெய்வது போல் பயபீதி நிறைந்த இளங்குரல்கள் துள்ளிவந்து, ஓடி மறைந்தன. மீண்டும் ஒரு உரத்த உக்கிரமான கூச்சல் நாதம் எழுந்து, மற்ற குரல்களை யெல்லாம் மூழ்கடித்து ஒலித்தது. இதன் பின்னர், ஏதோ ஒரு பெருந்துயர ஒலி விம்மியது. எனினும் அந்தத் துயர ஒலி அனுதாபத்தைவிட ஆத்திரத்தைத்தான் அதிகம் கிளப்பியது. பிறகு ஒரு வலிமை மிக்க இனிய நாதம் ஒலித்துப் பெருகியது. அந்த ஒலியில் கவர்ச்சியும் பிடிப்பும் இருந்தன.

அவர்களிடம் இனிய வார்த்தைகள் புகலவேண்டும் என்ற ஆசை தாயின் உள்ளத்தில் நிரம்பித் ததும்பியது. அந்தச் சங்கீதத்தால் அவள் கிறுகிறுத்துப் போயிருந்தாள். அந்தச் சகோதர சகோதரி இருவருக்கும் தன்னால் உதவ முடியும் என்ற எண்ணம் தோன்றவே அவள் லேசாகப் புன்னகை செய்து கொண்டாள்.

அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள்- அவளால் என்னதான் செய்ய முடியும்? அவள் அமைதியாக எழுந்து சமையலறைக்குள்ளே சென்று தேநீர்ப் பாத்திரத்தைக் கொதிக்க வைத்தாள்.

ஆனால் இந்த ஒரு செய்கை மட்டும் அவளுக்கு அவர்கள் மீதிருந்த ஆர்வத்தைத் திருப்திப் படுத்திவிடவில்லை. அவள் தேநீரைக் கோப்பைகளில் ஊற்றும்போதே ஏதோ கசந்து போய் சிரித்துக்கொண்டே சொன்னாள். அவர்களை ஆசுவாசப் படுத்துவதற்கென்றும், அதேபோலத் தன் இதயத்துக்குச் சமாதானம் சொல்வது போலவும் அவ்வார்த்தைகளை அவள் சொன்னாள்.

"நாமெல்லாம்,அந்த இருண்ட வாழ்விலிருந்து வந்த நாமெல்லாம், எல்லாவற்றையும் உணரத்தான் செய்கிறோம். ஆனால், நமது உணர்ச்சிகளை நம்மால் வாய்விட்டுச் சொல்ல முடியவில்லை. நமது வெட்க உணர்ச்சி தோன்றுகிறது. ஏனெனில் நமக்குப் புரிந்த விஷயத்தையே நம்மால் சொல்ல முடியவில்லையே! அடிக்கடி- நமது வெட்க உணர்ச்சியால்- நாம் நமது சொந்த எண்ணங்களின் மீதே எரிந்து விழுகிறோம். வாழ்க்கை நம்மைச் சகல கோணங்களிலிருந்தும் தாக்குகிறது. நாமோ ஓய்ந்திருக்க எண்ணுகிறோம். நமது சிந்தனைகளோ நம்மை அப்படியிருக்க விடுவதில்லை."

நிகலாய் தன் மூக்குக் கண்ணாடியைத் துடைத்து விட்டுக் கொண்டே அவள் கூறியதைக் கேட்டான்; சோபியா தனது அகன்ற கண்களைத் திறந்தபடியே புகை பிடிக்கவும் மறந்து போய் இருந்தாள். சிகரெட்கூட அணைந்துவிடும் போலிருந்தது. அவள் இன்னும் அந்தப் பியானோ வாத்தியத்தின் முன்புதான் இருந்தாள்; தன் சகோதரனை நோக்கிச் சிறிது திரும்பியிருந்தாள். எனினும் தனது வலது கையால் பியானோவின் கட்டைகளை சமயங்களில் தட்டிக் கொடுத்துக் கொண்டாள். தாய் தனது உணர்ச்சியை உருவாக்கி வெளியிடும் மனங்கனிந்த வார்த்தைகளோடு, அந்த ஸ்வரநாதங்களும் ஒன்றிக் கலந்து மிருதுவாக ஒலித்தன.

"இப்போது என்னால் என்னைப் பற்றியும், பொதுவாக மக்களைப் பற்றியும் சொல்ல முடியும். ஏனெனில் இப்போது வாழ்க்கையைப் புரிந்து கொள்ளவும்; ஒப்பிட்டுப் பார்க்கவும் என்னால் முடிகிறது. இதற்குப் முன்பெல்லாம் ஒப்பு நோக்கிப் பார்ப்பதற்கே ஒரு விஷயமும் இருந்தது இல்லை. எல்லோருமே ஒரே மாதிரியாக வாழ்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றியது. இப்போதோ மற்ற ஜனங்கள் எப்படி வாழ்கிறார்கள் என்பதையும் நான் எப்படி வாழ்ந்தேன் என்பதையும் என்னால் அறிய முடிகிறது. இதுவும் ஒரு கஷ்டம்தான்!"

அவள் தன் குரலைத் தாழ்த்திக் கொண்டு மேலும் பேசினாள்:

"நான் சொல்லுவது தவறாக இருக்கலாம், சொல்லவே தேவையில்லாமல் இருக்கலாம். ஏனென்றால் உங்களுக்கே அதெல்லாம் நன்கு தெரியும்...."

அவளது குரலில் கண்ணீரின் அடையாளம் தென்பட்டது. எனினும் அவர்களைப் பார்த்தபோது அவள் கண்களில் ஒரு குதூகலம் பிறந்தது. அவள் சொன்னாள்:

"ஆனால் நான் என் இதயத்தை உங்களிடம் திறந்து காட்ட விரும்புகிறேன். உங்களது நலத்தில் நான் எவ்வளவு தூரம் அக்கறை கொண்டிருக்கிறேன் என்பதை உங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன்."

"நாங்கள் தான் கண்ணுரைப் பார்க்கிறோமே" என்று மெதுவாகச் சொன்னான் நிகலாய்.

என்றாலும், தனது ஆவலைத் தான் பூர்த்தி செய்து கொள்ள இயலாதது போலத் தோன்றியது அவளுக்கு. எனவே அவள் தனக்குப் புதியனவாகவும், அளவற்ற முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் தோன்றிய எதையெதையோ பற்றி மீண்டும் பேசத் தொடங்கினாள். பொறுமையும் கசப்புணர்ச்சியும் நிறைந்த தனது வாழ்வைப் பற்றி அவர்களிடம் சொல்லத் தொடங்கினாள். ஆனால் அந்தப் பேச்சில் உக்கிரம் இல்லை; ஏதோ ஒரு இரக்கமான கேலி பாவம் தான் தொனித்தது. தனது கடந்த கால வாழ்க்கையை உருவாக்கிய இருண்ட நாட்களைப் பற்றிய சிந்தனைகளைச் சொன்னாள். தனது கணவனிடம் தான் பெற்ற அடி உதைகளைப் பற்றிக் கூறினாள்.அந்த அடி உதைகளுக்குரிய காரண காரியமற்ற நிலைமையையும் அவற்றைத் தடுக்க முடியாதிருந்த தன் ஏலாத்தனத்தையும் எண்ணி அவளே வியந்து கொண்டாள்....

(தொடர்ந்து வரும்)

● (முரசு 126இல் கின்னியா சத்தார் எழுதிய மேரியின் கைக்குட்டை கதைக்குப் பதிலாக அமைகிறது இக்கதை.) ●

# 'என் கவிதைக்காரனுக்கு...!'

கின்னியா அமீரலி

ரோய்...

எனக்காகப் பிறந்தநாளைக்கூடப் பிந்திக் கொண்டாடியவனே!

சத்தார் அண்ணாவுக்கு முதலில் என் நன்றிகளைச் சொல்லிவிடு.

உன் மேரி-பிரியமான பிடிவாதக் காரி-இப்பொழுது.... புத்தளம்- பாலாவி அகதிமுகாமில் உனது அதே சோகங்களைச் சுமந்த படி... ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறாள்....

ரோய்.... 'நாம் வாழ்ந்தது ஈர்க்கில் கூடல்ல-இதயக் கூடு' என்று இரண்டு வார்த்தையானாலும் புதுக்கவிதை பேசும் 'ஊற்றடி வைரமுத்து' நீ! உனது ஞாபக முகச்சாயலில்... இங்கே-ஹாரிஸ் என்றொரு அண்ணன் இருக்கிறார். அவர் தந்த தினமுரசில்-

சத்தார் அண்ணா எழுதியிருந்த நம்ம கதை பார்த்தேன்.

அழுதேன். என் கைக்குட்டை சௌக்கியமா?

ரோய்.... நாவல்மர நிழலின் கீழமர்ந்து தண்ணியெடுக்க வரும் கன்னிகளைக் கிண்டலடிக்கும்.... காமினி... தேவராஜ்... சலீம்.... எல்லோரும் சௌக்கியமா...?

மூங்கில் காட்டுக்குள் நீ வாசித்த புல்லாங்குழல் இன்று... பாவம்... அகதி முகாமில் அடுப்பூதிக் கொண்டிருக்கிறது....!

'மேரி, நீ எந்த முகாமிலிருக்கிறாய்' என்ற ஏக்கம் என்னை வாட்டுகிறது.



விழிகள்... நம் காதலை இரை மீட்டுகிறது....

ரோய்.... உனக்கு ஞாபகமிருக்கிறதா....

'றசூல் ஹாஜி'யின் சுரங்கல் வயலுக்குச் சூடடிக்கப் போனோமே.....

வயதுக்கு வந்த, வயல் தேவதைகளை வரம்பிலிருந்து-வரம்பு மீறி,

.....'நிழலில் அமர வேண்டிய அந்த நிலாக்களை-வெயிலில் வேக வைக்காதீர்கள்...!

அந்த நெற்றிகள் வியர்வைக்குத் தாங்குமா....?

அந்தப் பாதங்கள் சேற்றுக்குப் பொருந்துமா?'

என்றெல்லாம் வர்ணிப்பாயே!

இன்று-

'என் அடுத்த மத நேசகியே! என் இதயத்தின் வாசகியே! வாழலாம் வா சகியே!' என்ற, உன் கன்னிமடலை கௌரவித்துக் காதலியாகிக் கொண்டவள்....

திசைமாறி வீசிய சூறாவளியால்.... இடம்மாறி.... விலாசமிழந்து... விதிவரைந்த பாதை வழியே.... அனாதையாய்.... அகதியாய்.... அலைகிறாள்....

ரோய்... இன்று உன் மேரி, இரண்டு வாரத்திற்குள் கணவனை இழந்து தவிக்கும் இள விதவை என்பதை நீ அறிவாயா....

ரோய்.... இப்பொழுது-நாம் எல்லோரும்... சாக வாழ்கிறோம்.

காமக் கழுகுகளிடமிருந்து உன் மேரியைக் காப்பாற்றக்-கணவனாகிக் காவலிருந்த 'டேவிட்'-விசாரணைக்குப் போனவன்தான்.

ரோய்....

சமாதானம் வருமா? 'காவல்' இல்லாத நிலையமும் ஆயுதம் ஏந்தாத இராணுவமும்.... எப்பொழுது வரும்?

ரோய்.... நீ கவிஞன். மனிதனை விட ஒரு படி-

அதிகமாக அறிவு பூர்வமாகச் சிந்திக்கத் தெரிந்தவன் மதிலோர மைனாக்களையும், வயல் தேவதைகளையும் வர்ணித்தது போதும்.

நடப்பதுயாவும் விதிப்படி என்றால் வேதனை எப்படித் தீரும்?

உடைப்பதை உடைத்து வளர்ப்பதை வளர்த்தால் உலகம் உருப்படியாகும் என்பாயே! ரோய்... முதுமையை முந்திக் கொண்டு மரணம் வந்துவிடும்.

நீ, சத்தார்.... எல்லோரும் இன்னும் நீங்கள் உங்கள் கவிதைகளை எழுதவே ஆரம்பிக்க வில்லையா?

வைரமுத்துப் பிரியனே! கொஞ்சம் சிந்தித்துப் பார்!

'வைரமுத்து'வின் இதே வரிகள்தான் உனக்கும் பொருத்தம்:

**"இளமை உன் தோள்களில் இருக்கும் போதே!**

**எது நிசம் என்பதை எட்டிவிடு!**
**எழுதிய படிதான் நடக்கும் எல்லாம்-**
**விதி வசம் என்பதை விட்டுவிடு!"**

பாலாவிப்பக்கம் வந்தால் முகாமுக்கு வா!

உன் 'மேரி.'



படிப்பகம்

www.padippakam.com

# தீர்ப்புக்கள் திருத்தப்படலாம்

**ஷர்மிளா இஸ்மாயில் - கண்டி**



அப்பாவுக்கு "ஹார்ட் அட்டாக்" திடீரென வந்தது. ரகு எதிர்பார்க்கவில்லை. அவசரமாக ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக வாகன வசதி இல்லை. யுத்தம் தன் கைவரிசையை காட்ட ஆரம்பித்திருந்தது. இதுவரை இவர்கள் வாழும் பகுதியில் பதற்றமில்லை. இப்போதுதான் "செக்கிங் என்றும் தேடுதல் என்றும் மெதுமெதுவாக பதற்ற சூழல் உருவாக்கப் பட்டுக்கொண்டிருந்தது.

சாமான்கள் விலையேறின. நாளாந்த வாழ்க்கையே கொஞ்சங்கொஞ்சமாய் கடினமாகி வந்தது. பொருட்கள் தட்டுப்பாடாயின. முகங்கள் எல்லாம் ஒரு திடுக்கத்தை சுமந்து கொண்டன. மனங்களில் ஒரு நடுக்கம். நாளையைப் பற்றிய ஏக்கம்.

இரவு கரிய இருள். வாகனம் தேடி ரகு அலைந்தான். எதுவுமே தட்டுப் படவில்லை. அப்பா தவித்தார். வேதனையில் துடிதுடித்தார். இறுதியில் இறைவனிடம் போய்ச் சேர்ந்து விட்டார். ரகு அழுதான். கண்ணீர் வரண்டு போகுமட்டும் அழுதான். ஆண்கள் அழுவதில்லை என்பதெல்லாம் பொய்யாக்கி அழுது தீர்த்தான். எதற்காக அழுதான் என்பதை ஆண்டவன் மட்டுமே அறிவான். சித்தியும் அழுதாள். இரண்டு நாள் மூக்கை சிந்தி சிந்தி துடைத்தவள் மூன்றாவது நாள் சகஜமானாள். வழமைபோல் ரகுவைத் திட்டினாள். வசைபாடினாள். "அப்பாவும் போய்ச் சேர்ந்துட்டார். நீ மட்டும் தண்டச் சோறு பாக்கியாருக்கே!" எனப் புலம்பினாள்.

ரகு மௌனமாயிருந்தான். ஐந்தாறு வயதில் அம்மா-அழகான, அன்பான அம்மா-இறைவனடி போய் விட்ட சோகம் சொல்வதா? அதன் பிறகு அப்பா இரண்டாந் தாரம் கொண்ட அவலம் சொல்வதா? சித்தி என்ற வழமையான வரம்புக்குள் இருந்தாள்; கொடுமை செய்தாள்; வதைத்தாள்; வாட்டினாள்;

அதற்கேற்றாற் போல் ரகுவுக்கு படிப்பு ஏற வில்லை. வீட்டுச் சூழ்நிலை அவன் மனநிலையை வெகுவாகப் பாதித்தது. சமூகத்துடன் ஒத்துப் போகவில்லை. ஒதுங்கினான். தனக்குள்ளாக ஒரு வட்டம் போட்டு அதற்குள் வாழ்ந்தான்.

ஓரிரண்டு பேர் நண்பர்கள் என்றிருந்தார்கள். கொஞ்சம் பேசுவதோடு சரி. மற்றைய இள வட்டங்களைப்போல் குறும்பு விளையாட்டென என்றும் சிரித்ததில்லை ரகு. எப்போதுமே ஒரு மோன நிலை. துறவி போலிருந்தான். அப்பாவின் மறைவுக்கு அழுதவன் பின் அழவில்லை. வழமை போல் திட்டுக்களைச் சுமந்து மௌனங் காத்தான். சித்தியும் தளரவில்லை. ஏசி ஏசியே நாவைத் துருப்பிடிக்காது காத்தான்.

திடீரென ஒரு நாள் சித்தி இன்னும் கடுமையானாள். "அப்பா இந்த வீட்டை என் பெயருக்கு எழுதி வெச்சிருக்கார். இனிமே இது என்னோட வீடு. நானும் என் பிள்ளைகளும் தான் வாழப் போறம். போ என்று நான் சொல்ல முன்னால நீயே உணர்ந்து கிட்டா நல்லது." விஷம் தடவிய வார்த்தைகள் தணலாய்ச் சுட்டன.

ரகு யோசித்தான். ராமனை காட்டுக் கனுப்பிய தசரதன் நினைவுக்கு வந்தான்.

"அப்பா இப்படி செய்துட்டீங்களே....." மனதுக்குள் வேதனை அலைகள். இருக்கும் போதே இரக்கத்தை வெளியே காட்டாத அப்பா; இறந்தும் நிம்மதியாக வாழ விடவில்லையே; மனதுக்குள் முதன் முறையாக கோபம் கிளர்ந்தெழுந்தது.

கிளம்பி விட்டான் ரகு. இந்தப் பரந்த உலகில் இருக்க ஓர் இடமா கிடையாது? ஞாபகமாக அடையாள அட்டையை எடுத்துக் கொண்டான். கொழும்பில் ஒரு கடையில் சிப்பந்தியாகச் சேர்ந்து கொண்டவன் வாடகைக்கு சிறிய அறையை எடுத்துக் கொண்டான். அவனுடன் கூட்டு சேர அவனைப் போலவே அனாதையான இன்னுமொருவன். அறையைப் பங்கிட்டுக் கொண்டனர்-வாடகையையும் தான்.

வாழ்க்கை என்னவோ வசப்படாமல் ஓடிக் கொண்டிருந்தது. ரகு தனித்து வாழப் பழகிக் கொண்டான்.

ஒரு நாள் மாலை-வேலை முடிந்து ரகு வீதி வழியே வந்து கொண்டிருந்தான். பிரமாண்டமான ஆடம்பர கடைத்தொகுதியொன்றின் கண்ணாடி வழியாக பல தொலைக்காட்சிகள். இலவசமாக ஒளிபரப்பாகிக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளை கும்பலாய் நின்று ரசித்தவர்களுள் ரகுவும் சேர்ந்து கொண்டான்.

செய்தியறிக்கை ஒளிபரப்பாயிற்று. ரகு வெகு உன்னிப்பாய்க் கவனித்தான். இராணுவ நடவடிக்கைகளுக்காக வேண்டி இராணுவம் அப்பகுதிகளில் வாழும் மக்களை பாதுகாப்பான வேறு இடம் நோக்கிச் செல்லுமாறு வேண்டியுள்ளது என்ற செய்தியோடு கூறப்பட்ட ஊர்களின் பெயர்களைக் கேட்டவன் ஒரு கணம் சிலையானான்.

ஆமாம், அவனது சித்தியின் குடும்பமும் அவனது பழைய வசிப்பிடமும் மக்களும் அதில் அடங்கியிருந்தனர். 'என்வீடு, என் வீடு என அலைந்தாளே சித்தி! இப்போது என்ன செய்வாள்? வீட்டை, பொருட்களை எல்லாம் விட்டு விட்டு போக வேண்டிய நிலை. திரும்பி வரும்போது வீடு இருக்குமா? பொருளிருக்குமா? யார் கண்டது?' ரகு தொடர்ந்து நடந்தான்.

# ஒரு வித்தியாசமான விளம்பரம்

**ரூபராணி**

பாலிப்போடியார் பத்திரிகை ஒன்றை இறுகப்பிடித்தவராய் வயல் வெளியில் இருந்து ஓட்டமும் நடையுமாய் வீட்டை நோக்கி வந்தார். காலில் ஒட்டியிருந்த மண்ணை வாசல்படியில் தட்டித் தேய்த்தவர் சால்வையைக் கொடியில் போட்டுவிட்டுச் சாய்மனையில் சாய்ந்தார். "கனகு, கனகு இஞ்ச கொஞ்சம் வாடிபுள்ள" என்று குசினியை நோக்கிக் குரல் கொடுத்தார் பாலிப்போடி.

"கொஞ்சம் பொறுகா, அதுக்குள்ள அவிசரமா....? ஆணம் அடுப்பில" என்று காரமாகப் பதில் சொன்னாள் கனகு. அவளுடைய வாய், விரால் மீன் ஆணத்துக்கு உப்புப்புளி பார்த்தது. "ஆணங்கெடக்குது, எறக்கி வச்சிப்போட்டு வாவன்சத்த." போடியாரின் குரல் மீண்டும் உச்சஸ்தாயியை எட்டியது. என்னவோ ஏதோ என்று பதறிய கனகு ஆணச் சட்டியை இறக்கிப் போட்டுப் போடியாருக்கு அருகில் போய் நின்றாள்.

பாலிப்போடியின் மனதில் இருந்த சந்தோஷம் முகமெல்லாம் பரவிக்கிடந்தது. கனகு ஒன்றும் புரியாதவளாய் "குடிமுழுகிப் போற மாதிரிக்கத்தினியள், என்ன வெசயம் எண்டு சொல்லுங்களன்" என்று வெற்றிலை வட்டாவை அவர் பக்கம் நகர்த்தினாள். பாதிவிரித்தபடி கிடந்த கற்பன்பாயில் கனகு வசதியாகக் காலை நீட்டி. உட்கார்ந்து கொண்டாள்.

குரலைச் செருமிச் சரிப்படுத்திய போடியார், "இஞ்சபாரண்டிபுள்ள..... இண்டைய பேப்பரில ஒரு வெளம்பரங் கெடக்குது. இப்பிடி ஒரு வெளம்பரத்த எண்ட சென்மத்துக்கும் காணல்ல" என்றார் பூரிப்போடு. "அப்ப பின்ன அதக் கொஞ்சம் வெளப்பமா படியிங்களன் பாப்பம்" என்றாள் கனகு ஆவலை அடக்கி முடியாமல்.

<u>மணமகன் தேவை</u>

**உத்தியோகம் பார்க்கும் 30 வயது நிரம்பிய சிவந்த நிறமுள்ள அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. வீடு, வீட்டுக்குத் தேவையான பொருட்கள், இலட்ச ரூபாய், டொனேஷன் சீதனமாக எதிர் பார்க்கப்படும். கொழும்பில் வீடிருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். முதற் கடிதத்திலேயே முழு விபரங்களும் தரப்பட வேண்டும்.**



போடியார் உஷாராக வாசித்து முடித்தார். "எண்ட கதிரவேலப்பா. இப்புடி ஒரு காலமும் நான் கேள்விப்பட்டதில்ல. காலம் கலியுகம்." கனகு வாயைப் பிளந்தாள். "காலம் கலியுகமில்ல. காலம் மாறுதெண்டு சொல்லு" என்றார் பாலிப்போடி.

"உங்களுக்கு விசர். அச்சுப்புழையோ, அல்லாட்டி உங்கட கண்ணாடிக் கோளாறோ, பொம்பளையிட்டத்தான் மாப்பிள சீதனம் கேக்கிற வழக்கம். இதில பொம்பளை மாப்பிளையிட்ட கேக்கிறதெண்டாக் கலியுகம் இல்லாம வேறென்ன?" விளம்பரத்தைச் சீரணிக்க முடியாமல் கனகு பொரிந்து தள்ளினாள்.

"பொம்பள கேட்டா என்ன தப்பு? ஆனைக்கு ஒரு காலமெண்டா பூனைக்கும் ஒரு காலம் வராதா? நமக்குந்தான் அடுக்கடுக்காய் ஆறு பொட்டைகள். வாயக்கட்டி வகுத்தக் கட்டிப் படிக்க வச்சம். வேலயும் பாக்குதுகள். கலியாணங்கால் எண்டு ஏதும் இருக்கா? இப்பத்தான் எனக்குத் தைரியம் வந்திருக்கு. கந்தப்போடியிர மகனிட்டச் சொல்லி நானும் ஒரு வெளம்பரம் போடப் போறன்." உறுதியாகச் சொல்லி முடித்தார் பாலிப்போடியார். கனகுவால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

# தேடர்



**கௌரிபாலன்**

பூமிக்கும் கதிரவனுக்கும் உறவு ஆரம்பம். ஏனோ அந்நியப்பட்டு நிற்கும் விடிவானத்தின் முகத்தில் நாணச் சிவப்பு, அர்த்தமற்றுக் கிடக்கும் ஆயிரம் செயல்களில் இதுவும் ஒன்றென்று சமாதானம் கூறி நிற்க, ஆண்டுகள் கனவுகளுடன் கடந்து செல்ல கால ஓட்டத்தை விட்டு சில ஆண்டுகள் முன்னே-1983களில் திருமலையில்;

<u>கிழவன்</u>

"நல்லதைச் செய்" என்று யார் சொன்னதோ, எவன் ஒருவன் செய்த நல்ல செயல் இதுவென்று யாரும் எண்ணிப்பார்க்காத "நல்லதைச் செய்" என்ற வாசகம் தாங்கி நின்ற பஸ்தரிப்பு எங்கள் குடித்தனமாகிப் போனது சில ஆண்டுகளாய்? பள்ளி மாணவன் தொட்டு கன்னி இளம் சிட்டுகள் என்று பல்வேறு தேவைகளுக்காக, பல தரப்பட்ட முகங்கள், போக்குவரத்துக்கும் எமக்கும் சம்பந்தமில்லையென்று அந்நியப்பட்டு நின்ற பஸ்களுக்காய் காத்துக்கிடக்கும் அவர்களுக்கு பகலில் உறவாயும், உறக்கம் வந்து இரவை ஞாபகப் படுத்தும்போது எங்களுக்கு உறவாயும் போனது இந்த 'பஸ்தரிப்பு.' அட, எங்களுக்கு என்று சொல்லுகிறேனே, மற்றது யார் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன்.

தனிராச்சியம் என்றிருந்த என் வாழ்க்கைக் குடித்தனத்தில் உறவென்று வந்தான் அவன். அரைக்காற்சட்டை கழண்டு விழாதிருக்க இடுப்பில் கயிறு இறுக்கமாய். மேலாடை காணாத அவன் தேகம் 'சோமாலியாவை' ஞாபகப்படுத்திற்று. தோளில் தொங்கிய உர பேக் சகிதமாக என் குடித்தனத்தில் ஆஜராகினான் அவன். ஆரம்பத்தில் அவனைக் கண்டதும் ஆத்திரம்தான் வந்தது, சுதந்திரமான என் வாழ்க்கைக் குடித்தனத்தைக் குலைக்கிறான் என்று, எனக்குச் சொந்தமில்லாத இடத்தில் கூட உரிமைபாராட்டி விரட்டி அடித்தேன் அவனை. ஆரம்பத்தில் வெளித் தாழ்வாரத்தைத் தனதாக்கிக்கொண்ட அவன், சில தினங்களிலேயே பீடி என்றும், இராச் சாப்பாடு என்றும் பேப்பர் வியாபாரத்தில் வாங்கித் தந்து எனது இடத்தில் ஆக்கிரமித்துக் கொண்டான். நாட்கள் செல்லச் செல்ல அவனை எனக்குப் பிடித்துப்போயிற்று. உறவும் பலமாயிற்று.

<u>அவன்</u>

இறப்பில் சொருகிய கவ்வாத்துக்கத்தி என்னவாயிற்று என்ற சிந்தனையே திருமலையில் கால் வைக்கும்போது, என் எண்ணத்தைத் தாக்கிற்று. பசுமையான கண்டி நகரில் கவ்வாத்து வெட்டி காலம் தள்ளியது போதுமென்று, திருமலைக்கு வந்து சேர்ந்தேன். கடையில் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை தளரவே வீடுகளில் பேப்பர் வாங்கி கடையில் விற்று, அதில் வந்த வருமானம் வயிற்றை நிரப்பிற்று. உணவு கிடைத்தது. உறக்கம் குடித்தனம் தேடிற்று. உறங்க இடம்தேடி அலைந்தபோது கண்ணில் பட்டது அந்த பஸ்தரிப்பு. எனக்கு முன்னமே கிழவனுக்கு உரிமையாகிப்போய் இருந்தது அந்த பஸ்தரிப்பு. கிழவன் வெறுத்தாலும் பின்னர் என்னையும் உறவாக்கிக் கொண்டான். கிழவன் விபரமான ஆள் என்று பழகிய சில தினங்களிலேயே எனக்குப் புரிந்தது. "பேப்பர் கிலோ இரண்டு ரூபாய்க்கு வாங்கி மூன்று ரூபாய்க்கு வித்தால் இலாபம் ஒரு ரூபாய் தம்பி, அதை விட சும்மா கிடக்கிற இரும்பையும் அங்கங்க வீடுகளில வாங்கிற-ஒரு ரூபா இரும்புமா-ஒரு கிலோ இரண்டம்பதுக்கு வித்தா இலாபம் அதிகம் தம்பி" என்று விபரம் படிப்பித்தான் கிழவன். பேப்பர் வியாபாரத்துடன் இரும்பு வியாபாரமும் சேர்ந்துகொண்டது. கிழவனுக்கு பீடியும் சாப்பாடும் அதிகமாயிற்று இரவில்.

சில தினங்களாக அமைதியைக் குலைக்கும் வெடி ஓசைகளும், கூச்சலும் சாந்தமான இரவுகளில் நிசப்தத்தை கலைக்கத் தொடங்கியிருந்தது. வழமையான எங்கள் இராப் பொழுதையும் மீறி, ஓர் இரவு எங்களுக்காய் படைக்கப்பட்டது போலும். மேலும் கீழுமாய் சீராக நெஞ்சுபோய்வர, கிழவன் குறட்டை விட்டுக் கொண்டிருந்தான். திடீரென வெடி ஓசைகள் தூரத்தே கேட்கத் தொடங்கின. கிழவன் தலையை உயர்த்திப் பார்த்துவிட்டு "தூரத்தே கேட்குது" என்று சொல்லி விட்டுக் குப்புறப்படுத்துவிட்டான். வெடி ஓசை வரவர கிட்டக் கேட்கத்தொடங்கியது. கிழவன் வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தான். பெரும் வெடி ஓசைஒன்று மிக அருகில் கேட்டது. கிழவன் "கடவுளே என்ர மகள்" என்று சொல்லியபடி எழுந்து ஓடத்தொடங்கினான். கிழவனுக்கு மகள் யார்? எங்கே இருக்கிறாள்? எனக்கு ஏன் சொல்லவில்லை. ஒன்றுமே புரியவில்லை! கிழவன் ஓடிய சில நிமிடங்களில் கூச்சலும் ஆவேசமுமாய் சில வாகனங்கள் கடந்து சென்றன. சென்ற வாகனங்கள் திடீரென்று நின்றன. சிலர் குதிக்கும் சத்தமும், ஆவேசமுமாய் கூச்சலிட்டுக்கொண்டு தாக்குவதும் கேட்டது. சத்தம் குறைந்தன. வாகனங்கள் புறப்பட்டன. வெடி ஓசைகள் தூரத்தே போய்க்கொண்டிருந்தது. என்னையும் அறியாமல் உறங்கிப் போனேன்.

விடியலைத் தேடும் பட்சிகளும், விலங்குகளும் இரையை இலக்கு வைக்கும் விண்ணைத் தொட்டு விந்தை செய்யும் இவ்வுலகில் இரைதேடி விடியலை நாடும் மனித விலங்குகளும் நானும் ஒருவனாய் உர பேக்குடன் இன்றைய பொழுதின் இரைக்காய் புறப்பட்டேன். நெருக்கியடிக்கும் சனத்தை இன்று பஸ்தரிப்பில் காண வில்லை. வீதியும் ஒரு சிலரைத் தவிர வெறுமையாய்க் கிடந்தது. ஏதோ உணர்வாய் திரும்பினேன். பஸ்தரிப்புக்குச் சற்றுத்தள்ளி சனம் கும்பலாய் எதையோ பார்த்துக் கொண்டிருந்தது. "கிழவன் செத்துக்கிடக்கு, பெட்டையிடம் போய்ச் சொல்" ஒருவர் இன்னொருவருக்கு உத்தரவிட்டார். கிழவன் என்றதும் மெல்லக் கூட்டத்தை நெருங்கினேன். 'அட, நம்ம கிழவன்தான் செத்துக்கிடந்தான்.' இரும்புக் கேடரால் தலையில் பலமாகத் தாக்கப் பட்டிருந்தான் கிழவன். அருகில் இரத்தம் தோய்ந்த இரும்புக்கேடர்.

"ஐயோ! அப்பு உனக்கா இந்தக்கதி?" என்று குளறி அடித்துக்கொண்டு வந்த பெண்ணை இருவர் தாங்கலாக அழைத்து வந்தனர். "ஐயோ, அப்பு உன்னை எப்படி எல்லாம் வச்சுக் காப்பத்தணும் என்று கனவு கண்டனான். இப்படிப் போயிற்றியே அப்பு?." இவ்வளவு நாளும் இவள் எங்கே போனாள். எப்படித் திடீரென்று முளைத்தாள், எனக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன பொட்ட இந்தக் கத்து கத்துது?." "ஒண்டுமில்லை கிழவன் சும்மா செத்திருந்தா, ஏன் நாயெண்டும் கேட்டிருக்கமாட்டினம். இப்படிச் செத்ததால அரசாங்கம் ஏதும் குடுப்பினமல்லே. அதுதான். சோழியன் குடும்பி சும்மா ஆடாதுகாணும்" இருவர் தங்களுக்குள் குசு குசுத்தனர். அரசாங்கம் ஏதோ குடுக்குமாம்; அதனால் கிழவனை வீட்டுக்குக் கொண்டுபோகப் போகினமாம்.

வெய்யில் கொழுத்தத் தொடங்கியது. ஒவ்வொருவராய் நிழல் பார்த்து நகர்ந்தார்கள். இருவர் அந்தப் பெண்ணை கைத் தாங்கலாய் நிழலுக்கு அழைத்துப் போனார்கள். கிழவன் தனித்து விடப்பட்டான். பொலிஸ் வந்து 'கேஸ்' பதிய வேணுமாம். அது மட்டும் கிழவன் ஒரு அடிகூட நகரக் கூடாதாம். வெய்யிலில் கிடந்த கிழவனின் முகம் என்னை என்னவோ செய்தது. மெல்ல உரபேக்கால் கிழவனின் முகத்தை மூடினேன். திரும்பிப் பார்த்தேன். யாரும் என்னைக் காணவில்லை. குனிந்து கேடரைத் தூக்கிப் பார்த்தேன். குறைந்தது மூன்று கிலோவாவது தேறும். கேடரைத்தோளில் வைத்தேன். மெல்ல இரும்புக்கடை நோக்கி நடக்கத்தொடங்கினேன்.

# நினைவுகள் உதிர்வதில்லை

**காரைத்தீவு எஸ்.நாகராஜா**

வயல்வெளிகள், கரும்புச் சோலைகள் போன்றவற்றைக் கடந்து அந்த பஸ் நகர்ந்துகொண்டிருந்தது. பல வருடங்களுக்குப் பிறகு அன்றுதான் அந்தப் பாதையால் பிரயாணம் செய்கிறேன். முன்னர் இப்பாதையால் பயணம் செய்யும்போது பஸ் கண்ணாடிக்கு வெளியே பார்த்தால் தூரத்துப் பார்வைக்கு நாங்கள் குடியிருந்த குடிசையும், சுற்றிவர நின்ற தென்னை மரங்களும் குளத்தோரமாகத் தெரியும்.

அந்த ஞாபகத்தில் தலையை வெளியே நீட்டிப் பார்க்கிறேன். அவ்விடத்திற்குப் போகவில்லை. நாங்கள் ஓடிவிளையாடித் தவழ்ந்த அந்த இடம், தோணி வலித்து மீன்பிடித்து விளையாடிய அந்தக் குளம், சாப்பிட்டுவிட்டு இரவில் ஆனந்தமாகக் கதைத்துக்கொண்டிருக்கும் அந்தக் கல்லுமலை, மதிய வேளையில் நிழல் பரப்பி சூடு தணித்த அந்த வேப்பமரம் இவை எல்லாவற்றையும் இனி எப்போது காணப்போகிறேன்? இது மட்டுமா? வெற்றி அண்ணர் பசுமாடுகளும், இசதீன் காக்கா எருமை மாடுகளும் கட்டிய நேரம் பாலும், தயிரும் கொண்டு தந்ததை நினைக்கும் போது வாய் ஊறுகிறது. ஒரு நாள் அப்பா வர நேரம் போனதால் பேமசிறி அய்யா ஓடிவந்து சாப்பாட்டுப் பார்சல் வாங்கி வந்து தந்ததை நினைக்கும் போது அவர் இப்போது எப்படி இருப்பார்? என்ன செய்துகொண்டிருப்பார்? என்ற நினைவுகள் என்னில் படர தலையை கண்ணாடிப்பக்கம் வைத்தபடி ஒவ்வொன்றாக இரசித்துக் கொண்டு செல்கிறேன்.

நானும், குணமும் வேலை செய்த காலத்தில் இருந்து சாப்பிடும் தேக்கு மரச் சந்தியைக் கடந்து பஸ் நகர்ந்துகொண்டிருந்தது. சின்ன மரமாக நின்ற அந்தத் தேக்கு பெருத்துக் கொழுத்துப் போயிருந்தது. நானும் குணமும் புகுந்து விளையாடிய கரும்புச் சோலைகள், நீந்தி விளையாடிய வாய்க்கால்கள், இளநீர் பறித்த இளங்கன்று மரங்கள் எல்லாமே ஒன்றன்பின் ஒன்றாக அந்தப் பயணச் சுவடுகளாய் படர்கிறது.

அப்பொழுதிருந்த சந்தோசம், அப்பொழுதிருந்த சுதந்திரம், அப்பொழுதிருந்த நண்பர்கள் எல்லாமே கேள்விக் குறியாய் என்னில் முட்டி மோத பஸ்சை விட்டிறங்கி அடையாள அட்டையுடன் சோதனைக்காக முன்னால் நடக்கிறேன்.



எனது பயணத்தின் அன்றைய முடிவு இன்னும் சில மைல்களுக்குள். ஒவ்வொருவராக சோதனை முகாமை விட்டு நீங்கி பஸ் அருகே வந்துகொண்டிருந்தனர். பக்கத்திலுள்ள கடையொன்றில் "பசுமை நிறைந்த நினைவுகளே என்ற பாடல்" ஒலித்துக் கொண்டிருந்தது. பாடலை முழுமையாக இரசிப்பதற்குள் பஸ் நகர்ந்தது.

எல்லாமே பசுமை நினைவுகளாய் இதயத்தின் எங்கோ ஓர் மூலையில் ஒதுங்கிக் கொள்ள பஸ்சை விட்டு இறங்கி எனது உறைவிடமான அகதிமுகாமை நோக்கி நடக்கிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

# பணிவான படை

தருவது ரசிகன்

## இலக்கிய நயம்



"மனக்கணக்கு போட்டு முடித்து, இப்போது மணல் கணக்குப் போடுகிறாயோ?"

விரலால் மணலில் கோடு கிழித்துக் கொண்டிருந்த மோகினி நிமிர்ந்து சுட்டெரிப்பது போலப் பார்த்தாள் தோழியை. தோழியோ மசிவாள்.

"உலகமே இப்படித்தான்" என்றாள்.

"எப்படித்தான்?"

"உண்மையைச் சொன்னால் உதைக்க வருகிறது. நீதியைச் சொன்னால் நெற்றிக் கண்ணைத் திறந்து மிரட்டுகிறது."

மோகினி நகைத்தாள். எதிரே கரையை முத்தமிட்ட அலையின் வேகத்தை ரசித்தாள்.

"கரை ஏன் காத்திருக்கிறது தெரியுமா?"

தோழிதான் கேட்டாள்.

"அலை வந்து தழுவத்தான்!"

பதில் சொன்னாள் மோகினி.

"கடல் எதற்குக் காத்திருக்கிறது தெரியுமா?"

"நதிவந்து கலக்கத்தான்!"

நங்கை நீ காத்திருப்பது எதற்கென்று தெரியுமா?"

"அடி போடி விஷமக்காரி!"

மோகினி வெட்கப்பட்டாள்.

"நான் ஒன்றும் ஏங்கிக் கொண்டிருக்கவில்லை. வரட்டும் அவர் இந்த முறை, என்ன நடக்கிறது என்று பார்."

"சேச்சே... அப்படியெல்லாம் நான் பார்க்கமாட்டேன்."

"உனக்கு விவஸ்தையே இல்லையடி. நான் சொன்னது அவரோடு பிணங்கியிருக்கப் போவதையடி!"

"இப்படித்தான் சொல்லுவாய். உன்னவரைக் கண்டுவிட்டால் ஊஞ்சலாடுவாய். அவருக்கு ஊஞ்சலுமாகுவாய்."

"நடக்காது இந்த தடவை."

"மதுக்குடத்தை திறக்கும் கலை மன்னருக்கோ தெரியாது. படை நடத்தி பகைவர்களின் கோட்டைகளை பிடித்தவரால், பாவை உந்தன் மனக் கோட்டையை பிடிப்பதற்கோ முடியாது."

"வேல் எடுத்துப் போர் தொடுக்க விழுகின்ற கோட்டையல்ல என் மனஉறுதி. வாள் எடுத்துச் சுழற்றுகையில் தெறிக்கின்ற பகையல்ல என் நெஞ்சுறுதி."

மோகினி உறுதியுரைத்தாள்.

•••

அந்தப்புரத்தில் எரிந்து கொண்டிருந்த அகல்விளக்கு அணைக்கப்பட்டது.

மஞ்சத்தில் கிடந்த மோகினிமீது ஒரு வலிய கரம் விழுந்தது. அவளின் இடது கரத்தைப் பற்றி இழுத்தது.

நிலவு வீசிய ஒளியில் அந்தக் கரத்துக்கு உரியவனின் முகம் தெரிந்தது.

தலைப்பாகை அணிந்திருந்தான். தாடி வைத்திருந்தான். பிடித்த பிடியில் இருந்தே பயங்கரமான முரடன் என்று தெரிவித்துக் கொண்டிருந்தான்.

மோகினி விக்கித்துப் போனாள். நழுவிக் கிடந்த ஆடைகள் அவன் விழிகளுக்கு வசதியாகப் போய்விட்டன. மறு கரத்தால் ஆடைகளை சீர்படுத்திக் கொண்டாள் மோகினி.

எங்கிருந்து வந்ததோ தெரியவில்லை அந்தப் பலம். ஒரே உதறலில் தனது கரத்தை அவனிடம் இருந்து விடுவித்துக் கொண்டாள்.

"யாரடா நீ?" என்றாள். மஞ்சத்தில் இருந்து துள்ளியெழுந்து, துள்ளியெழும் போது எப்போதும் தலையணையடியில் மறைத்து வைத்திருக்கும் குறுவாளை இடது கரத்தில் ஏந்திக் கொண்டிருந்தாள்.

ஆபத்தான நேரத்திலும் அச்சமில்லாமல் அவள் செயல்பட்ட விதமும், விவேகமும் வந்தவன் விழிகளில் வியப்பை விதைத்ததில் ஆச்சரியமில்லை.



இருவருக்கும் இடையில் இப்போது ஐந்தடி தூரமே இருந்தது.

அவனது இடையில் ஒரு உறை தொங்கியது. உறைக்குள் வாள் உறங்கிக் கொண்டிருந்தது.

'வாளை ஏன் எடுக்காமல் இருக்கிறான்?' என்று ஒரு கணம் யோசித்தாள் மோகினி.

"அபயக்குரல் எழுப்புவாய் என்று நினைத்தேன். நீயோ அழிக்கும் வாள் உயர்த்தி நிற்கிறாய். நெஞ்சில் நிறையத்தான் இருக்கிறது; முறைக்காதே, உறுதியைச் சொன்னேன்!"

குறுவாள் எதிரிலும் பயமின்றி நகைத்தான். மோகினியின் முகத்தில் வியப்புக் குறி குடியேறியது.

"அந்தப்புரத்தில் அந்நியர் புகுந்தால் என்னாகும் தெரியுமோ?"

"என்னாகும், தேடிவந்த பெண் உதைத்தால் மேனி புண்ணாகும். தேடிவந்த பெண் அணைத்தால் மேனி பொன்னாகும்!"

"மன்னருக்குத் தெரிந்தால்?"

"மாசற்ற பெண்ணே! உன் இதழ் முத்தம் பெற்றுவிட்டால் போதும், அதன் பின்னர் மரண முத்தம் பெறுவதற்கும் சம்மதமே!"

"நாடுபிடிப்பதில் மட்டுமல்ல, நடிப்பதிலும் நம் மன்னவர் வல்லவர்."

"சம்பந்தமில்லாத பேச்சு. சம்மதத்தைச் சொல்லிவிடு, துடிக்கிறது என்மூச்சு."

"மூச்சு மட்டுமா துடிக்கிறது. சரியாக ஒட்டப்படாத தாடியும் அல்லவா துடிக்கிறது."

வந்தவன் நகைத்தான்.

"வா நீயே அகற்று!" என்றான். நெருங்கிப்போய் தலைப்பாகை அகற்றி, தாடி உரிக்க, மன்னவன் குலோத்துங்கனின் வேஷம் கலைந்தது.

"ஏன் இந்த நாடகம். உங்கள் குரல் மட்டும் அடையாளம் காட்டியிருக்காவிட்டால்..."

"குறுவாளை நெஞ்சில் செருகியிருப்பாய். காதலியின் வீரத்தை வியந்தபடி விரைந்திருப்பேன் சாவுருக்கு!"

மோகினி தன் விரல்களால் அவன் உதடுகளை மூடி பேச்சை நிறுத்தினாள்.

"விரல்களால் மூடினால் எப்படி; இதழ்களால் மூடு. வெற்றியோடு வந்திருக்கிறேன், கட்டிக்கொண்டு கொட்டித் தர வேண்டாமோ?" என்று சொன்னான்.

மோகினிக்கு தான் தோழிக்கு சொன்ன உறுதி நினைவில் வந்தது.

"அள்ளித்தரவும், கிள்ளித் தரவும் நாம் என்ன களஞ்சியமா வைத்திருக்கிறோம்? போவீர்கள், வருவீர்கள். வந்தவுடன் மஞ்சத்தில் தா என்பீர்கள்."

"குளிர் பேச்சால் மட்டுமல்ல, அனல் பேச்சாலும் ஆசை அதிகமாகிறதே தவிர குறையவில்லை. களத்தில் மோதும் ஒவ்வொரு தருணத்திலும் உன் முகம்தானே என் நினைவில் நிழலாடிக் கொண்டிருந்தது. ஆசை முகம் காணும் அவசரத்தில்தானே பகைவர் கதையை விரைந்து முடிக்கும் வேகம் வந்தது. தீராத காதல்தானே என் தீரத்திற்கு நீர் வார்த்தது. மாளாத ஆசைதானே என்னை மீளவும் கொண்டு வந்து சேர்த்தது. உன் இதழ் முத்தம் பட்ட நெஞ்சில் பகைவர் வேல் முத்தம் படக்கூடாது என்ற உறுதி தானே என்உயிர் காத்து நின்றது."

அவன் பேச்சில் அவள் உறுதி கலைந்தது. உள்ளம் கரைந்தது.

எடுத்துக் கொண்டான். இல்லையென்று சொல்லாமல் கொடுத்தாள்.

நாவிரண்டும் கலந்து மீள, உடலிரண்டும் ஒன்றேயாக, தடையெதற்கு என்று நினைத்து கரவாளால் உடை அரண்களை உடைத்துப் போட்டான்.



படைப்பின் அதிசயம், எந்தப் படை கொண்டும் வெல்ல முடியாத சுந்தரப் பிரதேசம், எந்த வெற்றியிலும் பெற்றுக் கொள்ள முடியாத உள்ளத்தில் வெல்லச் சுவை பாயும் அதிசயம். மன்னன் குலோத்துங்கன் வானத்தில் உயர்ந்தான். மன்னன் என்பதையும் மறந்து மதன களத்தில் மண்டியிட்டான்.

கரையே காணாத இன்ப வெள்ளத்தில் மூச்சுத் திணறியது. முத்து கிடைத்துக் கொண்டிருக்க மூச்சுத் திணறுவதும் ஒரு சுகமாகவே தொடர்ந்தது.

••

மறுநாள் காலையில் தோழி கேட்டாள்; "உன் வாக்குறுதி என்னாச்சு?" மோகினியால் வெட்கத்தை மறைக்க பத்துவிரல் போதவில்லை.

"படையெடுப்பு பலமாக்கும். பணிந்து விட்டாயோ பள்ளியறைக் களத்தில்?"

மோகினி அதற்கு பதில் சொன்னாள்;

"எந்தப் படை வந்தாலும் நான் எதிர்த்து நின்றிருப்பேனடி. ஆனால் பணிவான மொழி வீசி என் தடையையெல்லாம் தகர்த்து விட்டாரடி."

தோழி புன்னகைத்தாள்.

**"பெண்மையென்னும் அரணை உடைக்கும் படை காதலரின் பணிவான மொழி தானே. அது திருவள்ளுவரே சொன்னது தானே"** என்றாள் தோழி.

**"பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்**
**பெண்மை உடைக்கும் படை"**

குறள்:1258, அதிகாரம்:126

# சிந்தியா பதில்கள்

**★ வரவு செலவுத் திட்டம்-உங்கள் அபிப்பிராயம் என்ன?**

எஸ்.நூர்ஜகான், மருதானை.

*கடன் வாங்கிக் கல்யாணம். 'ஆயிரம் கடன் வாங்கியும் ஒரு 'பட்ஜெட்டை' சமர்ப்பித்து முடிக்கவேண்டும்' என்பது புது மொழி.*

**★ தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆயிரத்துக்கு மேற்பட்ட ஜோடிகளுக்கு கல்யாணம் நடத்திவைத்திருக்கிறாரே?**

வி.தனலட்சுமி,கலஹா,

*வளர்ப்பு மகன் திருமணத்திற்கு திருஷ்டி சுத்திப் போட்டிருக்கிறார். தமிழக பொது ஜனத்தின் காதில் பூ சுற்றலாமா என்று முயற்சியும் செய்து பார்த்திருக்கிறார். ஆயிரம் என்ன ஆயிரம், 50 ஆயிரம் ஜோடிகளுக்கு திருமணம் செய்தால் கூட அந்த ஒரு திருமணச்செலவுக்கு ஈடாகுமா?!*

**★ கவிஞர்கள் ஏன் பெண்களை மட்டும் வர்ணிக்கிறார்கள்?**

ஜே.ஜிப்ரி, அக்கரைப்பற்று-06

*பெரும்பாலான கவிஞர்கள் ஆண்களாக இருப்பதால்! இக்கரைக்கு அக்கரைதானே பச்சை!*

**★ டெண்டுல்கரின் கிரிக்கெட் திறமையைப் பற்றி சிறு விமர்சனம்?**

ஜெ.ரஞ்சனி, நிவித்திகலை.

*நிதானமாய்-அவசரமில்லாமல், தேவையான வேகத்தோடு ஆடும் போது நெத்தியடியான லாவகம். துவக்கமே பதட்டமாய் ஆரம்பித்து, பொருத்தமில்லாத நேரத்திலும் பந்தைக் கண்டு உணர்ச்சிவசப்பட்டு அவசரப்பட்டு சந்தர்ப்பத்தை தவறவிட்டு விடுகிறார். அனுபவம் நிதானத்தையும் பக்குவத்தையும் பழக்கப்படுத்திக் கொடுக்கும்.*

**★ பணம் என்றால் ஏன் சிலர் பேயாக அலைகிறார்கள். பணம் ஒரு சாத்தான் என்கிறேன் நான் நீங்கள்..?**

எஸ்.செல்லத்தம்பி. கண்டி.

*ஒரு டென்மார்க் பழமொழி சொல்வதைக் கேளுங்கள்; "செல்வத்தை அடிக்கடி குறை கூறுபவர்கள் இருக்கிறார்கள். அதை மறுப்பவர்கள் யாரும் இல்லை."*

**★ இந்திய-நியூஸிலாந்து கிரிக்கெட் போட்டிகள் எப்படி?**

எல்.என்.உதுமான், கல்முனை.

*இந்தியா சில வெற்றிகளைப் பெற்றாலும், ஆட்டம் பிரமாதமல்ல.மழை வேறு சூட்டைக் கெடுத்து சப்பென்றாக்கிவிட்டது.*

**★ மாவின் விலையும்,பாணின் விலையும் மறுபடி ஏறிவிட்டதே?**

சி.தயாளன், கொழும்பு-6

*கொடுத்த வாக்குறுதியும், குறைந்த விலையும் மாறாமல் இருக்கிற பழக்கம் நம் நாட்டிலில்லை.*

**★ எப்போதும் சுறுசுறுப்பாக இருக்க என்ன செய்யலாம்?**

பா.தேவமனோகரன், மட்டக்களப்பு.

*எதனையும் முயற்சியால் அடையும் நம்பிக்கையோடு செயற்பட்டுக் கொண்டிருக்க வேண்டும்.*

**★ இந்தி நடிகர் சஞ்சய்தத் இப்போது என்ன செய்துகொண்டிருக்கிறார்?**

பா.பிலோமினா,வவுனியா.

*காதலி ரியாபிள்ளையின் அன்பில் நெகிழ்ந்து கொண்டிருக்கிறார். நெகிழ்ந்து முடிய, கமராவுக்கு முன்னால் விரைவில் 'டூயட்' பாடுவார்.*

**★ ரஜினிகாந்த் என்ன முடிவில் இருக் கிறார்? அரசியலுக்கு வருவது உறுதிதானே?**

சதா.சிவானந்தன், திருக்கோணமலை.

*என்ன முடிவில் இருந்தாலும், ஜெயலலிதாவை எதிர்க்கும் முடிவில் மட்டும் உறுதியாக இருக்கிறார் என்று மட்டும் தெரிகிறது.*

**★ டியர் சிந்தியா, கவிதை பிறப்பது எத்தகைய சந்தர்ப்பங்களில்?**

செல்வி.இரத்தினசபாபதி வசந்தி,உடபாகை.

நெஞ்சு கனக்கும்போது-அதனை வெளியே எடுத்துப் போட எழுத்தாற்றல் என்னும் அகப்பையும் வாய்க்கும்போது!

**★ தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கும் போது தூக்கம் வருகிறதே. இது கண் பாதிப்பால் ஏற்படும் சமாச்சாரமா?**

எஸ்.சசிந்தா சதாசிவம், எல்கடுவ.

*தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான உண்மையான விமர்சனமாகவும் இருக்கலாம்.*

**★ பணத்தினால் எல்லாவற்றையும் சாதிக்க முடியுமா?**

ஜெ.யூட் ஹிலேரியன், மட்டக்களப்பு.

*பெரிய பெரிய கோடீஸ்வரர்கள் எல்லாம் மரணத்தை வெல்ல முடியவில்லையே. ஊர்வாயைக் கூட பணத்தால் மூடலாம். உயிர் வாயை மூடவே முடியாது. நேரம் வந்தால் தானாகத் திறந்து கொள்ளும்.*

**★ டியர் சிந்தியா! நம் நாட்டுக்கு பொருந்தக் கூடிய பழமொழி ஒன்று சொல்லுங்களேன்?**

எம். தெய்வீகரஞ்சனி, பதுளை.


*சாண் ஏற முழம் சறுக்கும்.*

**★ தமிழ் நாட்டில் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவான குரல் மறுபடி கேட்கிறதல்லவா?**

எல்.யோகராஜ், கொழும்பு-11

*தானாடாவிட்டாலும் தசையாடுகிறது. என்றாலும் அதிலும் கொஞ்சூண்டு அரசியலும் கலந்திருக்கிறது.*

## குறுக்கெழுத்துப் போட்டி இல—128



### இடமிருந்து வலம்

01. யாழ்ப்பாணத்திலிருந்து குடிபெயர்ந்த மக்களை இன்று வாட்டி வதைக்கும் பிணி.
03. மரங்களிலுள்ள இதில் பறவைகள் கூடு கட்டும்.
07. தேர்தல் காலங்களில் வாக்குச் சேகரிக்க அவசியமானது.
08. சுமங்கலிகளுக்குரிய அடையாளச் சின்னம்.
09. வியாபாரத்தில் லாப-நட்டத்தை காட்ட உதவுகிறது.
10. அடுப்படிதான் இதற்குத் தஞ்சம், இருப்பினும் திருமண மேடையிலும் பிரதான இடம் இதற்கு உண்டு.
12. இன்னும் சில காலங்களில் நாம் இதனுடைய எண்ணிக்கையைக் கணக்கிட்டுக் கலங்க வேண்டியதுதான்.

### மேலிருந்து கீழ்

01. வட புலத்தில் என்னதான் நடைபெறுகின்றது என்பது எப்படியும் விரைவில் இதுவாகும்.
02. பருவ மழை தொடங்கி விட்டது. ஆனால் இதனைப் பிடிக்க வடக்கில் எவருமில்லை.
04. செய்வதையெல்லாம் செய்துவிட்டு எதுவுமே நடைபெறாதது போல் சிலர் இருக்கும் முறை.
05. தானிய வகையில் ஒன்று.
06. இனியாவது சமாதானத்துக்கு இது கிடைக்குமா?
08. சிறுவர்களை வாட்டும் ஒரு நோய்.
11. நங்கையருக்கு அழகு தரும் ஓர் உடை.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 02.12.1995இற்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:**

குறுக்கெழுத்துப் போட்டி இல-128
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசாக வழங்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-126ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 க | ண் | கா | ணி | | 2 ந | ரை |
| ற் | | 3 த | ந் | 4 தி | ர | ம் |
| 5 நு | ஞா | ல் | | கை | ம் | |
| ர | | | 6 உ | ப் | பு | |
| ம் | 7 அ | | றை | பு | | 8 தி |
| | 9 ச | டா | யு | | 10 ஊ | ரு |
| 11 பொ | தி | க | ள் | | தா | டி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 126இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்:**

1. என். வரதராஜா, நீர்கொழும்பு.
2. எம். பாரூக், சின்னக்கிண்ணியா.
3. ஆர். சந்திரமதி, அலவத்துகொட.
4. செல்வி. எச். மர்ஜான், கொழும்பு 12
5. திருமதி. பி. மணிமேகலை, நாவலப்பிட்டி
6. ஏ. இர்பான், தியத்தலாவ.
7. ரி. சம்ருத்பானு, வெள்ளைமணல்.
8. வீ. குகன். தலவாக்கெல்லை.
9. செல்வி. ஜெ. வைஷ்ணவி, திருமலை.
10. ஆர். ரெஜினோல்ட், மட்டக்களப்பு.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.



படிப்பகம்

www.padippakam.com

# இராமாயணம் அங்கம் 8

## பகீரதப் பிரயத்தனமும் கங்கையின் பிரவாகமும்

எட்டுத் திக்குகளிலுமிருந்து அதிர்வொலி எழுந்தது. அண்டசராசரங்களும் ஆட்டம் காண்பது போன்ற உணர்வு ஏற்பட்டது. வானம் இருள் மயமானது. கதிரவனின் ஒளிக் கிரணங்கள் பூமியை எட்டாதவாறு பெருமழை-புயல் தோன்றுவதற்கான அறிகுறிபோல் உலகமே இருண்டு விட்ட நிலை உருவானது.

எவராலும் அழிக்க முடியாதவள் என்று கருதப்பட்ட தாடகை ஒழிக்கப்பட்டாள் என்ற தகவலறிந்த ஏனைய அரக்கர்கள் ஒன்று திரண்டனர். தாடகையை வதம் புரிந்த மாநிடனைப் பழிக்குப் பழி வாங்குவதெனத் தீர்மானித்தனர். தாடகையின் மகனான மாரீசன் தலைமையில் அரக்கர் சேனை புறப்பட்டது. முதலில் மாரீசனும் சுபாகுவும் வானில் தவழ்ந்து வந்து கொண்டிருந்தார்கள். அவர்களின் பின்னால் அரக்கர் படை-மாமிசத்துண்டுகளும் மிருகங்களின் இரத்தமும் கொண்ட பாத்திரங்களைச் சுமந்து கொண்டு வந்தது.

தூய்மையான யாக குண்டத்தினுள் எத்தகைய அசுத்தங்களும் வீழ்ந்துவிடாமல் பாதுகாத்துக் கொள்வதற்கேற்றவகையில், ஏற்கனவே இராமனால் வானில் ஏவப்பட்ட அஸ்திரம் ஒன்று சுழன்றுகொண்டிருந்தது. அது வேள்வி மேடையின் மேல் கூடாரம் அமைந்தது போல் காணப்பட்டது.

மாரீசன் வானில் தவழ்ந்து வருவதை இராமன் கண்டுகொண்டார். அவனுடன் சுபாகு வருவதையும் கண்டார். தம்பி இலக்குவனை சுபாகுவை வதைக்கும் வண்ணம் சைகையால் கூறிவிட்டு மாரீசன் மீது ஒரு அஸ்திரத்தைத் தொடுத்தார் இராமச்சந்திரன். அதிவேகமாகப் பாய்ந்து சென்ற இராமபாணம், மாரீசனை நூறு யோசனை தூரம் தூக்கிச் சென்று, குற்றுயிராகக் கடற்கரையில் எறிந்தது. இலக்குவன் வீசிய கணை சுபாகுவின் உடலைக் கீறிக் கிழித்து உயிரற்ற வெறும் சடலமாக வீசியெறிந்தது.

தமது தானைத் தலைவர்களுக்கு நேர்ந்த கதி கண்டு ஏனைய இராக்கதர்கள் அஞ்சி நடுங்கி வான்வெளியே பறந்தோடினர். இராம-இலக்குவன் மேற்கொண்டும் வீசிய பாணங்களால் பல அரக்கர்கள் மாண்டனர்.

அரக்கர்களின் தொல்லை நீங்கியதும் வேள்வி இடையூறுகள் எதுவுமின்றிச் சிறப்பாக நிறைவேறியது. விசுவாமித்திர மாமுனிவர் மட்டிலா மகிழ்வடைந்தார். ஏனைய முனிவர்களும் பெரு மகிழ்ச்சியடைந்தனர். அனைவரும் அரசகுமாரர்களின் அருஞ்செயல்களை மெச்சி ஆசிகளையும் வழங்கினர்.

விசுவாமித்திரர் இராமனையும் இலக்குவனையும் தன்மார்புடன் வாரி அணைத்து தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். மானசீகமாக தசரதமாமன்னருக்கும் தன் நன்றியினைத் தெரியப்படுத்தினார்.

பிராயச்சித்தச் சடங்குகளை முடித்த பின்னர் அதே ஆசிரமத்தில் அரசகுமாரர்கள் அன்றிரவு ஓய்வெடுத்துக்கொண்டனர். அடுத்த நாள் காலையில் உதயத்தின் முன்னே எழுந்த இராமனும் இலக்குவனும் நீராடி காலைக் கடன்களை முடித்தனர். மாமுனிவரிடம் வந்து பக்தி சிரத்தையுடன் அவர்தாழ் பணிந்து, "மாமுனி சிரேட்டரே! தாங்களிட்ட இருபணிகளையும் சிறப்பாக முடித்தமை எங்களுக்குப் பெருமை தருகிறது. எமது வீரத்தைக் காட்டுவதற்கேற்ற வழிகாட்டிய



தங்களுக்கு என்றும் கடமைப்பட்டுள்ளோம். தங்களுடைய அடுத்த கட்டளைக்காகக் காத்திருக்கிறோம்" என்றார்கள்.

### மிதிலை நோக்கி முனிவருடன் பயணம்

இதனைக்கேட்ட மாமுனிவர் இருவரையும் ஆசீர்வதித்து தம்மிடம் அழைத்துக்கொண்டார். "இராமா! இலக்குமணா! எனது கோரிக்கையினை எக்குறையுமின்றி நிறைவேற்றியமைக்காக வெறுமனே பாராட்டுடன் நின்று விட்டால் அது எனக்குப் பெருமை தராது. உங்களுக்கு தக்க சன்மானம் தர வேண்டியது என் கடமை. வடக்கே மிதிலை என்றோர் நாடு இருக்கிறது. அந்நாட்டை ஆண்டுகொண்டிருப்பவர் ஜனக மகாராஜன். உங்கள் தந்தை தசரதச் சக்கரவர்த்தியின் நண்பனும் கூட மாவீரன் மட்டுமல்ல சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்த ராஜரிஷியுமாவார். மிதிலையில் நடைபெறவிருக்கும் ஒரு வேள்வியில் கலந்து கொள்ளுமாறு எனக்கு செய்தி அனுப்பி யிருக்கிறார். எனது பல சீடர்களுடன் நானும் அங்கு செல்ல வேண்டியிருப்பதால் நீங்கள் இருவரும் என்னுடன் வர வேண்டும் என்று கோருகிறேன்" என்று முனிவர் கூறினார்.

"மாமுனிவரே! எம் தந்தையார் எம்மைத் தங்களுடன் அனுப்பிவைக்கும் போதே, தங்களுடைய நோக்கம் எதுவோ அதன்படி நடந்துகொள்ளவேண்டும் என்று கூறி அனுப்பினார். மிதிலைக்கு என்ன, தாங்கள் எங்கு வரும்படி ஆணையிடுகின்றீர்களோ, எதனைச் செய்ய வேண்டுமென்று கட்டளையிடுகின்றீர்களோ அவற்றுக்கு மறுப்புரை கூறாமல் அவ்வாறே நடந்துகொள்வதே தம்பி இலக்குவனுக்கும் எனக்குமுள்ள கடமையாகும்" என்று மிக அடக்கமாக இராமன் கூறினார்.

இராமனாகத் தன் முன்னே நிற்கும் சிறுவன் யார் என்பதை முனிவர் அறியாதவரல்ல. முக்காலமுமுணர்ந்த முனிபுங்கவர், இராமனுடைய எதிர்காலம் பற்றி அறியாதவரல்லவே! புன்முறுவலோடு இருவருக்கும் ஆசி வழங்கி பயணத்துக்கு ஆயத்தமாகும்படி கூறினார்.

சூரிய உதயத்துடன் வடதிசை நோக்கி பயணம் ஆரம்பமானது. மாட்டு வண்டிகளில்தான் அவர்கள் போனார்கள். அந்தி சாயும் வேளையில் சோணா நதிக்கரையினை அவர்கள் அடைந்தார்கள். அன்றிரவுப் பொழுதினை அங்கேயே கழித்துவிட்டு அடுத்த நாள் உதயத்துக்கு முன்னரே அனைவரும் எழுந்தனர். நதியினில் நீராடி காலைக் கடன்களை முடித்துக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர்.

நண்பகலில் கங்கை நதிக்கரையை அடைந்தார்கள். பாரதத்தின் புண்ணிய நதிகளுள் தலை சிறந்ததாகக் கருதப்படும் கங்கை வெண்ணுரையினைக் கக்கிக் கொண்டு பிரவகித்து ஓடிக்கொண்டிருந்தது. முனிசிரேட்டரும் இராம-இலக்குவனும் ஏனைய ரிஷிகளும் கங்கையில் நீராடினர். தத்தமது மூதாதையினரையும் நினைந்து தர்ப்பணம் என்னும் கிரியைகளைச் செய்து முடித்தனர். அவ்விடத்திலேயே ஆகாரம் சமைத்து உண்டு களைப்பாறினர். அப்போது மாமுனிவரை அணுகிய இராமனும் இலக்குவனும், "குருமகானே! ஒவ்வொரு நதிக்கும் ஒவ்வொரு வரலாறு இருக்கிறது. அதேபோல இம்மாநதியான கங்கைக்கும் ஒரு கதை இருக்கும். அக்கதையினையும் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். தயை கூர்ந்து அக்கதையினையும் எங்களுக்குக் கூறுங்கள்" என்றனர். கதைகேட்பதென்றால் யாருக்குத்தான் அவா இல்லை! உடன் பயணம் செய்யும் ஏனைய முனிவர்களும் விசுவாமித்திர மாமுனிவரை வந்து வளைத்துக்கொண்டனர்.

### கங்கையின் கதை

இமவான் என்னும் பர்வத மன்னனுக்கும் மனோரமைக்கும் இரு பெண் குழந்தைகள் பிறந்தார்கள். கங்காதேவி, உமாதேவி என்பது அவர்களின் பெயர்கள். மூத்தவளான கங்கையை தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மன்னன் இமாவன் தேவருலகுக்கே அனுப்பி விட்டான். உமாதேவியோ பரமசிவனை அடைய வேண்டும் என்று தவமியற்றி தன் விருப்பப்படி சிவனையே மணந்து கொண்டாள்.

அப்போது அயோத்தியை ஆண்ட சகரன் எனும் மன்னன் கேசினி, சுமதி ஆகிய இரு இளவரசிகளை மணந்தும் குழந்தைச் செல்வ



குமாரர்களானார்கள். கேசினியின் ஒரே மகனான அசமஞ்சன் மிகக் கொடியவனானான். அவனுடைய கொடுமைகளைக்கண்டு மக்கள் அவனை வெறுத்தனர். இருப்பினும் அவனுக்குப் பிறந்தவனான அம்சுமான் என்பவன் நல்லவனாக வளர்ந்தான். எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றான்.

இக்கால கட்டத்தில் சகரன் அசுவமேத யாகம் செய்யத் திட்டமிட்டான். படைகளுடன் யாகத்துக்குரிய குதிரையை பலநாடுகளுக்கும் திக்விஜயம் செய்ய அனுப்பிவைத்தான். கூடவே தனது பேரனான அம்சுமானையும் அனுப்பி யிருந்தான்.

### சகர குமாரர்களின் பரிதாப முடிவு

சகரனுடைய அசுவமேத யாகம் வெற்றியடைந்தால் தனது பதவிக்கே சவாலாகி விடும் என்று அஞ்சிய தேவர்க்கரசனான இந்திரன் யாகக் குதிரையை கொண்டு போய் ஒளித்து வைத்து விட்டான். திட்டமிட்டபடி யாகம் நிறைவேறாவிட்டால் அதனால் பெரும் தீங்கு விளையும் என்று பயந்த சகர மன்னன் தனக்கும் சுமதிக்கும் பிறந்த அரசிளங் குமாரர்களை அழைத்து, யாகக்குதிரை எங்கிருந்தாலும் கண்டு பிடித்து அழைத்துவருமாறு ஆணையிட்டான். சுமதியின் மைந்தர்கள் பூமியில் சகல இடங்களுக்கும் சென்று தேடியும் குதிரையைக் காணாமல், பூமியைத் தோண்டி பாதாள உலகம் சென்றனர். அங்கே கபிலர் தவம் செய்து கொண்டிருந்தார். அவரருகில் குதிரை நின்றது. அத்தவசியே குதிரையைத் திருடினார் என்று கருதிய அரசகுமாரர்கள் கபிலரைத் துன்புறுத்தினர். நிஷ்டை கலைந்த கபிலர் கண்திறந்ததும் அவருடைய கோபம் தீப்பிளம்பாக மாறி சகரமைந்தர்களைச் சுட்டெரித்துச் சாம்பலாக்கிவிட்டது.

பாதாளம் சென்ற தன் மகன்கள் நீண்ட காலம் திரும்பி வராதது கண்டுவருந்திய மன்னன் சகரன் ,தன் பேரனான அம்சுமானை அழைத்து பாதாளம் சென்ற அரசகுமார்களுக்கு என்ன நேர்ந்தது என்பதனை அறிந்து வருமாறு கேட்டுக்கொண்டார். அம்சுமானும் பாதாளம் சென்று, அங்கு பூமியைத்தாங்கி நிற்கும் திக்கஜங்களை வணங்கி தனக்கு உதவுமாறு வேண்ட, அவை குதிரையையும் அங்கே குவிந்து கிடந்த சாம்பல் குன்றையும் அம்சுமானுக்குக் காண்பித்தன. "உனது சித்தப்பாமார்களுக்கு கபில மாமுனிவரிட்ட தண்டனையினால் உருவானதே இச்சாம்பல் புற்று." இவ்வாறு திக்கஜங்கள் என்ற யானைகள் அம்சுமானிடன் கூறின. அப்போது அங்கு ஒரு கருடன் வந்து சேர்ந்தது. சுமதியின் சகோதரன் தான் என்று கூறிக்கொண்டது. தனது சகோதரியின் மக்களுடைய சாம்பலைத் தான் பாதுகாத்து வருவதாகவும் கங்கையின் உதவியுடன் தான் சாம்பலைக் கரைத்து பிதுர்க்கடன் நிறைவேற்ற வேண்டும் என்றும் அக்கருடன் கூறியது. கருடனை வணங்கி ஆசிபெற்ற அம்சுமான் யாகக் குதிரையில் ஏறி அயோத்தியாபுரியை வந்தடைந்து, நடந்த சம்பவங்களை சகரமன்னனிடம் கூறினான்.

தனது பிள்ளைகள் அகால மரணமடைந்தமைக்காக சகரன் மிகவும் வருந்தினான். எடுத்த பணியினை முதலில் முடித்தாக வேண்டும் என்று கருதிய மன்னன் முதலில் அசுவமேத யாகத்தை எதுவித குறையுமின்றி நிறை வேற்றினான். ஆனால் தனது புத்திரர்களுக்குரிய இறுதிக்கிரியைகளை முடிக்க தன்னால் முடியா திருக்கிறதே என்ற கவலை



மின்றி, இமயமலைச் சாரல் சென்று தவமிருந்தான். அங்கு நீண்டகாலம் தவமியற்றிய பிருகு மாமுனிவர், சகர மன்னனின் மனைவியர் இருவரும் குழந்தைச் செல்வங்களை அடைவார்கள் என்று வரமளித்தார். அதன்படி கேசனி அசமஞ்சன் என்ற மகனைப் பெற்றெடுத்தாள். சுமதிக்கு பல புத்திரர்கள் பிறந்தார்கள்.

பிள்ளைகள் வளர்ந்து அழகிய அரச சகரனை மிகவும் வாட்டியது. அதே ஏக்கத்தில் சகரன் மாண்டதும், அம்சுமான் அயோத்திக்கு அரசனானான். அதன் பின் அவன்வழி வந்த திலீபனும் தொடர்ந்து பகீரதனும் ஆட்சி பீடமேறினர்.

### பகீரதப் பிரயத்தனம்

நீண்ட நாள் ஆட்சி செய்த பகீரதனுக்கு அவனைத் தொடர்ந்து அயோத்தியின் அரியாசனம் ஏற வாரிசு இல்லை. அதுமட்டுமல்லாமல், பாதாளத்தில் சாம்பலாகக் கிடக்கும் தனது மூதாதையருக்கு உரிய முறையில் பிதுர்க்கடன் செய்ய முடியாதிருக்கிறதே என்ற வேதனையும் அவனை வாட்டியது. அமைச்சர்



களிடம் அரச பரிபாலனத்தை ஒப்படைத்து விட்டு கானகம் சென்று பிரம்மதேவனை நோக்கிக் கடும் தவமியற்றினான். இதன் பயனாக பகீரதன் முன் பிரம்மா தோன்றினார். தனக்குப் புத்திர பாக்கியமும், மூதாதையர்களுக்குரிய கிரியைகளைச் செய்ய கங்கையை பாதாளத்துக்கு அனுப்பிவைக்கவும் வேண்டும் என்று கேட்டான். பிரம்ம தேவனோ புத்திரபாக்கியத்தை மட்டும் அருளினார். தேவருலகிலுள்ள கங்கையை பூமிக்கோ பாதாளத்துக்கோ அனுப்புவது தன் கையில் இல்லை என்று கூறி, பரமசிவன் ஒருவரால் மட்டுமே கங்கையின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியும். ஆகவே சிவபிரானை நோக்கித் தவமிருக்குமாறு கூறினார். பகீரதன் மேலும் பலகாலம் மிகக் கடுமையான முறைகளை அனுசரித்து தவமிருந்தான். உரிய காலத்தில் சிவபிரான் தோன்றினார். பகீரதனுக்கு வரமும் அருளினார்.

விண்ணுலகிலிருந்து கங்கை பிரவகித்து மிக வேகமாகப் பாய்ந்து வந்தாள். கங்கை வந்த வேகம் மிக மிகக் கடூரமாக விருந்தது. பூவுலகம், பாதாள உலகம் ஆகியவற்றை ஒரே வீச்சில் அழித்தொழித்து விடக்கூடியதாக விருந்தது அவளுடைய வேகம். ஆகவே உமா பதியான சிவபிரான் தனது சடாமுடியில் கங்கையைத் தாங்கினார். கங்கையின் கர்வம் அடங்கியது. மீண்டும் பகீரதன் வேண்ட, அளவாக கங்கை பாய்ந்து பாதாளம் செல்ல சிவபிரான் அனுமதி அளித்தார். பாதாளம் சென்ற கங்கை சகரகுமாரர்களின் அஸ்தியை தன்னுள் ஏற்று அவர்களுக்கு முக்தி அளித்தாள். பின்னர் பூவுலகில் புகுந்த கங்கை பெருநதியாகப் பிரவகித்து, பகீரதனின் கோரிக்கைப்படி பாரத நாட்டை வளப்படுத்தியதுடன் புனித நதியாக மாநிடர்களின் பாவங்களைக்கழுவிக் கடைத்தேற்றும் கைங்கர்யத்தைத் தொடர்ந்து செய்து வருகிறாள்.

இவ்வாறு கங்கை பிறந்த கதையினை இராம இலக்குவனுக்கும் ஏனைய ரிஷிகளுக்கும் விசுவாமித்திரமாமுனிவர் கூறிமுடித்தார். இக்கதையினைக் கேட்டுக்கொண்டிருந்த அனைவரும் எழுந்து சென்று புனித கங்கையைப் பூஜித்தனர். சந்தியாவந்தனம் எனும் மாலை வேளைப் பிரார்த்தனையையும் முடித்துக் கொண்டனர்.

விசுவாமித்திர மகானும் குழுவினரும் அடுத்தநாள் விசால நகரத்தை அடைந்தனர். அன்றையப் பொழுதை அங்கேயே கழித்துவிட்டு அடுத்த நாட்காலை மிதிலை மாநகர் நோக்கிப் புறப்பட்டனர். இவ்வாறு செல்லும்போது ஓர் அழகிய ஆசிரமத்தை அடைந்தார்கள். மிகவும் சிறப்பான முறையில் காணப்பட்ட அந்த ஆசிரமத்தில் மக்கள் நடமாட்டமே இல்லாதிருப்பதைக் கண்டனர். இதனால் அதிசயம் மேலிட்டால், இராமன், மகரிஷி விசுவாமித்திரரை அணுகி, "குருபெருமானே, மிகவும் நேர்த்தியாகக் காணப்படும் இந்த ஆசிரமத்தில் ஆரவமே இல்லையே! இது எந்த மகானுபாவருடைய ஆசிரமம் என்பதை அறிய ஆவலாயிருக்கிறது" என்று கேட்டார்.

விசுவாமித்திரர் புன்னகை பூத்தவராக, "இராமா! இந்தப் பிரதேசம் உண்மையில் மிகவும் புனிதமான ஓரிடம் தான். ஆனால், ஆசாபாசங்களால் அல்லலுற்ற ஓர் அபலையின் வாழ்வு இங்கு சீரழிக்கப்பட்டு விட்டது. ஆனாலும் இப்பிரதேசம் மீண்டும் வனப்புமிக்கதோர் ஆசிரமமாக உருப்பெறும் வேளை இதோ வந்துவிட்டது. அந்தக் குடிசையின் அருகே ஒரு கற்பாறை தெரிகிறதல்லவா? எங்கே- அதன் அருகே போய் அக்கல்லின்மீது உன் பாதங்கள் படும்படி நிற்பாயாக" என்றார்.

(தொடர்ந்து வரும்)

---

தேவலோகத்தில் சஞ்சரித்த கங்கையை பூவுலகுக்கும் பாதாளத்துக்கும் கொண்டு வருவதற்காக பகீரத மன்னன் எடுத்துக் கொண்ட பிரயத்தனங்கள் மிகக் கடுமையானவை. இதனால் தான் நம்மில் எவராவது ஒரு காரியத்தை முடிப்பதற்கு கடும் முயற்சி எடுக்க நேர்ந்தால், 'பகீரதப் பிரயத்தனம்' என்று கூறப்படுகிறது.

---

கங்கை நதி இமயமலையில் ஊற்றெடுக்கின்றது. இமயமலைச் சிகரங்களில் மிகவும் உயரமானதாக கைலாயம் கருதப்படுகிறது. சிவபிரான் கைலாய பர்வதத்திலேயே அமர்ந்திருப்பதாக சைவப் பெருமக்கள் நம்புகின்றனர். கைலாய மலைக்கு யாத்திரை செல்லும் பக்தர்கள் கரடுமுரடானதும் செங்குத்தானதுமான பனி படர்ந்த குன்றுகளில் ஏறிச் சென்று வழிபாடு இயற்றி வருகின்றனர். இக்குன்றுகளிலும் சுற்றியுள்ள பிரசதேசங்களிலும் பிறந்த மேனியராய் பல முனிவர்கள் இருந்து இன்றும் தவமியற்றி வருவதாகக் கூறப்படுகிறது.

சிவபக்தர்கள் இக்காட்சியை மனக்கண்களின் மூலம் தரிசித்தால், பண்டைக்காலத்தில் வாழ்ந்தவர்கள் சிவபெருமானை இயற்கைக் கடவுளின் தோற்றமாக உருவகப் படுத்தியதில் உள்ள உண்மை புலப்படும்.

---

### இராமாயணப் போட்டி இல—6
### பரிசுக்குரிய அதிஷ்டசாலிகள்

சரியான விடை: ஞாமாச்சிரமம்

1. திருமதி. ராஜலிங்கம்
இல 19, செனமாகிரட் பசார், உடப்புசல்லாவ.
2. வாசன் சுரேஷ்
இல, 4, பிரதான வீதி, டிக்கோயா.
3. துவான் லக்சானா
கலகெதர ரோட், இல, 59, கடுகஸ்தொட.
4. ஜே.அப்துல் றவூப்
கிவுளகட,ஹொரவபொதான.
5. எஸ்.சுதர்சன், இல 4/5, மலபார் வீதி, கம்பளை.

---

### இராமாயணப் போட்டி 08

ஒரே ஒரு கேள்வி மட்டும். பதிலை அழகாக தபாலட்டையில் எழுதி அனுப்பினால் போதும். அதிஷ்டசாலிகளான ஐந்து பேருக்கு இலக்கிய நூல்கள்.

**கேள்வி:-** தந்தை கொடியவன் மகனோ நல்லவன். இருவரும் யார்?

டிசம்பர் 02ம் திகதிக்கு முன்பாக பதில் அனுப்ப வேண்டிய முகவரி:

இராமாயணப் போட்டி இல:08.
தினமுரசு வாரமலர்
த.பெ. இல- 1772
கொழும்பு.



படிப்பகம்

Regd. as a News Paper at the G.P.O.(PRO/7/95)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JUWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்!
அதை எங்களது வண்ண நகைகள்
மின்னிப் பேசுகின்றன.


436331

3 SEA STREET, COLOMBO 11
3 செட்டியார் தெரு, கொழும்பு 11


# என்றென்றும் அன்புடன்




அம்மன் ஜுவல்



AMMAN JUWEL

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு


332033

SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு 11


முரசென்றால் கொள்ளைப் பிரியம். அத்தனை முரசுகளையும் சேர்த்து வைத்து 'முரசு எங்கள் முத்து' என்று முறுவலிக்கும் சிறு மலர் நித்தியா நித்தியானந்தன்(பார் வீதி மட்டக்களப்பு). எல்லாவற்றையும் சேர்த்து வைத்து வளர்ந்த பின்னரும் வாசித்துப் பார்க்கப் போகிறேன் என்கிறார் நித்யா. இன்றைய செய்தி நாளைய வரலாறு. அழகுற முரசை அடுக்கி கமராவால் கிளிக் செய்தவர் வத்சலா.



# வசந்த மாளிகை



உள்ள காட்சியை அப்படியே படப்பிடிப்பு நடத்துவது மட்டும் புகைப்படக் கலைக்கு உயிரூட்டாது. புதுமையான சிந்தனையோடு காட்சிகளை சுட்டெடுக்க வேண்டும். வசந்த மாளிகை போல காட்சியளிப்பது பால்ரூம் நடனம் நடைபெறும் கலைக்கூடம். கலைக்கூடமே வெகு அழகு. அந்த அழகையும் அழகாகப் படமாக்கி, நடனமாடும் ஜோடியையும் நிழல் விழப் படமாக்கி முடிக்க படப்பிடிப்பாளர் மிஸ்டர் பறி பெரும்பாடுபட்டாராம். 1/8 செக்கனில் கமராவின் லென்சை F/2 என்னும் நிலையில் வைத்து, ஜோடியை ஸ்பொட்லைற்றின் கீழே ஆடவைத்து படம்பிடித்தாராம்.

கலைக்கு அழகு களைக்காத சிந்தனை.

இலங்கை அணி அப்போதிருந்த இக்கட்டான நிலையினை அவதானித்து அதற்கேற்றவாறு நிலமையை சமாளிக்கக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தார். இவருடன் அர்ஜுனா ரணதுங்காவும் வந்து இணைந்ததும் நிலமையில் மாற்றம் தென்படத் தொடங்கியது. இடது கை ஆட்டக்காரரான ரணதுங்காவும் துணிவுடன் ஆடினார். மே.இந்திய அணியினரின் மத்திம பேன் போலர்களான ஹமேஷ் அந்தனி மற்றும் ஒட்டிஸ் கிப்ஸன் ஆகியோரின் பந்து வீச்சுக்களுக்கு ஈடு கொடுத்தனர். நாலாவது விக்கட்டாக ஆடி 126 ஓட்டங்களைக் குவித்து அணியினை 200 ஓட்டங்களுக்கு மேலாக்கிவிட்டவர்.

மஹானாம 100 ஓட்டங்களைக் குவிக்கவே நோக்கம் கொண்டிருந்தார். ஆனால் 38 வது ஓவரில் மஹானாமவுக்கு சுளுக்கும், இடுப்பு பகுதியில் கடும் நோவும் வாட்டத் தொடங்கிவிட்டன. இருப்பினும் 50 ஓவர்களில் இலங்கை பெற்ற 234 ஓட்டங்களில் மஹானாம 101 ஓட்டங்களை எடுத்தார்.

பாகிஸ்தானுடன் இலங்கை அணி ஆடியபோது ரோஷான் மஹானாம அணியில் இடம் பெறாத தாக்கத்தினை அவதானிக்க முடிந்தது.

அடுத்ததடவை பாகிஸ்தானுடன் ஆடியபோது மஹானாம 45 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காதிருந்தார். இரு காச்சுகளையும் பிடித்தார்.

இடையில் சில காலம் சரிந்திருந்த தனது திறமையை மீண்டும் தூக்கி நிறுத்தியிருப்பது [illegible] மூலம் நம்பிக்கை நட்சத்திரமாகி [illegible] யிருக்கிறார் மஹானாம.

# பல்லில் உறுதி வேண்டும்

# இடையில் ஒரு சரிவு


இதுகாலவரை சார்ஜா கிரிக்கெட்டில் மேற்கிந்திய அணிதான் வெற்றி வாகை சூடும் அணியாகக் கருதப்பட்டது. ஆனால் காலம் மாறிவிட்டது. கிரிக்கெட்டில் இலங்கை அணிக்கு பொற்காலம் ஆரம்பமாகி விட்டது எனலாம்.

சார்ஜா ஆட்டங்களின் முதலில் இலங்கை அணி மேற்கிந்திய அணியுடன் மோதியது. தொடக்க துடுப்பாட்டக்காரர்களாக ரோஷான் மஹானாமவும் இடது கை துடுப்பாட்டக்காரரான சனத் ஜயசூரியவும் ஆடத் தொடங்கினர். இருவரும் இணைந்து 111 ஓட்டங்களைக் குவித்தனர். இதில் மஹானாம 66 ஓட்டங்களை எடுத்தார்.(103 பந்துகள், 6x4) இலங்கை அணி மொத்தம் 273 ஓட்டங்களை எடுத்தது. போட்டித்தொடரில் சிறந்த ஆட்டக்காரராக மஹானாமா தெரிவு செய்யப்பட்டார்.

சார்ஜாவில் விளையாடுவதற்கு முன்னர் பெப்ரவரி-மார்ச்சில் நியூசிலாந்தையும் பின்னர் பாகிஸ்தானையும் இலங்கை அணி தோற்கடித்தது. இதனால் இலங்கை அணி உலகிலேயே சிறந்த தோர் அணியாக வரக்கூடும் என்ற எதிர்பார்ப்புத் தோன்றியது.

சார்ஜாவில் ஆட்டம் தொடங்கிய முதல் நாளன்றே மேற்கிந்திய அணியினை இலங்கை அணி வெற்றி கண்டு விடும் என்ற கருத்து வெளிப்பட்டுவிட்டது. இதற்கு உறுதுணையாக இருந்தது மஹானாமவின் துணிகரமான ஆட்டம் தான். ஏற்கனவே பாகிஸ்தானில் மெதுவாக ஓட்டங்களை எடுத்து வந்த போது மஹானாமவின் பங்களிப்பு நம்பிக்கை அளிக்கத்தக்கதாகத் தோன்றவில்லை. ஆனால் அண்மைக்கால ஆட்டங்களை அவதானிக்கும்போது மஹானாமவின் சாதுர்யம் சர்வதேச கிரிக்கெட்டில் போதுமான அனுபவம் வாய்ந்த ஸ்திரத்தன்மையினை அவருக்கு ஏற்படுத்தித் தந்திருக்கிறது எனலாம்.

மேற்கிந்திய அணிகளுடன் மோதும் போது சனத் ஜயசூரிய, அசங்க குருசிங்க, அரவிந்தடி சில்வா ஆகியோர் ஒருவர் பின் ஒருவராக வீழ்ந்தனர். இந்தத் துடுப்பாட்டக்காரர்கள் வீழ்ச்சியடைந்ததைப்பற்றி மஹானாம கலங்கிவிடவில்லை.



இந்தியாவில் பஞ்சாப் மாநிலத்தில் ஜாட் சீக்கியர்கள் தங்கள் பலத்தையும், திறனையும் வருடம் ஒரு முறை வீர விளையாட்டு நடத்தி பரிசோதித்துப் பார்ப்பார்கள். கிராமத்து விளையாட்டு கிட்டத்தட்ட பெரும் திருவிழா போலவே நடக்கும். கயிறு கட்டிய டிராக்டரை சீக்கியர் ஒருவர் தனது பல்லால் இழுக்கிறார். டிராக்டரில் ஐந்து பேர் அமர்ந்திருந்தனர். அடுத்தவர் மீது அநாவசியமாக பலத்தைக் காட்டி பகைமை வளர்ப்பதுதான் தவறு. விளையாட்டுக்களில் பலத்தைக் காட்டுவது உடலுக்கும் உறுதி, உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி.